விலை: ரூபா 20 | பக்கங்கள் 28

பொது நூலகம்
கோண்டாவில்

# உதயன்

29°C
இடியுடன் கூடிய மழை பெய்யலாம்

சுடர் 30 | கதிர் 313 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 18, திங்கட்கிழமை 05.10.2015

நல்லாட்சி அரசு செயலிலும் நல்லதனத்தைக் காட்டுமா?

பக்கம் 16

# ஐ.நா. பரிந்துரைகள் நிறைவேற நாடாளுமன்ற அனுமதி தேவை

## வலியுறுத்துகின்றது ஜாதிக ஹெல உறுமய



கொழும்பு, ஒக்ரோபர் 5
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள அமெரிக்க தீர்மானத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து ஒப்புதல் கிடைத்தால் மட்டுமே நடைமுறைப்படுத்த முடியும் என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.
இந்த தீர்மானம் இலங்கையின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலானது. எனவே நாடாளுமன்ற ஒப்புதல் இல்லாமல் இதனை செயற்படுத்த அனுமதிக்க முடியாது

பக்.24

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஜப்பான் ஆதரவு வழங்கும்

## ரணிலிடம் உறுதியளித்தார் அந்நாட்டுப் பிரதமர்



டோக்கியோ, ஒக்.5
இலங்கைக்கு முழு ஆதரவை ஜப்பான் வழங்கும் என்று அந்த நாட்டுப் பிரதமர் சின்சோ அபே தெரிவித்துள்ளார்.
ஜப்பான் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று நடைபெற்ற முதற்கட்ட சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
ஐந்து நாள்கள் பயணமாக பிரதமர்

பக்.24

# ஜப்பான் நாடாளுமன்றில் பிரதமர் ரணில் இன்று உரை

டோக்கியோ, ஒக்.5
ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று ஜப்பான் நாடாளுமன்றத்தில் உரையாற்றவுள்ளார்.
ஜப்பானில் நேற்று நடைபெற்ற விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப மாநாட்டை முன்னிட்டு ரணில் விக்கிரமசிங்க 5 நாள் பயணமாக நேற்றுமுன்தினம் ஜப்பான் சென்றார். அங்கு பல்வேறு சந்திப்புகளை மேற்கொண்டிருந்த அவர் இன்று அந்நாட்டு நாடாளுமன்றில் உரையாற்றவுள்ளார்.
இதுவரை அந்த நாட்டு நாடாளுமன்றத்தில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகிய இரு வெளிநாட்டுத் தலைவர்களே உரையாற்றியுள்ளனர்.
அத்துடன் ஜப்பான் பிரதமருடன் இரவுப் போசனம் ஒன்றிலும் இன்று பிரதமர் ரணில் கலந்து கொள்ளவுள்ளார் என்று ஜப்பானுக்கான இலங்கைத்

பக்.24

# இலங்கை அரசுக்கு வெற்றி என்பதை ஏற்கவே முடியாது

## மகிந்த எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.5
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்த அமெரிக்காவின் தீர்மானம், வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டமை, இலங்கைக்கு கிடைத்த இராஜதந்திர வெற்றி என்ற சிலரின் கருத்தை நான் ஏற்கப் போவதில்லை.- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
அமெரிக்கத் தீர்மானத்தில்

பக்.24

## பல்கலை. அனுமதி வெட்டுப் புள்ளி இன்று வெளியாகும்

கொழும்பு, ஒக்.5
2014/2015 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் இன்று திங்கள்கிழமை மு.ப. 10 மணிக்குப் பின்னர்

பக்.24

## இலங்கையின் இராஜதந்திர இணக்கங்கள் நியூயோர்க்கில்!

கொழும்பு, ஒக்.5
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் இலங்கையின் இராஜதந்திர இணக்கங்கள் அதிகம் நியூயோர்க்கிலேயே நடந்துள்ளன. ஜெனிவா வில் பெரியளவிலான நகர்வுகள் இடம்பெறவில்லை.

*விரிவு 25ஆம் பக்கத்தில்*



# ஐ.நா. தீர்மானத்தால் நாட்டுக்குப் பேராபத்து

## எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக்.5
இலங்கை தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது நாட்டுக்கு கிடைத்த வெற்றி அல்ல. அதற்குள் பேராபத்து ஒளிந்திருக்கிறது என்று எச்சரித்துள்ளது ஜே.வி.பி.
ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று முற்பகல் பத்தரமுல்ல பெலவத்தையிலுள்ள அதன் தலைமையகத்தில் நடைபெற்றது.
இதில் கலந்துகொண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் குறித்து கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் போதே அந்தக் கட்சியின் பொதுச்செய

பக்.24

# படகு இயந்திரம் மீது மின்னல் தாக்கு: செலுத்தியவர் சம்பவ இடத்தில் சாவு

## குருநகர் கடலில் நேற்றுப் பரிதாபச் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 5
கடலில் படகு இயந்திரம் மீது (எஞ்சின்) மின்னல் தாக்கியதில் இயந்திரத்தைச் செலுத்திக் கொண்டிருந்த மீன்பிடித் தொழிலாளியான இளைஞன் அந்த இடத்திலேயே தலைவெடித்துப் பரிதாபகரமாக உயிரிழந்தார். குருநகர் முதலாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ஜசன் ஜுட் கனிஸ்ரன் (வயது-24) என்ற இளை

பக்.24

## சர்வதேச நீதிபதிகளுக்கு பிக்குகள் எதிர்ப்பு

கொழும்பு, ஒக்.5
போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைகளுக்காக சர்வதேச நீதிபதிகளை இணைத்துக் கொள்வதற்கு எதிர்ப்பு

பக்.24

## மரதன் ஓடிய மகிந்த



கொழும்பு, ஒக்.5
கொழும்பில் நேற்று நடைபெற்ற சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் கலந்துகொண்டுள்ளார். உள்ளூர் மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த

பக்.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தில் 168 பேருக்கு எதிராக வழக்குகள்

## டெங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்துகின்றனர் சுகாதாரப் பகுதியினர்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட டெங்கு ஒழிப்பு நடவடிக்கையின்போது டெங்கு நுளம்பு பெருகக் கூடியதாகத் தமது சுற்றாடலை வைத்திருந்த 168 பேருக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் தெரிவித்தனர்.

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் பல பகுதிகள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன் போது 37 ஆயிரத்து 70 இடங்கள் டெங்கு பரிசோதனைக்கு உட்படுத்தப்படத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் அவற்றில் 32 ஆயிர்த்து 999 இடங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

பரிசோதனையின்போது டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு சாத்தியமான நிலையில் 11 ஆயிரத்து 217 இடங்கள் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி நுளம்புக் குடம்பிகளுடன் 371 இடங்களும் இனங்காணப்பட்டுள்ளன. அவ்வாறான இடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு இனங்காணப்பட்ட இடங்களுள் 6 ஆயிரத்து 701 இடங்கள் உடனடியாக சுத்தம் செய்யப்பட்டுள்ளன.


கோப்புப்படம்

டெங்கு நுளம்பு பெருகும் நிலையில் காணப்பட்ட வீடுகளில், கடைகள், பொது இடங்கள் என 2 ஆயிரத்து 796 இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடுப்பதற்கான முன் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் உரிய இடங்களை உரிய நாள்களில் சீர்செய்யத் தவறின் அவர்களுக்கு எவ்வித மன்னிப்பும் இன்றி நீதிமன்றங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

டெங்கு பரிசோதனையின்போது அதிகளவில் வீடுகளே பரிசோதிக்கப்பட்டன. 30 ஆயிரத்து 699 வீடுகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் நுளம்பு பெருகும் இடங்களாக 10 ஆயிரத்து 500 இடங்கள் கண்டறியப்பட்டன. குடம்பிகளுடன் 346 வீடுகள் காணப்பட்டுள்ளன. 2 ஆயிரத்து 607 வீடுகளுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 140 வீடுகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே 189 பாடசாலைகளும் பரிசோதிக்கப்பட்டன. 89 பாடசாலைகளில் டெங்கு பரவும் இடங்கள் அடையாளம் காணப்பட்டன. 9 பாடசாலைகளுக்கு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

பரிசோதனையின்போது 118 தனியார் கல்வி நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் நுளம்பு பரவும் வகையிலிருந்த 37 இடங்கள் கண்டறியப்பட்டன. 10 நிறுவனங்களுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 5 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

262 அரச நிறுவனங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. 61 அரச நிறுவனங்கள் டெங்கு பரவும் நிலையில் இருந்துள்ளன. 6 அரச நிறுவனங்களுக்கு எதிராக எச்சரிக்கைக அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 3 அரச நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன.

758 தனியார் நிறுவனங்களும் பரிசோதிக்கப்பட்டுள்ளன. 213 இடங்கள் டெங்கு பரவும் நிலையில் காணப்பட்டுள்ளன. 14 இடங்களில் டெங்குக் குடம்பி காணப்பட்டுள்ளன. 51 நிறுவனங்களுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 8.நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

129 தொழிற்சாலைகள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் 7 தொழிற்சாலைகளுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 2 தொழிற்சாலைகளுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. கட்டட நிர்மாணத் தளங்களையுடைய 229 இடங்கள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் நுளம்பு பெருகும் வகையில் 102 இடங்கள் கண்டறியப்பட்டன. 3 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. 40 நிறுவனங்களுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. 4 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

பொது இடங்களாக 615 இடங்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளன. அவற்றில் டெங்கு பரவும் வகையில் 211 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. 7 இடங்களில் நுளம்புக் குடம்பி பரவும் வகையில் சுற்றாடல் காணப்பட்டுள்ளது. 66 இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளன. 6 இடங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

இது தவிர சனத்தொகை அதிகம் உள்ள, யாழ்.மாநகர சபைப் பகுதியில் நுளம்பு ஒழிப்பு வாரத்தின் போது, 5 ஆயிரத்து 449 வீடுகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, போதிய சுகாதார வசதியின்றி டெங்கு தாக்கத்துக்கு வழிசமைத்த 54 குடியிருப்பாளர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. டெங்கு பரவும் தாக்கம் கூடுதலாக காணப்பட்ட நல்லூர், வண்ணார்பண்ணை, நாவாந்துறை, குருநகர் போன்ற பகுதிகளில் மட்டுமே இந்த நுளம்பு ஒழிப்பு வாரத்துக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் இடம்பெற் றன.

நல்லூரில் டெங்கு தாக்கத்துக்கு வழிசமைத்த 16 குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும், நாவாந்துறையில் 9 குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும், குருநகரில் 9 குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும், வண்ணார் பண்ணையில் 20 குடியிருப்பாளர்களுக்கு எதிராகவும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன.

தவிர சுற்றாடல், போதிய சுகாதார வசதி இன்றி நுளம்புப் பெருக்கத்துக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு, சுகாதாரத்தை எவ்வாறு பின்பற்றுவது தொடர்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. அந்தப் பகுதிகளில் தேங்கிக் கிடந்த கழிவுப் பொருள்களும் அகற்றப்பட்டன. வடிகால், வாய்க்கால் மற்றும் கழிவு நீர் ஓடும் வாய்க்கால் என்பனவும் மாநகர சபைச் சுத்திகரிப்பு பணியாளர்களால் துப்புரவு செய்யப்பட்டன என்று மாநகர சபை சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு பரவுவதற்கான சந்தர்ப்பமும் சூழலும் அதிகமுள்ளன. எனவே அவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டியது பொதுமக்கள் ஒவ்வொருவரதும் கடமை. அவ்வாறே தத்தமது பிள்ளைகளையும் டெங்கிலிருந்து பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு பெற்றோருக்கும் உள்ளது. மழை காலம் தொற்று அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதில் தம்மையும் தமது குடும்பத்தவர்களையும் உரிய அக்கறையுடன் கவனித்துக் கொள்ளுமாறும் சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர். (ற-4,10,17)

# வடக்கு, கிழக்கில் 1,37,529 வீடுகள் தேவை

கொழும்பு, ஒக்.5

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போர் காரணமாக இடம்பெயர்ந்து தற்போது தமது சொந்த இடங்களில் மீள்குடியமரும் மக்களுக்கு ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 529 வீடுகள் தேவைப்படுகின்றன என்று அந்தந்தப் பிரதேச செயலகத் தரவுகள் மூலம் தெரியவருகின்றது. இடம்பெயர்ந்த மக்களின் வீடுகள் பெரும்பாலும் அழிவடைந்துள்ள நிலையில் தற்போது அவர்கள் வீடுகளை அமைத்துக் குடியம ரும் நிலை ஏற்பட்டுள்ளது.



போர் காரணமாக 2009 ஆம் ஆண்டில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வவு னியா செட்டிக்குளத்தில் உள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்தனர்.

இரண்டாண்டுகள் வரையிலான காலத்துக்கு இடையிலான காலகட்டங்களில் அந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தும் நடவடிக்கைகள் இடம்பெற்றன. அவ்விதம் மீளக்குடியமர்வு இடம்பெற்றிருந்த போதிலும் இன்றளவிலும் கூட நிரந்தர வீடுகள் கிடைக்கப்பெறாத மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் அனைத்துமே முடங்கிப் போயுள்ளன. அதுவும் மழைக்காலம் ஆரம்பித்திருப்பதால் அவர்களால் தற்காலிக வீடுகளுக்குள் வசிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கிலுள்ள மக்களுக்காக இந்திய அரசால்கட்டிக்கொடுக்கப்படும் 60 ஆயிரம் வீடுகள் என்ற செயற்றிட்டத் தின் கீழ் வடக்கு, கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்கு கணிசமான வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் மேலுமொரு கட்டமாக அடுத்த ஆண் டில் 45 ஆயிரம் வீடுகளை வடக்குக் கிழக்கில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களுக்காகக் கட்டிக் கொடுக்கும் நடவடிக்கைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்று மீளக் குடியமர்த் தல்கள் அமைச்சு தெரிவிக்கிறது. (ற-22)

# தெரு ரவுடிகளாக சுற்றித் திரிந்த 98 பேருக்கு எதிராக வழக்கு

## சுமார் இரண்டரை லட்சம் அபராதம் விதித்தது யாழ்.நீதிமன்று

யாழ்ப்பாணம், ஒக். 5

தெரு ரவுடிகளாகவும், காவாலிகளாகவும் சுற்றித்திரிந்த – பொது இடங்களில் மது அருந்திப் பொறுக்கித் தனத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் மாத்திரம் 98 பேருக்கு எதிராக பொலிஸாரால் யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு 2 லட்சத்து 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்று.

யாழ்.பொலிஸ் பிரிவு மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளனர். பொலிஸ் நிலைய துர்நடத்தைத் தடுப்புப் பிரிவினர் அவர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக வழக்கும் தொடர்ந்தனர்.

நீதிமன்றில் அந்த வழக்குகள் விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபர்கள் தம்மீதான குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர். அதனையடுத்து அவர்களுக்குத் தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும், காவாலித்தனம் புரியும், ரவுடித் தனத்தில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்து நீதிமன்றங்கள் ஊடாகத் தண்டிக்குமாறு யாழ்.மேல் நீதிமன்று அறிவித்திருந்தது. அதையடுத்து பொலிஸார் கைது செய்யும் படலத்தை ஆரம்பித்து 98 பேரையும் கைது செய்துள்ளனர். (ற-4,103)

# உடுப்பிட்டியில் வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.5



உடுப்பிட்டிப் பகுதியில் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட தனியார் காணி ஒன்றில் இருந்து நேற்று முன்தினம் இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்றும் அங்கிருந்து ஒரு தொகுதி வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த காணியின் மலசலகூடக் குழியை நேற்று முன்தினம் துப்புரவு செய்த போதே குறித்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதையடுத்து பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் வெடிபொருள்களை மீட்டனர்.

14 கைக்குண்டுகள், 4 கிளைமோர்கள் மற்றும் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. குறித்த காணி 2012ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்தது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலி உண்ணும் ஆடு...!




*நகர்ப்புறங்களில் புற்களைக் காண்பது அரிதான ஒன்றாகவே இருக்கின்றது. அதனால் நகர்புற ஆடுகள், மாடுகள் புற்களுக்குப் பதில் விளம்பர சுவரொட்டிகள் என்பவற்றை உண்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளன.* (ற-101)

# நியமனங்களில் முறைகேடுகள்

## சாடுகின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடமாகாணத்தில் அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர் நியமனங்களில் மிகப் பெரிய முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்துள்ள இலங்கை ஆசிரியர் சங்கம், அதிபர் நியமனங்களின் போது அதிகாரிகளும், வடமாகாண அரசியல்வாதிகளும் தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு அதிபர் தரத்தில் தகுதியான தரம் இல்லாத போதிலும் தகுதியற்றவர்களை தரம் 1 பாடசாலைகளுக்கும், தகுதியான தரம் உடையவர்களை தரம் குறைந்த பாடசாலைகளுக்கும் இடமாற்றம் வழங்கி மிகவும் பெரிய அநீதியை இழைத்துவருகின்றனர் என்றும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கை மனித உரிமைக்குழுவின் பரிந்துரைகளையும் அதிகாரிகள் மதிக்காத தன்மைகள் காணப்படுகின்றன. இதுவரை காலமும் முன்னைய ஆளுநரால் தமது ஜனநாயம் பறிக்கப்படுகின்றது என எதிர்ப்பை வெளிப்படுத்தி நின்ற வடக்கு மாகாணசபை இன்று, பெரிய அநீதிகள் அதிபர், ஆசிரியர்களுக்கு நடைபெறுகின்றபோது கண்டு கொள்ளாமல் இருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. – என்றும் அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் வடமாகாண செயலாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையான வவு/பாரதிபுரம் பாரதி வித்தியாலயத்துக்கு அதிபர் வெற்றிடமாயிருந்த நிலையில், அதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பத்திரிகைகள் வாயிலாக கோரப்பட்டிருந்தன. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 02.10.2015 எனக் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் 01.10.2015 அன்று அப்பாடசாலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பலர் விண்ணப்பித்திருந்தும், எவ்விதமான நேர்முகத் தேர்வுகளும் பின்பற்றப்படாமல், விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாகவே அதிபரை நியமித்தமையானது வடமாகாணத்தில் கல்வித்துறையில் நிலவும் நிர்வாகசீர்கேட்டையே எடுத்துக்காட்டுகின்றது என்று அந்தச் சங்கம் அதில் சுட்டிக்காட்டியுள்ளது.

அதிகாரங்கள் தங்களிடம் தான் உள்ளது என்னும் மமதையில் அதிகாரிகளும், அரசியல் வாதிகளும் தாம் எடுக்கும் முடிவுகளை பக்கச் சார்பாக மேற்கொள்வதால் அதிபர்களும், ஆசிரியர்களும் தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். இந்த நிலை வடமாகாணத்தின் கல்விப் பரப்பில் முன்னேற்றத்தைக் காண்பதற்குப் பெரும் தடையாகவே இருக்கும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:-

ஆசிரியர்களும், அதிபர்களும் தாம் தகுதியான நிலையிலும் பாதிக்கப்படும்போது அவர்களின் மனநிலையை சற்றும் விளங்கிக் கொள்ள முடியாத அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் கல்விப் புலத்தில் எதனைச் சாதிக்கப்போகிறார்கள்? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

அத்துடன் வடமராட்சி, யாழ்ப்பாணம், வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளிலும் அதிபர், பிரதிஅதிபர் நியமனங்களில் பெரும் முறைகேடுகள் நடைபெறுகின்றன. வடமராட்சி வலயத்தில் சாதியமுறையை அடிப்படையாகக் கொண்டும் பல ஆசிரியர்கள், அதிபர்களுக்கு கிடைக்க வேண்டிய பதவியுயர்வுகள் தடுக்கப்படுகின்றன எனப் பல முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன. இது மிகப் பெரும் அநீதியாகும். இது தொடர்பாக அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எவ்வித முன்னேற்றமும் இல்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயமும் வழங்கப்படவில்லை. உயர் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சாதாரண ஆசிரியர் மற்றும் அதிபர்களில் அக்கறைகொண்டவர்கள் அல்ல என்பதும், அதிகாரிகளையே காப்பாற்ற எத்தனிக்கிறார்கள் என்பதையும் இதன்மூலம் நன்கு விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

வடமாகாணத்தின் பாடசாலைகளில் பிரதி மற்றும் உப அதிபர் நியமனங்களிலும், மிகப் பெரும் முறைகேடுகள் நடைபெற்று வருகின்றன. பிரதிஅதிபர், உதவி அதிபர் நியமனங்கள் தொடர்பாக 2000/4 சுற்று நிருபம் இருந்தும் தகுதியான ஆசிரியர்களை தவிர்த்து அதிகாரிகளின் துணையுடன் அதிபர்களும் தனக்கு விரும்பியவர்களை இந்தப் பதவிக்கு நியமித்து வருகின்றனர். இத்தகைய செயற்பாடு தகுதியான ஆசிரியர்களுக்கு செய்யும் மிகப்பெரிய அநீதி என்பதுடன் ஆசிரியர்களின் நீண்ட கால அர்ப்பணிப்பான சேவையைக் கொச்சைப்படுத்தும் செயற்பாடுமாகும்.

**இத்தகைய செயற்பாடு தகுதியான ஆசிரியர்களுக்கு செய்யும் மிகப் பெரிய அநீதி என்பதுடன் ஆசிரியர்களின் நீண்ட கால அர்ப்பணிப்பான சேவையைக் கொச்சைப்படுத்தும் செயற்பாடுமாகும்.**

அதிபர்களால் நியமிக்கப்படும் பிரதி, உதவி அதிபர் தொடர்பான தெரிவு வலயக் கல்விப் பணிப்பாளரின் பரிந்துரையுடனேயே இறுதி அனுமதி வழங்கப்படும். ஆனால் அவர்கள் ஒருபோதும் ஆசிரியர்கள் எவரேனும் பாதிக்கப்பட்டுள்ளார்களா? என்பதை தீர விசாரிப்பதில்லை. மாறாக மாணவர்களின் அடைவு மட்டம் தொடர்பாக ஆசிரியர்களில் மட்டும் பிழை பிடிப்பதையும், இட மாற்றம் வழங்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். இத்தகைய செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

வடமாகாணத்தில் ஆசிரியர்கள் அச்சுறுத்தல் இன்றி சுதந்திரமாக பணியாற்றக்கூடிய சூழல் உருவாக்கப்படவேண்டும். கிடைக்கப்பட வேண்டிய பதவிஉயர்வுகள் நியாயமாக வழங்கப்படவேண்டும். இல்லையேல் முறைகேடுகளுக்கு எதிராக தொழிற்சங்க ரீதியான போராட்டத்தை முன்னெடுப்போம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். – என்றுள்ளது.

(ற-4)

## கல்விப்புலத் தளர்வை நீக்க கல்வியியலாளர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஒக். 5
வடமாகாணத்தில் பாடசாலை கல்விப் புலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தளர்வுப் போக்கை நீக்கவும் ஆலோசனை வழங்கவும் பாடசாலை கல்விப் புலத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்களின் பங்களிப்புடன் சிரேஷ்ட பாடசாலை கல்வியலாளர் ஒன்றியம் உருவாக்கப்பட்டுள்ளது.

வடமாகான கல்விப்புலத்தை வலுப்படுத்தி வழிப்படுத்துவதை நோக்கமாகக்கொண்டு வடமாகாண அதிபர் சங்கம், கல்வி மேம்பாட்டு பேரவை, யாழ்.மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுசங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடையே யாழ்.ரில்கோ விடுதியில் இடம்பெற்ற சந்திப்பின் போது மேற்படி ஒன்றியம் உருவாக்கப்பட்டது.

இந்த ஒன்றியத்தின் தலைவராக வடமாகான ஓய்வுநிலைக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், செயலாளராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் எஸ்.சிவநேஸ்வரனும், உபதலைவர்களாக ஓய்வு பெற்ற மேலதிக மாகான கல்விப்பணிப்பாளர் க.சிவராசா, வலிகாமம் வலய ஓய்வுநிலை கல்விப்பணிப்பாளர் திருமதி ரெஜீனா இருதயநாதன், உபசெயலாளராக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் ஓய்வு நிலை அதிபர் எஸ்.சேதுராஜாவும், பொருளாளராக பிரதிக் கல்விப்பணிப்பாளர் பொ. அருணகிரிநாதனும், பத்திராதிபராக விக்ரோறியாக் கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.ஶ்ரீகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வடமாகாண அதிபர் சங்கம் கல்வி மேம்பாட்டு பேரவை, யாழ்.மாவட்ட பாடசாலை விளையாட்டு சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரை பதவி வழி செயற்குழு உறுப்பினர்களாகவும் சிரேஷ்ட பாடசாலை கல்வியியலாளர்கள் 25 பேரை கொண்ட வகையில் செயற்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஒன்றியத்தின் நோக்கம், பாடசாலை கல்விப்புலத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தளர்வுப் போக்கை நீக்கி மாணவர் ஒழுக்கத்துக்கு முதன்மை கொடுத்து பாடசாலை அதிபர்களை வலுப்படுத்துவதுடன் கல்விச் செயற்பாடுகளை வலுப்படுத்தி முன்னைய யாழ்ப்பாணப் பாரம்பரிய செயற்பாடுகளுடன் கல்விப் பாரம்பரியத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவதே என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-4)

## நெல் விதைப்புக்கான பணிகள் யாழ். மாவட்டத்தில் தயார் நிலையில்

### கமநல சேவைகள் நிலைய பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5
யாழ். மாவட்டத்தில் மழை காலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து, நெல் விதைப்புக்கான அனைத்துப் பணிகளும் தயார் நிலையிலுள்ளது என்று கமநல சேவைகள் நிலைய பொறுப்பதிகாரி நிஷாந்தன் தெரிவித்தார்.

தற்பொழுது பெய்த திடீர் மழையால் உழுவதற்கு ஏற்ற நிலையில் மண் உள்ளது. அதையடுத்து கமநல சேவைகள் நிலையத்தில் விதை நெல் விநோயோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டிஜி406 நெல்லினம் ஒரு புசல் ஆயிரத்து 450 ரூபாவுக்கு. விநியோகிக்கப்படுகிறது. மானிய உர விநியோகமும் ஆரம்பமாகியுள்ளது. தீவுப்பகுதிகளில் இன்னமும் விதைப்புகள் ஆரம்பிக்கப்படவில்லை. யாழ் மாவட்டத்தில் மழையை நம்பி நெற்பயிர் செய்கை இடம் பெறுவதால் விளைநிலப்பரப்பு பற்றிய துல்லியமான தகவல்கள் கிடைக்கப்பெற வில்லை. – என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சென்ற வருட விளைச்சல் தொடர்பில் , யாழ் மாகாண விவசாய திணைக்களத்தின் விவசாய பணிப்பாளர் ஶ்ரீ பாலசுந்தரம் கூறியதாவது:-

யாழில் 60 சதவீதமானோர் சுய தேவைக்காகவே நெற் செய்கையில் ஈடுபடுகின்றனர். இங்கு மழையை நம்பியே நெற்பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. மேட்டு நிலப்பரப்பாக இருப்பதால் முழு நேர விவசாயமாக மரக்கறிகள் பயிரிடப்படுகின்றன. பகுதி நேர விவசாயமாக நெற்பயிர்ச் செய்கை காணப்படுகின்றது.

பசளை முகாமைத்துவம், மட்டுப்படுத்தப்பட்ட நீர் வளம், அதிகமான கூலி, உற்பத்தி செலவு அதிகம் போன்ற காரணங்களால் யாழ். மாவட்ட நெல் உற்பத்தி வெளி மாவட்ட நெல் உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. யாழ். மாவட்டத்தின் நெல் விளைச்சல், யாழில் 2 மாதத்துக்கு மட்டுமே போதுமானது. எமது தேவைக்காக வெளி மாவட்டங்களில் இருந்தே கொள்வனவு செய்கிறோம். – என்றார்.

(ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**விழிப்புணர்வு செயற்பாடு**

*மட்டக்களப்பு, பாசிக்குடா வீதியில் அண்மைக்காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளதை அடுத்து கல்குடா போக்குவரத்துப் பொலிஸார் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு பயிற்சி நிகழ்வுகளை நடத்தினர். வீதியில் எவ்வாறு போக்குவரத்துச் செய்வது என்பது தொடர்பான பயிற்சியும் விளக்கமும் பாசிக்குடா வீதியில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. விளக்கங்களை செய்கை முறை மூலம் மாணவர்களையும் உள்வாங்கி விளக்கம் அளித்தனர் பொலிஸார். வாரத்தில் ஒருநாள் இந்தச் செயற்பாடுகள் நடத்தப்படும் என்று கல்குடா பொலிஸார் தெரிவித்தனர். (ற-10)*

# சிறுவர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஊர்வலம்

## நேற்று மன்னாரில் நடத்தப்பட்டது

மன்னார், ஒக்.5

ஆபத்துக்களில் இருந்து சிறுவர்களை பாதுக்கும் வகையில் மக்களுக்கும் பெற்றோர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பொலிஸாரால் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுக் காலை மன்னாரில் நடைபெற்றது.

மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி அஜந்த ரொட்ரிகோ தலைமையில் மன்னார் நீதிமன்ற பிரதான வீதியில் மு.ப. 10.30 மணியளவில் குறித்த விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமானது.

குறித்த ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் சிறுவர்களை ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும், சிறுவர்களுக்கு எவ்வாறான வகையில் ஆபத்துக்கள் ஏற்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் வகையிலான பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைளை ஏந்தியிருந் தனர்.

மன்னார் நீதிமன்ற வீதியில் ஆரம்பமான குறித்த ஊர்வலம் மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

குறித்த ஊர்வலத்தில் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி அஜந்த ரொட்ரிகோ:-



சிறுவர்களுக்கு பல்வேறு விதமாக உயிர் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர்.

இவை தொடர்பில் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். -என்றுதெரிவித்தார்.

குறித்த ஊர்வலத்தில் மன்னார் வீதிப்போக்குவரத்துப்பிரிவு பொறுப்பதிகாரி குணசேகர, மாவட்ட வீதிப் போக்குவரத்து பொறுப்பதிகாரி சேனக்க,மன்னார் பொலிஸ் நிலைய சிவில் பாதுகாப்புப்பிரிவு பொறுப்பதிகாரி அபேய விக்கிரம ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.(ற-56)

# பட்டப்பகலில் கதவுடைத்து சுன்னாகத்தில் திருட்டு

வலி.வடக்கு, ஒக்.5

பட்டப்பகலில் வீட்டின் முன்கதவை உடைத்து நுழைந்த திருடர்கள் சுமார் நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் மற்றும் பத்தாயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

சுன்னாகம் பழைய பொலிஸ் நிலைய வீதியில் தனிமையாக வசித்து வரும் இளம் பெண் ஒருவரின் வீட்டில் இந்தத் திருட்டு நடந்துள்ளது.

குறிப்பிட்ட பெண் தையல் வேலைக்கு செல்வது வழமையாகும். இதனை அவதானித்த திருடர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டு இருக்கலாம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

குறிப்பிட்ட திருட்டு சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.சோக்கோ பொலிஸார்கைவிரல்அடையாளங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

(ற-86)

# அடாவடி தொடர்பில் உடன் அறிவியுங்கள்

## வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

வவுனியா, ஒக்.5

வவுனியாவில் சமூக விரோதச் செயல்கள், ரவுடிகளின் அடாவடி தொடர்பில் எமக்கு உடன் அறிவியுங்கள் என்று தெரிவித்தார் வவுனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர். அதற்கென அவர் தொலைபேசி இலக்கங்களையும் அறிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற வவுனியா பிரதேச செயலக சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் தொடர்ச்சியாக இளைஞர் குழுக்களுக்கிடையில் சண்டைகள், அடாவடிகள் இடம்பெறுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டது. அந்தப் பகுதிகளில் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை பொலிஸாரின் விசேட ரோந்து நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் பொது அமைப் புக்களால் கோரிக்கை விடப்பட்டது.

அதையடுத்தே வவுனியாவில் புதிதாக பதவி ஏற்றுள்ள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க லொக்குஹெட்டி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வவுனியா நகரசபைக்குட்பட்ட வைரவப்புளியங்குளம் மற்றும் குருமன்காடு போன்ற பகுதிகளில் தனியார் கல்வி நிலையங்கள் அதிகமாக உள்ளது. அதனால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி மாலை 5 மணிக்கு பொலிஸ் ரோந்து மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன்.

அத்துடன் சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் உடன் கைது செய்யப்படுவார்கள். பொது மக்கள் சமூக விரோதச் செயல்கள் மற்றும் ரவுடித்தனங்கள் தொடர்பாக 024-222 2226, 024-222 2223, 024-2222224, 024-222 2222 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு உடன் தெரிவியுங்கள்.-என்றார்.

(ற-402)

# திக்கோடையில் காட்டு யானை அட்டகாசம்

மட்டக்களப்பு, ஒக்.5

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திக்கோடை 50 வீட்டுத்திட்டத்தில் காட்டுயானைகள் அட்டகாசம் செய்துள்ளன. யானைகளால் வீடொன்று முற்றாக சேதமாக்கப்பட்டுள்ளதுடன், மரவள்ளி தோட்டமொன்றும் நாசமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இதே கிராமத்தில் ஒருவர் காட்டு யானைகளின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார். இதுகுறித்து அதிகாரிகள் அசமந்தப்போக்காக செயற்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இந்தச் செயற்பாடுகள் குறித்து உரிய அதிகாரிகள் கவ[illegible] எடுக்காமை கவலையளிக்கின்றது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-10)

# சட்டவிரோத மான், மரை இறைச்சி சிக்கியது

மன்னார், ஒக்.5

சட்டவிரோதமான முறையில் வேட்டையாடப்பட்ட 175 கிலோ கிராமுக்கு அதிகமான மான் மற்றும் மரை இறைச்சியை மட்டக்களப்பு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள சுற்று வட்ட அதிகாரிகள் நேற்றுமுன்தினம் இரவு கைப்பற்றியுள்ளனர்.

இவை ஏறாவூர் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டிடத் தொகுதியில் பொதி செய்யப்பட்டும், பொதி செய்வதற்குத் தயாரான நிலையிலும் குளிரூட்டியில் வைக்கப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், மான் இறைச்சியை பொதியிடுவதில் ஈடுபட்டிருந்த 4 நபர்களையும் கைது செய்துள்ளனர்.

(ற)

# வில்பத்துச் சரணாலயத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ்.

## கூறுகின்றது சிங்கள ராவய

கொழும்பு, ஒக் 5

ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் சிலர் வில்பத்து சரணாலயத்தில் வீடுகளை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிங்கள ராவய அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இதேவேளை, உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் அவ்வமைப்புக்கு எதிராக ரஷ்யா தாக்குதல் நடத்துவதை தாங்கள் வரவேற்பதாகவும் சிங்கள ராவய அமைப்பு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் திட்டத்தை வரவேற்று கொழும்பில் அமைந் துள்ள ரஷ்ய தூதரகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மனு ஒன்றைக் கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சிரியாவில் நிலைகொண்டிருக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளுக்கு எதிரான போராட்டத்தில் மேற்கத்தேய நாடுகளுடன் ரஷ்யா இணைந்திருப்பது தொடர்பில் எங்களது வரவேற்பை ரஷ்ய தூதுவரை சந்தித்துத் தெரிவித்துக் கொண்டோம்.

ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழு இன்று சிரியாவுக்கு மட்டுமன்றி, முழு உலகத்திற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. குறிப்பாக, இலங்கையில் இதன் ஊடுருவல் அதிகரித்து வருகின்றது. நாங்கள் இதனைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளோம்.

அண்மையில் அமெரிக்கத் தூதரகத்துக்கும் மனு ஒன்றின்மூலம் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இலங்கையர்கள் பலர் தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்புவைத்துள்ளனர். இலங்கையிலும் அதன் செயற்பாடுகளை முன்னெடுத்தும் வருகின்றனர்.

அண்மையில், கலேவல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் சிரியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழுவில் இணைந்து போரிட்டு உயிரிழந்தமை மற்றும் அளுத்கம, தர்ஹா நகரில் இடம்பெற்ற கலவரம் என்பன அதற்கான சிறந்த உதாரணங்களாகும்.

புத்தளம் வண்ணாத்திவில்லு, வில்பத்து சரணாலயம் ஆகிய பகுதிகளில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் தலைமையில் பெரிய காடழிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இதனைத் தடுக்கும் முயற்சியில் எமது அமைப்பினரில் சிலர் வில்பத்துவுக்குச் சென்றபோது அங்கு முஸ்லிம்கள் எனக் கூறிக்கொண்டு சிலர் வந்தனர். ஆனால், அவர்கள் தமிழ்மொழியிலோ, ஆங்கில மொழியிலோ அல்லது சிங்கள மொழியிலோ, அரபிமொழியிலோ அல்லாமல் வேறு மொழிகளிலேயே உரை யாடினார்கள்.

இவ்வாறு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக்குழுவைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் பல பகுதிகளிலும், வில்பத்து சரணாலயத்திலும் வீடுகளை அமைத்துக்கொண்டு அதனைக் கிராமங்களாக மாற்றி யமைக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றனர். இதனைப் புலனாய்வுப் பிரிவு மற்றும் அரசு கவனத்திற்கொண்டு உடன் தடுக்கவேண்டும்- என்றார்.

(த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பண்பாட்டுப் பெருமையை அனைவரும் காப்பாற்ற வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக். 5

தமிழினத்தின் கலாசார பண்பாட்டு அடையாளங்களில் ஒன்றான மாட்டு வண்டி சவாரிப்போட்டி நடத்தப்படுவருவதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஒரு இனத்தின் பண்பாட்டுப் பெருமையைக் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உணர்வுடைய அனைவரும் இத்தகைய செயற்பாடுகளுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க முன்வருவார்கள் என்று நம்புகிறேன். – இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மன்னார், கறுக்காக்குளம் சவாரித் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாட்டு வண்டிச் சவாரிப் போட்டியில் பிரதம விருந்தினரா கக் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சுமார் 70 வண்டிச்சவாரிகள் இன்று (நேற்றுமுன்தினம்) நடைபெறவுள்ளன என்று அறிகின்றேன். இந்தப் போட்டிகளை நடத்துவதற்குச் செயற்பட்ட அனைவருக்கும், இந்தப் போட்டிகளில் பங்குபற்றுபவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒவ்வொரு வகையான பண்பாட்டுப் போட்டிகளிலும் மரபுகள், ஒழுங்கு விதிகள் காணப்படுகின்றன. அத்தகைய மரபுகளையும் விதிகளையும் செவ்வனே கடைப்பிடித்து போட்டிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் முன்னைய காலங்களிலே வண்டிச்சவாரிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இதற்கு சான்றாக இன்றும் சவாரித்திடல்கள் உள்ளன. சவாரி மாடுகளை வளர்த்தல், விற்றல் என்பன சமூக அந்தஸ்துமிக்க தொழிலாகக் கருதப்பட்டு இருந்திருக்கின்றது. காலப்போக்கிலே அரசியல், பொருளாதார, காலநிலை மாற்றத்தால் சவாரிப்போட்டிகளின் மதிப்புத்தன்மை குறையத் தொடங்கிவிட்டது. ஆரம்பகாலத்திலே ஆளணி உள்ளவர்களும் பணம், பொருள் உள்ளவர்களுமே சவாரி செய்வதற்கு தகுதி உடையவர்களாகக் காணப்பட்டனர். தற்போது அந்நிலை ஓரளவு குறைவடைந்துள்ளது எனலாம். தற்போது சவாரிச்சங்கங்கள் காணப்படுகின்றன. இந்தப் போட்டிகளை அழிவடையாது காப்பாற்றும் நிறுவனங்களே இவை.

முன்னைய காலத்திலே தமிழ் மக்கள் ஆண்மகனின் வீரத்தை அடையாளப்படுத்துவதற்கு காளை அடக்குதல் என்ற வீரவிளையாட்டை கடைப்பிடித்தனர். தற்போது அவ்வாறான செயற்பாடுகள் தமிழகத்திலே சில இடங்களில் மட்டுமே காணப்படுகின்றன. ஆபத்துக்கருதி அப்பேர்ப்பட்ட நிகழ்வுகளைச் சட்டம் தற்போது தடைசெய்து வருகின்றது.

சுமார் 72 வருடங்களுக்கு முன்னர், இரண்டாவது உலகப் போர் முடிவடைந்திருந்த காலம். இலங்கையில் பிரித்தானிய இராணுவ வீரர்கள் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தார்கள். அப்பொழுது நாங்கள் பிரித்தானியரால் ஆளப்பட்டு வந்தோம். இந்தச் சம்பவம் குருநாகலையில் நடந்தது. பாலகனான என்னை என் தகப்பனார் வழிநடத்திக் கொண்டு என் வீட்டில் இருந்து சிறுதூரத்தில் இருந்த ஒரு இடத்துக்குச் அழைத்துச் சென்று கொண்டிருந்தார். கிட்டடியில் மாட்டு வண்டிச் சவாரி நடந்திருக்க வேண்டும். ஒரு மாடு செல்ல வேண்டிய பாதையை விட்டு விட்டு தெருவில் ஓடத் தொடங்கியது. மாட்டு வண்டிலை ஓட்டியவன் கட்டுப் பாட்டை இழந்து விட்டான். என்னைத் தள்ளி விழுத்திக் கொண்டு வண்டில் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் இரு காப்பிரிகள். அதாவது ஆபிரிக்கக் கறுப்பின போர் வீரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். தெருவின் இரு பக்கத்தில் இருந்து கொண்டும் மத்திக்கு வந்து ஓடிவரும் மாட்டு வண்டில் முன் பாகத் தமது கைகளை நீட்டி கைலாகு கொடுப்பது போல் நின்றனர். ஓடி வந்த மாட்டு வண்டில் அவர்களின் பிணைத்திருந்த கைகளை ஊடுருவி செல்ல முடியாமல் திடீரென்று நின்றுவிட்டது. அத்தனை வலு அவர்களின் கைகளுக்கு. கன்னங்கரிய அவர்களது முகங்கள் தற்போதும் என் மனத்திரை முன் நிற்கின்றன.

ஆனால் பழைய தலைமுறையினரின் மாட்டுச் சவாரி விளையாட்டு தற்காலத்தில் புனரமைப்புச்செய்யப்பட்டு சங்கங்களின் விதிக்கு அமைவாக அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டாக ஏற்றுக் கொள்ளப்பட்டு இருப்பதோடு இளைஞர்கள் தற்போது நேர்மையாகவும், பண்பாட்டு விளையாட்டாகவும், எமது இனத்தின் அடையாளமாகவும் இதில் பங்கேற்று வருகின்றார்கள். அவர்கள் யாவரையும் பாராட்டி இப்பேர்ப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள் மதிப்போடு வளர்ச்சி காண வேண்டும் – என்றார். (ந–4)

# சுத்தமான குடி தண்ணீருக்கான செயற்றிட்டங்கள் ஆரம்பம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5

வடக்கு, வடமத்திய மாகாணத்திலும் இதர மாகாணங்கள் சிலவற்றிலும் வசிக்கும் மக்கள் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான எல்லா வழிவகைகளையும் மேற்கொண்டு வருகின்றேன் என்று நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வவுனியாவுக்கு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சென்றிருந்த அமைச்சர் ரவூப் ஹக்கீம், நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில், வவுனியா கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். அதில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நீரில் கலந்துள்ள இரசாயன பாதார்த்தங்களை வேறாக்கி, நீரைச் சுத்திகரிப்பதற்கு உதவும் இயந்திரத்தையும், அதனுடன் தொடர்புபட்ட பொறிமுறைகளையும் சிறுநீரக நோய் அதிகம் காணப்படும் மாகாணங்களுக்கு விஸ்தரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு உயரதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

தற்போழுது தேசிய நீர் வழங்கல் சபையூடாக 45 சதவீதமான மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கலை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதை 2020ஆம் ஆண்டுக்குள் 60 சதவீதமாக அதிகரிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

வடக்கு, வடமத்திய மாகாணத்திலும், இதர மாகாணங்கள் சிலவற்றிலும் வசிக்கும் மக்கள் மத்தியில் புழக்கத்திலுள்ள குடி தண்ணீரில் இரசாயன பதார்த்தங்களின் கலந்துள்ளன. அதை அருந்துவோர் மத்தியில் சிறுநீரக நோய்கள் அதிகரித்து வருகிறது. எனவே, அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்கான எல்லா வழிவகைகளையும் மேற்கொள்ளவுள்ளோம். இந்தச் செயற்றிட்டத்துக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

புளோரைட் அதிகமுள்ள தண்ணீரின் கனதியை குறைப்பதனூடாகவும் தண்ணீரில் செறிந்துள்ள கல்சியத்தின் அளவை குறைப்பத னூடாகவும் சிறுநீரக நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு ஏற்ற வகையில், தூய நீரை வழங்குவது சாத்தியமாகும். தண்ணீரில் கலந்துள்ள கனிப்பொருள்களின் செறிவு சிறுநீரகத்தோடும், கல்லீரலோடும் தொடர்பான நோய்களுக்கு வழிகோலுகின்றன.

குழாய்க் கிணறுகளின் உபயோகம் மற்றும் மழை நீரை தேக்கி வைத்து வறட்சி நிலவும் காலங்களில் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் என்பன பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தவுள்ளோம் – என்றார்.

இந்த நிகழ்வில் சுகாதார பிரதியமைச்சர் பைஸல் காசிம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். மஸ்தான், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப்பாவா பாறூக், அமைச்சின் மேலதிகச் செயலாளர், பிரதேச செயலாளர்கள் அரச திணைக்கள அதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயரதிகாரிகள் மற்றும் மாவட்ட முகாமையாளர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ந)

# சமத்துவம் வழங்காமையே இனப்பிரச்சினைக்கு காரணம்

## சிறிநேசன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.5

சம உரிமையும் சமமான வாய்ப்பும் சமத்துவமும் வழங்கப்படாமையாலேயே, இனப்பிரச்சினை ஏற்பட்டது என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன்.

சத்துருக்கொண்டான் சர்வோதய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தினுடைய ஒன்றுகூடல் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இனங்களுக்கு சமத்துவம், சம உரிமை, சமமான வாய்ப்பு ஆகியவற்றை வழங்கினால் இனப்பிரச்சினை ஏற்படாது. சிறிய சுய இலாபங்களுக்காக மதங்களின் பெயரால் சமூகங்களைப் பிரிக்கின்ற காரியங்களை மதத் தலைவர்கள் செய்யக்கூடாதென்பதுடன், சமூகங்களின் ஒற்றுமையை கருத்தில் கொண்டு மதங்களுக்கிடையில் ஐக்கியத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புகின்ற பணியில் மதத் தலைவர்கள் ஈடுபட வேண்டும்.

மத போதனைகளை பின்பற்றினால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும். அனைத்து மதங்களும் ஒற்றுமை, சகோதரத்துவத்தை போதிக்கின்றது. எதிர்காலத்தில் சமூகங்களுக்கிடையில், இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்பி நாட்டை நல்லாட்சியின் பால் கொண்டுசெல்ல நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் – என்றார். (ந)

# திரவியியல் ஆய்வுக்குப் பின் கடலரிப்புத் தடுக்கப்படும்

## கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஒக்.5

காத்தான்குடி ஏத்துக்கால் கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடலரிப்பை நிரந்தரமாக தடுப்பதற்கு திரவியியல் ஆய்வு நிலையத்தின் ஆய்வுக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு முன்னராக, மண் மூடைகளை இடும் முதல் கட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. – இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அகமட் தெரிவித்தார்.

காத்தான்குடி கடலரிப்பு தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

காத்தான்குடியில் ஏற்பட்டுள்ள இந்த கடலரிப்பை நிரந்தரமாக தடுப்பதற்கு திரவியியல் ஆய்வு நிலையத்துக்கு இது தொடர்பாக அறிவித்துள்ளோம். அந்த நிலைய அதிகாரிகள் இதனை ஆய்வு செய்த பின்னர் இதற்கான நிரந்தரமான தீர்வு தொடர்பில் ஆராயப்படும். அதற்காக திட்டங்களை தயாரித்து இதனை நிரந்தரமாக தடுக்க நிதி ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒலுவில் கடற்கரையில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் அங்குள்ள பல நிலங்கள் கடலுக்குள் சென்றுள்ளன. இதனை தடுப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார் – என்றார். (ந)

# தனியார் சம்பள அதிகரிப்பை கட்டாயப்படுத்தும் சட்ட வரைவு

## விரைவில் நாடாளுமன்றில் என்கிறார் அமைச்சர் ஜோன் செனவிரட்ன

கொழும்பு, ஒக்.5

தனியார் துறை ஊழியர்களது சம்பளத்தை 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்க வேண்டும் என்று வேலை கொள்வோரை கட்டாயப்படுத்தும் சட்ட வரைவை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளேன் என்று தொழில் மற்றும் தொழிற் சங்கங்களின் தொடர் பாடல் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

இடைக்கால வரவு – செலவுத்திட்டத்தில் தனியார்துறை ஊழியர்களின் சம்பளம் 2 ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்கும்படி ஆலோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆலோசனைக்கு சட்ட அதிகாரம் இல்லாதபடியால் வேலை கொள்வோர் பலர் சம்பள அதிகரிப்பை வழங்கவில்லை.

அதையடுத்து 2 ஆயிரத்து 500 ரூபா சம்பள அதிகரிப்பை கட்டாயப்படுத்தி சட்ட வரைவொன்றை கொண்டுவரவுள்ள உத்தேசித்துள்ளேன் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ந)

# சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்த விசேடமான தொலைபேசிச் சாதனம்

## அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தகவல்

கொழும்பு, ஒக்.5

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் விசேட தொலைபேசி சாதனமொன்று அறிமுகப்படுத்தவுள்ளது என்று தொலைதொடர்புகள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அண்மைக்காலங்களில் சிறுவர்கள் முகங்கொடுத்த துயரமான சம்பவங்கள் தொடர்பாக தனது வேதனையை வெளியிட்ட அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இந்த அசாதரண நிலைமை தொடர்பாக பெற்றோர் மிகுந்த அச்சத்துடன் காணப்படுகின்றனர். குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். அதற்காக குழந்தைகளை பாதுகாக்க விசேட தொலைபேசி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளோம். இதன் மூலம் அவசர சந்தர்ப்பங்களில் பெற்றோரை மற்றும் பொலிஸாரை தொடர்புகொள்ள முடியும். அத்துடன் இந்தச் சாதனம் மூலம் குழந்தைகள் எங்கு இருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அதன்படி இந்தச் சாதனம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் வளர்ச்சியடைந்து வரும் தொழில்நுட்பத்துடன் இணைந்து உலகில் முன்னோக்கிச் செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ந)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அனைவரிடத்திலும் அன்பு காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சிறப்பாக இருக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் சேர்க்கை உண்டு. புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்புண்டு.

**இடபம்:** எதிலும் நிதானத்துடன் இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** பரந்த மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு ஏற்படும். பெண்கள் ஆடம்பரச் செலவில் ஈடுபடுவர்.

**கடகம்:** மற்றவர் விடயத்தில் ஈடுபாடு கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது. மாணவர்கள் நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

**சிங்கம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழிலில் எதிர்பார்த்ததை விட ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பாராட்டு பெறுவர். சுபகாரியத்தில் நல்ல முடிவுகள் கிடைக்கும்.

**கன்னி:** விடாமுயற்சியால் வாழ்வில் வெற்றி காண்பீர்கள். தொழிலில் உற்பத்தியும் விற்பனையும் அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருள்களை வாங்கித் தருவீர்கள். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்தால் சிறப்படையலாம்.

**துலாம்:** வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழிலில் போட்டி குறைவதால் இலாபம் அதிகரிக்கும். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வது நன்று. அரசியல்வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்ப்பின்றி பிறருக்கு உதவி செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் பன்மடங்கு உயரும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிப்புக்கு வழி வகுப்பர். மாணவர்கள் அக்கறையுடன் படித்து முன்னேறுவர்.

**தனுசு** : கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழிலில் இலாபம் திருப்திகரமான அளவில் இருக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

**மகரம்:** நண்பரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். தொழிலில் மந்தநிலை மாறி இலாபம் அதிகரிக்கும். உடல் நலன் குறித்த அக்கறை மேலோங்கும். மாணவர்கள் கலைத்துறையில் ஆர்வம் காட்டுவர்.

**கும்பம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழிலில் இடையூறு குறுக்கிடலாம். இலாபம் மந்தமாக காணப்படும். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்கள். உறவினர்களின் உதவி தக்கசமயத்தில் கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்த்த நல்ல செய்தி வீடு தேடி வரும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் உறவினர்களுடன் சுற்றுலா செல்வர்கள். மாணவர்கள் கல்வியில் அக்கறையுடன் ஈடுபட்டு பெருமைகாணும் நாள்.

பிச்சைக்காரன் கேட்கும்
பிச்சையை விட
மாப்பிள்ளை
மாமனாரிடம் கேட்கும்
"வரதட்சணை"
அதிகம் கேவலமானது

எனக்கு சீதனமாகக்
கொடுத்த என் கணவரின்
பைக்கில் போக,
மனமில்லை.'
என் அப்பா
செருப்பில்லாமல்
போவதைப்
பார்த்ததிலிருந்து...






## பேஸ் புக்கில் பிடித்தவை...












# வரி கட்டாமல் பதுங்கிய புலி

நடிகர்களின் உண்மை முகத்தை வெளிப்படுத்தி வரும் வருமானவரித் துறை. கடந்த 5 வருடங்களாக நடிகர் விஜய் வரி கட்டாமல் ஏய்ப்பு செய்திருக்கிறார் என்று கூறியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளது. நடிகர் விஜய் நடித்து வெளி யாகியிருக்கும் திரைப்படம் புலி. இந்தப் படத்துக்கான வரியை அந்த படக்குழுவினர் செலுத்தவில்லை என்றும், அந்தப் படத்தில் நிறைய முறைகேடான பணப்பறிமாற்றம் இருந்ததாகவும் வருமான வரித் துறையினருக்கு முறைப்பாடு கிடைத்ததைத் தொடர்ந்து, வருமான வரித்துறை அதிகாரிகள், நடிகர் விஜய், இயக்குநர் சிம்புதேவன் உட்பட நடிகைகள் நயன்தாரா, சமந்தா ஆகியோரது வீட்டிலும் சோதனை நடத்தினர். முழுமையாக பத்து பேரின் வீடுகள் மற்றும் அலுவலகங் களில் திடீர் சோதனை நடத்தினார்கள். அதில் புலி படக்குழுவினர் 25 கோடி ரூபாய் அளவுக்கு வரி ஏய்ப்பு செய்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் சென்னை, மதுரை உட்பட மொத்தம் 35 இடங்களில் ஒரே நேரத்தில் வருமான வரித்துறையினரின் சோதனை நடத்தப் பட்டது. 100 க்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்தச் சோதனையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் புலி திரைப்படக் குழுவினரின்வீடுகளில் இருந்து மொத்தமாக இரண்டு கோடி ரூபாய் பணத்தையும் இரண்டு கோடி ரூபாய் மதிப்பிலான தங்க நகைகளையும் வருமான வரித் துறை அதி காரிகள் எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. மேலும், அவர்களிட மிருந்து சில முக்கியமான ஆவணங்களையும் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இதில் தயாரிப்பாளர் மற்றும் திரைப் பட முதலீட்டாளர்கள் ஆறு வருடங்களாக ஒழுங்காக வரி கட்ட வில்லை என்றும், நடிகைகள் நயன்தாராவும், சமந்தாவும் கடந்த இரண்டு ஆண்டுகளாக வரி கட்டாமல் ஏய்ப்பு செய்துள்ளனர் என்றும்– வருமான வரித்துறை அதிகாரிகள் கூறியிருப்பதாக செய்திகள் வெளி யாகியுள்ளது.

அதேபோல இவர்கள் வீடுகள் மற்றும் அலு வலகங்களிலிருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங் கள், பத்திரங்கள் ஆகிய வற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில், இவர்கள் 10 பேரும் கணக்கில் காட்டாமல் ரூபா 100 கோடி மதிப்பி லான சொத்துக்களை வைத்திருப்பது தெரிய வந்துள்ளது. இந்தப் பண பரிவர்த்த னையை உறுதி செய்துள்ள வருமான வரித்துறை அதிகாரிகள், அதற்கு வருமான வரியாக ரூபா 30 கோடி விதித்திருப்பதாகவும், அதற்கு அபராதக் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கூறியிருப்பதாகவும் தெரிகிறது. ஆனால், இந்தச் சோதனையில் ஒவ்வொருவர் வீட்டிலும் அலுவலகத்திலும் இருந்து பறிமுதல் செய்யப் பட்ட முழுமையான ஆவணங்கள், பணம், நகை பற்றிய தகவல்களை தெரிவிக்க வருமான வரித் துறையினர் மறுத்து விட்டனர். இதில் முக்கிய மாக நடிகர் விஜய் கடந்த 5 வருடங்களாக வரி ஏய்ப்பு செய்திருக்கிறார் என்று செய்திகள் வெளி யாகியுள்ளது. அவரது வீட்டிலிருந்தும் பல்வேறு ஆவணங்களை வருமான வரித்துறை அதிகாரி கள் எடுத்துச் சென்றுள்ளனர். படத்தில் உண்மை யாகவும் நேர் மையாகவும் வசனம் பேசி நடிக்கும் நடிகர்களின் உண்மை முகம் என்ன என்பதை பொது மக்களும் ரசிகர்களும் புரிந்துகொள்ள வேண்டும் என்று– சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித் துள்ள னர். நடிகர் விஜய் கத்தி என்ற திரைப்படத்தில் இட்டலித் தத்துவம் ஒன்று சொல்வார். அதாவது நம் வயிறு போதும் என்று கூறிய பிறகு நாம் சாப் பிடும் அடுத்த இட்டலி மற்றவனுடையது என்று சொல்வார். இப்படி எல்லாம் திரைப்படத்தில் பேசி விட்டு நிஜ வாழ்க்கையில் இப்படி வரி ஏய்ப்பு செய் யலாமா? என பொது மக்களும் சினிமா இரசிகர்களும் கேள்வி கேட்கின்றனர். எனினும் அதிகார பூர்வமான அறி விப்பு வந்த பிறகுதான் உண்மை தெரிய வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பனவுக்காக காத்திருக்கும் பொன்னகர்ப் பகுதி முதியவர்கள்

கிளிநொச்சி,ஒக்.05
இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்குள் அஞ்சல் அலுவலகம் உள்ளபோதிலும் பத்துக் கிலோ மீற்றர் தூரத்துக்கு வாகனத்தில் சென்று ஏனைய பிரிவு மக்களுடன் நீண்டநேரம் காத்திருந்து கொடுப்பனவைப் பெறவேண்டிய நிலை கிளிநொச்சி மாவட்ட பொன்னகர் முதியோர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பொன்னகர் கிராமத்தில் [illegible] இற்கும் மேற்பட்ட 70 வயது முதியோர்களுக்கு மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பொன்னகர் கிராமத்துக்கு அருகில் முறிகண்டி அஞ்சல் அலுவலகம் உள்ளபோதிலும் கொடுப்பனவு கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்தில் வழங்கப்படுவதால் மாதாந்தம் வாகனங்களில் சென்று நீண்டநேரம் காத்திருந்து கொடுப்பனவைப் பெறவேண்டியுள்ளது. என அப்பகுதி முதியோர்கள் தெரிவித்தனர். இதே வேளை பொன்னகர் கிராமத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோருக்கான மாதாந்தக் கொடுப்பனவு கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தினால் முறிகண்டி அஞ்சல் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு 2 ஆயிரம் ரூபா மாதாந்தம் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்திலேயே வழங்கப்பட்டு வருகிறது.

இதனை முறிகண்டி அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக வழங்குமாறு பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் கிடைக்கவில்லையெனவும் கவலையுடன் தெரிவித்தனர். முதியோரைக் கனம் பண்ணுவோம் என விளம்பரப்படுத்தும் சமூக சேவைகள் பிரிவினர் தற்போது நடைபெற்று வரும் முதியோர் வாரத்தை முன்னிட்டு எமக்கு வழங்கப்படும் 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவை முறிகண்டி அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக .கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்ட போது, முறிகண்டி அஞ்சல் அலுவலகம் அமைந்துள்ள பகுதி முல்லைத்தீவு மாவட்டத்துக்குரியது என்பதால் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு முறிகண்டி அஞ்சல் அலுவலகத்தின் ஊடாக வழங்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் நூலகத்தால் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.05
தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, மாணவர்களுக்கிடையிலான போட்டிகளை நடத்த உள்ளதாக யாழ்.மாநகர சபையின் நல்லூர் கிளை நூலகத்தினர் தெரிவித்துள்ளனர். இதில் முன்பள்ளி மாணவர்களுக்கான கதை கூறல், முன்பள்ளி மாணவர்களுக்கான வர்ணம் தீட்டுதல், தரம் 3, 4, 5 மாணவர்களுக்கான சித்திரம் வரைதல், தரம் 4, 5 மாணவர்களுக்கான தமிழ் சொல்வளம், ஆங்கில சொல்வளம், தரம் 6, 7, 8, 9, 10, 11 மாணவர்களுக்கான தமிழ்க் கட்டுரைகள், ஆங்கிலக் கட்டுரைகள் மற்றும் வளர்ந்தோருக்கான பொது அறிவு வினாக்களுக்கு விடையளித்தல் முதலான போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளோர் தமது விவரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் கிளை நூலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு, நல்லூர் கிளை நூலகர் திருமதி பொற்செல்வி ஶ்ரீரஞ்சன் தெரிவித்துள்ளார். (ஐ-ரி-5)

# பாரிசவாத புனர்வாழ்வு மையம் சாவகச்சேரி வைத்தியசாலையிலும்

யாழ்ப்பாணம்,ஒக்.05
பாரிசவாத புனர்வாழ்வு மையம் ஒன்றை சாவகச்சேரி வைத்தியசாலையில் அமைக்க மாகாண சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பாரிசவாத நோயினால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மட்டும் பாரிசவாத சிகிச்சைப் பிரிவின் புனர்வாழ்வு மையம் இயங்கி வருகிறது.

இந்த மையத்தை வேறு வைத்தியசாலையில் அமைப்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் சிகிச்சைப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் பயனாக, சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் பாரிசவாத புனர்வாழ்வு மையத்தை அமைக்க மாகாண சுகாதார அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ-9)

# மன்னாரில் தொழில் வாய்ப்புக்கள் இருந்தும் தகைமையான தொழில் தேடும் இளைஞர்கள்

### மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவிப்பு

மன்னார்,ஒக்.05



மன்னார் மாவட்டத்தில் போதிய வள மான தொழில் வாய்ப்புக்கள் உள்ள போதும் இங்குள்ள இளைஞர்,யுவதிகள் தங்களது படிப்புக்கு ஏற்ப தகைமையான தொழிலை எதிர்பார்ப்பதைக் காணகூடியதாக உள்ளது என மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட செயலகத்தில் பொது மக்கள் தொழில்சேவை மத்திய நிலையத்தை இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றி யத்தின் பிரதிநிதி வில்லியம் வேர்போஸ்ட் திறந்து வைத்தார்.

இதன்போது நடைபெற்ற சந்திப்பு நிகழ்வில் உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கும் போது: மன்னார் மாவட்டம் ஒரு பரந்த பிரதேசமாக இருந்தாலும் இங்கு விவசாயமும் மீன் பிடியுமே முக்கிய தொழில்களாக இருந்து வருகின்றன. ஆனால் மீன் பிடிக் கிராம மக்களாக இருந்தாலும் சரி, விவசாய கிராமபுற மக்களாக இருந்தாலும் சரி, இங்கு நல்லமுறையில் கல்வி கற்ற இளைஞர் யுவதிகள் தற்பொழுது அவர்களது பாரம்பரிய தொழிலைச் செய்வதற்கு ஈடுபாடு இல்லாதவர்களாக இருந்து வருவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. தற்போது இளைஞர்,யுவதிகள் மத்தியில் தங்களது படிப்புக்கு ஏற்ப தொழிலை மேற் கொள்ள வேண்டும் என்னும் எதிர்பார்ப்பை நாங்கள் காண்கின்றோம். ஆனால் அவர்க ளுடைய படிப்புக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான நல்ல தகுந்த வழிகாட் டிகள் இல்லாத குறை இங்கு நிலவி யிருந்தது.

ஏனைய மாவட்டங்களைப் போன்று இங்குள்ள மாணவர்கள் ஆலோ சனை பெறமுடி யாத நிலை நிலவியபோதும் தற்பொழுது மன்னார் மாவட்டத்தில் இந்தக் குறை நிவர்த்தி செய்[illegible]ட்டுள்ளது. ஆகவே மன்னார் மாவட்ட மக்கள் குறிப்பாக படித்த இளைஞர் யுவதிகள் இங்கு ஆரம்பிக் கப் பட் டுள்ள பொது மக்கள் தொழில் சேவை மத்திய நிலையத்தினுடாக தொழில் வாய்ப்பை பெறுவதற்கு ஆலோசனையைப் பெற்று அதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (ஐ)

# கவிதைத்தொகுதி அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஒக்.05
கவிஞர் கந்த பேரின்பத்தின் 'நந்தவனச் சுகந்தம்' கவிதைத் தொகுதியின் அறிமுக விழா இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் மண்டபத்தில், கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலினி வெனிற்றன் கலந்து கொள்ளவுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன் வரவேற்புரையும், ஓய்வுநிலை அதிபர் அ.பஞ்சலிங்கம் ஆசியுரையும் வழங்குவர். பேராசான் நா.குழந்தைவேலு நூல் அறிமுக உரையையும் நயவுரையையும் ஆற்றவுள்ளார். (ஐ)

# சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் நடைபெறும் சான்றிதழ் மற்றும் டிப்ளோமா [illegible]Q Level5 கற்கைநெறியின் இறுதிப் பரீட்சைக் கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. குறித்த பரீட்சை யில் தோற்றவுள்ள மாணவர் கள் தமக்கான விண்ணப்பப் படிவங்களை பரீட்சைப் பகுதியில் பெற்று எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி தொழில்நுட்பவியல் கல் லூரியின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி5)

சேவைநலன் பாராட்டு
இன்றைய தினம் தனது ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெறும் எமது பாடசாலை ஆசிரியரான
திருமதி மரியராசா பிளசிதம்மா தவறஞ்சிதம் (SLTS -I)
அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரின் ஓய்வு காலம் சிறப்புடன் அமைய வாழ்த்துகின்றோம்.



அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், யா/கச்சாய் அ.த.க.பாடசாலை.

சேவைநலன் பாராட்டு
இன்று (05.10.2015) திங்கட்கிழமை அகவை அறுபது காணும்
திருமதி இராஜேஸ்வரி குமுதா தேவராஜா
S.L.T.S-I
எம் புதிய தலைமுறையின் உயர்வுக்காய் உழைத்திட்ட உன்னத தியாகத்துக்கான அதியுயர் நன்றியின் வெளிப்பாடாய் அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் நலன்புரி சங்கம்
யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்
எமது பிரதேச செயலகத்தில் பிரதித்திட்டமிடல் பணிப்பாளராக கடமையாற்றி ஓய்வுபெற்று பாராளுமன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்டுப் பாராளுமன்றம் சென்றுள்ள
திருமதி சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



ஊழியர் நலன்புரிசங்கம், பிரதேச செயலகம், துணுக்காய்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
காசிநாதர் குணசிங்கம் (அதிபர் S.L.P.S.I)
எமது பாடசாலை அதிபரான காசிநாதர் குணசிங்கம் (அதிபர் S.L.P.S.I) அவர்கள் நாளை 06.10.2015 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் இரண்டாவது தடவையாக
"பிரதீபா பிரபா"
விருது பெறும் எமது பாடசாலை அதிபர் அவர்கள் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்துவதுடன், எமது கல்வி வலயத்தில் விருது பெறும் ஏனைய அதிபர்களையும் இந் நாளில் வாழ்த்துகின்றோம்.
ஆசிரியர் ஒன்றியம், கல்வி சாரா ஊழியர்கள், யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.



பாராட்டி வாழ்த்துகின்றோம்
உலக ஆசிரியர் தினத்திற்கு இணைவாகக் கல்வி அமைச்சு நடத்தும் "ஆசிரிய பிரதீபா பிரபா" கௌரவிக்கும் விழா 2015.10.06 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் கலந்து சிறப்பித்து விருதுபெறும் எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி சர்வலோஜினி சசிகுமார்
அவர்களை இதயபூர்வமாகப் பாராட்டி வாழ்த்துகிறோம்.
பாராட்டி வாழ்த்துவோர்:
மு/ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், மாணவர்கள், பாடசாலைச்சமூகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடனாக பணத்தை வாங்கி மோசடி செய்தவருக்கு சிறை

கரணவாய், ஒக்.05

வியாபார நோக்கத்துக்காக பத்து லட்சம் ரூபா பணத்தை கடனாக வாங்கி மோசடி செய்த நபருக்கு இரண்டு வருட கடூழியச் சிறை தண்டனையும், ஒரு லட்சம் ரூபாவை நஷ்ட ஈடாக வழங்குமாறும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வதிரி – கரவெட்டியைச் சேர்ந்த கதிரமலை மகேந்திரம் என்பவரிடம் இருந்து கடந்த 2012 ஆம் ஆண்டு வியாபார நோக்கத்துக்காக கடனாக வாங்கித் திருப்பி வழங்காமல் அதே இடத்தைச் சேர்ந்த செல்லத்துரை செல்வராசா என்பவர் ஏமாற்றி வந்துள்ளார்.

இது தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைகள் இடம்பெற்று வந்தன. இதன் இறுதிக்கட்ட விசாரணைகள் கடந்த 30 ஆம் திகதி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராசா முன்னிலையில் இடம்பெற்றது. குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றவாளியாக இனங்காணப் பட்டதை அடுத்து அவருக்கு இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன் வழக்குத் தொடுநருக்கு நஷ்ட ஈடாக ஒரு லட்சம் ரூபாவைச் செலுத்து மாறும் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார். (ஐ–108)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் குழந்தைவேலு துரைராஜசிங்கம்



திதி: அட்டமி 05.10.2015

தோற்றம் 26.06.1951 மறைவு 15.10.2014

ஆண்டு ஒன்று ஆயிடினும்
உன் அன்புமுகம் மறக்கவில்லை!
தூண்டாமணி விளக்காய் ஒளி
வீசிப்பிரகாசித்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

குடும்பத்தினர்.
கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் இலட்சுமி மார்க்கண்டு

உதிப்பு 27.02.1937

உதிர்வு 05.09.2015

கடந்த 05.09.2015 சனிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி இலட்சுமி மார்க்கண்டு அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று 05.10.2015 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம். (60614) (14,15) குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கண்மகிழ 1989.02.19

கண்நெகிழ 2013.10.05

அமரர் சோகேஸ்வரன் கஜேந்தன்

(இறுதி ஆண்டு யாழ் பல்கலைக்கழக மாணவன்)

இந்து மகளிர் ஈன்றெடுத்த மகனாய் இணைந்திருந்த எம்இனிய சுயனே
இரண்டு ஆண்டுகள் சென்றாலும் ஆறாது ஐயா உனது துயரம்
கல்லூரிக்காலமதில் விளையாட்டுத்துறையில் கால்பதித்து
வீரனாக திகழ்ந்து வல்லதோர் வரலாறு ஆசிரியராகி
வளமான மாணவனை உருவாக்கித் தந்தீர்.
எத்தனை காலங்கள் கடந்து சென்றாலும் ஒவ்வொருநொடிகளிலும்
உங்கள் நினைவு தான் எம் இதயத்தில் உருண்டு ஓடுகின்றது
எம் வாழ்வின் தெய்மாய்இருக்கிறீர்கள்
காலங்கள் உருண்டு ஓடினாலும் நேசமும் பாசமும் என்றும் நினைவாகும்
ஈடற்ற உங்கள் இழப்பு ஆறாது எம் நெஞ்சில்

பிரிவால் துயருறும்

கெருடாவில், சாவகச்சேரி.
077 714 8082

குடும்பத்தினர்.
உற்றார், உறவினர்கள்.

# மன்னார் மாவட்ட இளைஞர்களுடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சந்திப்பு



மன்னார்,ஒக்.05

மன்னார் மாவட்டத்துக்கு பயணத்தை மேற்கொண்டு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கேஸ்வரன், தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள ஆங்கிலப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்று வரும் சிங்களப் பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று வரும் மாணவர்களை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சந்தித்தார். குறித்த பயிற்சி நிலையத்தில் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 100 இளைஞர், யுவதிகள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் அவர்களுக்கு மொழி ஆற்றலை மேம்படுத்தும் வகையில் சிங்கள மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் மன்னாரில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருகை தந்த முதலமைச்சர் குறித்த பயிற்சி நிலையத்துக்குச் சென்று பயிற்சி பெற்று வரும் மாணவர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். (ஐ–56)

# வீதி அபிவிருத்திப் பணிகள் நிறைவு



மட்டக்களப்பு, ஒக். 05

இலங்கை அரசின் நிதி உதவியுடன் மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பழைய மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியின் வீதி அபிவிருத்திப் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டு வருவதாக மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் களப் பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் ஸ்ரீ.பத்மராஜாவின் வழிகாட்டலில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் களப் பொறியியலாளர் ஏ.லிங்கேஸ்வரனின் கண்காணிப்பில் இடம்பெற்று வரும் இந்தப் பிரதான வீதியின் வீதி அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு முடியும் நிலையில் உள்ளது. இந்த நிலையில் குறித்த பிரதான வீதிக்கு காப்பெற் இடுவதற்கான முன் ஏற்பாடுகள் தற்போது துரிதமாக இடம்பெறுகின்றன. குறித்த வீதி இரண்டு வழி போக்குவரத்து செய்யக் கூடிய வகையில் அமைக்கப்பட்டு வருவதோடு மேலதிகமாக சைக்கிள் மற்றும் செல்லக்கூடிய வகையில் ஒரு வழியும்,வடிகாலும் அமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ–10)



## சித்திரப் போட்டியில் மூன்றாம் இடம்

மாங்குளம்,ஒக்.05

ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான தேசிய மட்ட சித்திரப் போட்டியில் வட இந்து ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவி தர்சனா அகிலன் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இந்தப் போட்டி மாகாண ரீதியாக நடத்தப்பட்டு தேசிய மட்டப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாம்புடன் வைத்தியசாலைக்குச் சென்ற குடும்பத்தினர்

கிளிநொச்சி,ஒக்.05

கிளிநொச்சி– தர்மபுரம் பகுதியில் இரவு வீட்டின் சமையல் அறையில் உணவுக்காகச் சென்ற, மூன்று மாதக் குழந்தையின் தாயாரை பாம்பு தீண்டியமையால், அந்தக் குடும்பத்தினர் பாம்புடன் வைத்தியசாலைக்குச் சென்றுள்ளனர்.

தர்மபுரம் பகுதியில் மீள் குடியேற்றத்தின் பின்பு போதிய இருப்பிடம் இன்றி வாழும் நிலையில் இரவு உணவுக்காக குறித்த தாயார் உணவு தயார் செய்யும் இடத்துக்குச் சென்று அமர்ந்தவேளையில் அங்கே மறைந்திருந்த புடையன் பாம்பு தீண்டியுள்ளது. இதனை அடுத்து குறித்த பெண் கூக்குரல் இட்டதை அடுத்து குடும்பத்தவர்கள் பாம்பையும் மடக்கிப் பிடித்து நோயாளியுடன் வைத்தியசாலையில் அனுமதித்தனர். (ஐ–101)

# வரணி மத்திய கல்லூரியில் சிறுவர் தினக் கொண்டாட்டம்

வரணி,ஒக்.05

உலக சிறுவர் தினக் கொண்டாட்டங்கள் வரணி மத்திய கல்லூரியில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதான அம்சமாக மாணவர்களின் விவாத அரங்கம் ஒன்றும் இடம்பெற்றது. கல்லூரி ஆசிரியர் சிவானந்தராசா தலைமையில் இடம்பெற்ற விவாத அரங்கு பார்வையாளர்களின் பெரும் வரவேற்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விவாத மேடையின் போது பேசு பொருளாக "சமூகம்தான் பிள்ளைகளை வழி நடத்துகின்றது" எனும் தலைப்பில் ஒரு குழுவினரும், "இல்லை குடும்பம் தான் பிள்ளைகளை வழிநடத்துகின்றது" எனும் தலைப்பில் மறு குழுவினரும் தமது திறன்களை இதன்போது எடுத்துக் கூறினர். இந்த நிகழ்வின்போது செரண்டிப் சிறுவர் இல்ல நிறுவனத்தின் அனுசரணையுடன் மின்சார வசதிகள் அற்ற ஏழை மாணவர்கள் 30 பேருக்கு மின்கலங்கள் வழங்கப்பட்டன. (ஐ–122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமறைக்கு ஒரு மாநாடு



மட்டக்களப்பு, ஒக்.05

காத்தான்குடி தாருல் அதர் அத்த அவிய்யா இஸ்லாமிய தவா அமைப்பின் ஏற்பாட்டில் 'மாமறைக்கு ஒரு மாநாடு' எனும் தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. தாருல் அதர் அத்த அவிய்யா அமைப்பின் மார்க்கப் பிரசாரகர் மௌலவி பீ.எம்.அஸ்பர் (பலாஹி) தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் பிரபல தென்னிந்திய மார்க்கப் பிரசாரகர்களான அஷ்ஷெய்க் கோவை எஸ். அய்யூப் 'மனித குலத்துக்கு மாமறையின் அறை கூவல்' எனும் தலைப் பிலும், அஷ்ஷெய்க் அன்சார் ஹுஸைன் பிர்தௌசி 'மாமனிதரின் மனித நேயக் குரல்' எனும் தலைப் பிலும், அஷ்ஷெய்க் ஹாமீம் பிர் தௌசி 'இஸ்லாமிய இனிய பண்புகள்' எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தினர். மேற்படி மாநாட்டில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெரும் திரளான ஆண்,பெண் இஸ்லாமிய பொது மக்கள் கலந்து கொண்டனர். இதன் போது தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு தையல் இயந்திரங்களும், விசேட தேவையுடையோருக்கு சைக்கிள்களும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன. இங்கு தாருல் அதர் அத்த அவிய்யா அமைப்பின் பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம்.நஸாரினால் 14 முக்கிய விடயங்கள் அடங்கிய மாமறைக்கு ஒரு மாநாட்டின் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. குறித்த மாநாட் டில் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ–10)

## புதிய நெறியாளர் குழு உறுப்பினர்கள் தெரிவு

வரணி, ஒக்.05

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நெறியாளர் குழு உறுப்பினர்கள் 7 பேர் அண்மையில் இடம்பெற்ற பொதுச் சபைக் கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டனர். யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் சு.கணேசு தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் செ.அமரசேகரம், எஸ்.குஞ்சுராசா, தா.ராஜ்மோகன், க.நல்லதம்பி, வீ.ஜனார்த்தனன், கே.வசந்தரூபன், எஸ்.சிவானந்தம் ஆகியோர் பொதுச்சபை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ–122)

# வழிகாட்டிப் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஒக்.05

இடர் முகாமைத்துவ வழிகாட்டிப் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வலி.மேற்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ இணைப்பு அலகினால் முன்னெடுக்கப்படும் இந்தப் பயிற்சி பட்டறையில், கிராமிய மட்டத்தில் ஆபத்து மதிப்பீட்டு வழிகாட்டலுக்கான பிரதேச மட்ட வழிகாட்டித் தயாரிப்பு இடம்பெறவுள்ளது. (ஐ–50)

# அமைச்சர் ஹலீமின் தாயார் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.05

தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார விவகார அமைச்சரான எம்.எச்.ஏ.ஹலீமின் தாயாரான கிலூர் பாத்திமா நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார். இவரது ஜனாஸா அக்குரணை, குருகொட மைய வாடியில் நல்லடக்கம் செய்யப் பட்டது. மர்ஹூம் ஹாசிம் ஆலிம் சாஹிபுவின் மனைவியான இவர், முன்னாள் அமைச்சர் ஏ.சீ.எஸ். ஹமீதின் சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ–10)

A new way for starting your child's education

LITTLE CHUTTYS' MONTESSORI

*Home Away from Home*




விண்ணப்பப் படிவங்களை பாடசாலையில் பெற்றுக் கொள்ளலாம்

**22.10.2015** வியாழக்கிழமை வித்தியாரம்ப நிகழ்வு (ஏடு தொடக்கல்) மு.ப **10.30** மணி முதல் பாடசாலையில் இடம்பெறும்.

MEDIUM OF INSTRUCTION-ENGLISH & TAMIL

Completely managed under the Montessori concept withsensorial materials designed by Dr.Maria Montessori.
along with exercises for practical life, educational videos, annual concerts,elocution training, developing fine and gross motor skills, social interaction, arts and crafts.




**No.05, Brodie Front Lane, Kandy Road, Ariyalai, Jaffna.**
TELEPHONE : 0779208116, 0718262603,0212226099

**விதை நெல் விற்பனைக்கு**

விவசாயப் பகுதியினரால் சுத்திகரிக்கப்பட்டு சிபார்சு செய்து அத்தாட்சிப் பத்திரம் வழங்கப்பட்ட B.G. 406 ரக விதை நெல் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு : 077 659 2044**

**தவறிவிட்டது**

மல்லிகை காரைநகரைச் சேர்ந்த நடேசு குலேந்திரன் ஆகிய எனது N.I.C (761692470v) மற்றும் வெளிநாட்டு நாணயம், ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் பொன்னாலை சந்தி, சங்கானை, அளவெட்டி மல்லாகம் ஆகிய பகுதிகளில் 30.09.2015 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் T.P மூலம் தந்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு - 0773088892,0772095045**

**குருக்கள் தேவை**

வடமராட்சி கிழக்கு, நாகர்கோயில் வடக்கில் அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பெற்ற அருள்மிகு முருகையா தேவஸ்தானத்துக்கு நித்திய பூசைகளுக்கு குருக்கள் தேவை. கோயிலோடு தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். சம்பளம் திருப்திகரமானதாக இருக்கும். (நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

அருள்மிகு முருகையா தேவஸ்தானம்
நாகர்கோயில் வடக்கு.
தொடர்புகளுக்கு :
0773548525

ஆ.நவரத்தினசாமி
போஷகர்,
ஆலய பரிபாலன சபை.

(C/19166)(10.17)

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு**

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அனுமதியுடன்

**புறூனை (Brunei)**

| உத்தியோக வகை | எண்ணிக்கை | சம்பளம் Brunei Dollars (ஒரு டொலர் 100/-) |
|---|---|---|
| பொது தொழிலாளர்கள்(ஆண்) | 100 | 500 + OT |

**மேலதிக தகவல்கள்**

★ மூன்று வருட ஒப்பந்தம்
★ 08 மணிநேர வேலை மற்றும் வாரத்தில் 6 நாள்கள்
★ உணவு, தங்குமிடம், மருத்துவம், போக்குவரத்து, ஒருவழிப் பயணச் சீட்டு இலவசம்
★ நாளொன்றுக்கு 2 தொடக்கம் 3 மணித்தியாலம் வரை மேலதிக வேலை நேரம்.
★ மேலதிக சட்ட திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் புறூனை சட்டத்திற்கு அமைவானது.

கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் சுயவிவரக்கோவை, கடவுச் சீட்டு பிரதியை அனுப்பவும்.

**SAINAS TRAVELS & TOURS**

No.19, Playground Road, obesekarapura, Rajagiriya
Mobile: 077 731 1880, 077 758 8781
Email: stmazoorsl@yahoo.com, Sainastravels@gmail.com

(19243)(14.15.16) App.No.AL/1004/01/15

**NSB யின் சிக்கன மாதக்கொண்டாட்டத்தை முன்னிட்டு**

NSB சிக்கன மாதம் ஒக்.01-31வரை




ஹப்பன் கணக்கில் வைப்பிலிடும் வாடிக்கையாளர்களுக்கு வங்கியால் மேலதிகமாக ரூபா 500.00 வரை வைப்பிலிடப்படுகின்றது.

குறைந்தபட்ச வைப்பு
ரூபா 200,000.00
அதிகூடிய வருடாந்த
வட்டி வீதம் - 7.25%

தேசத்தின் மனதில் சேமிப்பு பழக்கத்தை பதியவைத்த தேசிய சேமிப்பு வங்கியோடு இணைந்து சிக்கன மாதத்தை கொண்டாடுவோம்.
தொலைபேசி: 0112379379 web : www.nsb.lk

வடபிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி.

(65074)(10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் பொன்னுத்துரை



பிறப்பு: 20.09.1937
இறப்பு: 03.10.2015

இத்தாவில்,பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் பொன்னுத்துரை 03.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும்,காலஞ்சென்றவர்களான நாகையா - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சின்னத்தங்கம் மற்றும் செல்லம்மா ஆகியோரின் சகோதரனும்,செல்லம்மாவின் அன்புக் கணவரும், பரமசாமி (இத்தாலி), காலஞ்சென்ற பாக்கியராசா, பசுபதி (விநாயகம் - தர்சன் ரவல்ஸ்), கனகபூரணி,சிவனேசன் (பிரான்ஸ்), சிவனேஸ்வரி (ஜேர்மனி), ஞானேஸ்வரன் (ஜேர்மனி),வதனா ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைசிங்கம், மகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, யூலிகா (பிரான்ஸ்), கிஷ்ணராஜா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.10.2015) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தேனாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இத்தாவில்,
பளை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி யோகம்மா இராசரத்தினம்



பிறப்பு 14.01.1943 இறப்பு 3.10.2015

சரவணையைப் பிறப்பிடமாகவும், தாவடி மற்றும் பம்பலப்பிட்டி கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா இராசரத்தினம் 03.10.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், இராசரத்தினத்தின் (உரிமையாளர்- விஜிதா அரிசி ஆலை, தாவடி) பாசமிகு பாரியாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக் கரசு- தர்மலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்புச்சகோதரியும், கல்யாணி, கலைவாணி, கருணாகரன் (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), விஜிதா ஆகியோரின் தாயும், Dr. சுரேஸ் (ஆதாரவைத்திய சாலை தெல்லிப் பழை), சுபாஸ்சந்திரன் (VS LANKA(Pvt) Ltd Colombo) பிரக லதா, பதிமிலா, காண்டீபன் (Central Engineering Consultancy Bureau) ஆகியோரின் மாமியும், ஹரிணி, பிருந்தாபன், சுபாங்கி, டீபத்,சுஜின்,பிரிட்ரிகா,சுகந்,கிஷான், அக்ஷயா, அக்ஷனா, கிரிஷாந்த் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், யோகம்மா, நகுலேஸ்வரி,நவரட்ணம்மா, மங்கையர்க்கரசி, சீவரட்ணம் (நந்த லாலா இரும்பகம்), மீனாம் பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (05.10.2015) திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரையும் செவ்வாய்க்கிழமை (06.10.2015) காலை 8.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் அன்றையதினம் 2.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தி.இராசரத்தினம் (கணவர்).
(விஜிதா அரிசி ஆலை உரிமையாளர்)
011 250 7659, 077 762 9337

இல.69,4/3,டேவிட்சன் வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04
(65175) (13.15.16.17)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பத்மாதேவி (செல்வா) செல்வராசா



யாழ். ஸ்ரான்லி வீதி அத்தியடியைப் பிறப் பிடமாகவும் ஜேர்மனி Krefeld ஐ வதிவிட மாகவும் கொண்ட பத்மாதேவி செல்வராசா 28.09.2015 திங்கட்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ் சென்ற அப்புக்குட்டி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்வராசாவின் அன்பு மனைவியும் இந்திரவேணி (ஜேர்மனி), இந்திரவதனி (டென்மார்க்), இந்திரகாந்தி (ஜேர்மனி), கேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற பரிபூரணம் (இலங்கை), பாக்கியம் (பிரான்ஸ்), கண்டம்மா(ஜேர்மனி), அருமைராசா (லண்டன்) காலஞ்சென்ற நடராசா (இலங்கை), சிவசோதி (இந்தியா), மகிமாவதி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருளானந்தம்(ஜேர்மனி), அருந்தவநாதன் (டென்மார்க்), தேவகுமார் (ஜேர்மனி), நேசமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான இராசையா(இலங்கை), தியாகராசா (-Sports Officer இலங்கை), கந்தசாமி (இலங்கை) மற்றும் நல்லையா(இலங்கை) காலஞ்சென்றவர்களான பரமசிவம் (இலங்கை), துரைச்சாமி(பொலிஸ் - இலங்கை), சுந்தரம் (இலங்கை), ரகுநாதன்(பிரான்ஸ்) மற்றும் சபாபதி(ஜேர்மனி), சரஸ்வதி(லண்டன்), யோகராணி (இலங்கை), இராசநாயகம் (இந்தியா),தெய்வேந்திரம் (இலங்கை) காலஞ்சென்ற வர்களான சரஸ்வதி(இலங்கை), காமாட்சியம்மா (இலங்கை), கமலராணி(இலங்கை) மற்றும் கனகம்மா (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான இராசையா (இலங்கை), இரசகுட்டி(இலங்கை) மற்றும் கனகரட்னம் (இலங்கை) காலஞ்சென்றவர்களான அப்புத்துரை (இலங்கை), தங்கச்சிப்பிள்ளை(இலங்கை) ஆகியோரின் சகலியும் அருள்வேணி (ஜேர்மனி), பவுல்(ஜேர்மனி), அனிற்றா(ஜேர்மனி), டோத்தா(டென்மார்க்), டயானா (டென் மார்க்), டினன்(டென்மார்க்), டொனால்(டென்மார்க்), ஆஷா(ஜேர்மனி), அனுஷா(ஜேர்மனி), கிறிஸ்தியான்(ஜேர்மனி), ஜெனிபா(ஜேர்மனி), யூலியானா(ஜேர்மனி), சாம்ராஜ்(டென்மார்க்), றொனி(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மேரி(டென்மார்க்), மெசி(டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 07.10.2015 புதன்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் Friedhof Fischeln, Kolner Strabe 730,47807 Krefeld, Germany இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

535, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
077 882 5179 (65173)(14.15)

தகவல்: தெய்வேந்திரம் குடும்பம்
சே.தெய்வேந்திரம் மகிமாவதி(மகி)

### திருமதி கமலம் தர்மலிங்கம்



பிறப்பு 28.12.1919 இறப்பு 03.10.2015

வவுனியா குடியிருப்பைச் சேர்ந்த திருமதி கமலம் தர்மலிங்கம் 03.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - அபிராமி தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆயுர்வேதவைத்தியர் கோதண்டர் - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின்(வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலய ஆசிரியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரட்ணகேசரலிங்கம், மலர்மாலை, சொர்ணலக்சுமி, ஸ்ரீராமகிருஸ்ணா (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்) மற்றும் நவநீதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரதிதேவி (ஓமந்தை மத்திய மருந்தக ஓய்வு பெற்ற வைத்திய அதிகாரி) , நடேசலிங்கம் (ஓய்வு பெற்ற கணக்காளர்), ஜெகதேவி (ஆயுள்வேத வைத்தியர்), சொர்ணலிங்கம், ஞானலிங்கம், ராஜசேரன்(பெறாமகன் - முன்னாள் தொழிநுட்ப உத்தியோகத்தர், நிக்கோட் ) ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜி(பேராதனை விவசாயபீட முன்னாள் விரிவுரையாளர்), சாந்தி, சந்திரவதனி, றீடா ஆகியோரின் அன்பு மாமியாரும் சயந்தன்(கனடா - வைத்தியபீட மாணவன்), விதூரசன் (பிரான்ஸ் - பொறியியல்பீட மாணவன்), காயத்திரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.10.2015 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னிப்பிளாஸா,
வன்னிக்கிளினிக், 24, கித்துள் வீதி,
குடியிருப்பு, வவுனியா. (19175)(14.15.16)

தகவல்:
குடும்பத்தினர்.
024 222 1177

## மரண அறிவித்தல்

### றொஹான் சஞ்ஜே ராஜு

(பிரதம பரிசோதகர் - மதுவரித்திணைக்களம் கிளிநொச்சி )



சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த றொஹான் சஞ்ஜே ராஜு (02. 10. 2015) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் ராஜசிங்கம் ராஜு (மதுவரி உதவி ஆணையாளர்) மற்றும் றெஜினா ஜோதிமலர் (கனடா) தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் ஜொசப்பின் தம்பதியினரின் அன்பு மருமகனும், யூட்ஸி ராஜுவின் (ஆசிரியை- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும், அன்றூசன்ஜீபன் (நோர்வே), அனற்சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரிகா (கனடா), தேவிகா (கனடா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயந்தன், மனோ, அஜித், ஜோ, ஜெய்சி, ஜூட், ஜொய்லின் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (06.10.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக சாவகச்சேரி கிறிஸ்தவ சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (c19152.)(2.15)

தகவல் :
குடும்பத்தினர்.

## முன்னாள் பிரதியமைச்சரின் மறைவுக்கு அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் இரங்கல்

கொழும்பு, ஒக்.05

கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும்,நீண்ட காலம் இராஜாங்க மற்றும் பிரதியமைச்சராகவும் செயற்பட்ட மர்ஹூம் ஏ.ஆர்.அப்துல் காதர் ஹாஜியாரின் மறைவு குறித்து ஆழ்ந்த துயரம் அடைவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சருமான எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா[illegible] தெரிவித்துள்ளார்.

மர்ஹூம் ஏ.ஆர்.அப்துல் காதர் ஹாஜியாரின் மறைவு குறித்து அவர் வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்,

மர்ஹூம் காதர் ஹாஜியார் மிகவும் அன்பானவர். விஷேடமாக அரசியலிலே இருந்து கொண்டு கண்டி மாவட்ட மக்களுக்காகப் பல்வேறுபட்ட அர்ப்பணிப்புக்களைச் செய்தவர். குறிப்பாக, பள்ளிவாசல்களைப் பராமரிப்பது,பள்ளிவாசல்களைக் கட்டுவது போன்ற பல விடயங்களில் அதிக அக்கறையோடு செயற்பட்டவர்.

அவரது மறைவினால் துன்பத்தோடும் துயரத்தோடும் வாடியுள்ள குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ-10)

## போக்குவரத்து விதி மீறல் சாரதிகளுக்கு அபராதம்

சாவகச்சேரி,ஒக். 5

தொலைபேசியில் கதைத்தபடி வாகனம் செலுத்திச் சென்ற சாரதி போக்குவரத்துப் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக் கொண்டார். குறித்த சாரதிக்கு எதிராகப் பொலிஸார் தாக்கல்செய்தவழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் 6 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் மேலும் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 10 ஆயிரத்து 500 ரூபா வீதமும், மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும், ஆபத்தை விளை விக்கும் வகையில் வாகனத்தைச் செலுத்திய சாரதிக்கு 6 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## சிறுவர் முதியோர் தின நிகழ்வு

வலி வடக்கு,ஒக்.05

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர் மற்றும் மாற்று வலுவுள்ளோர் தினக்கொண்டாட்டங்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலாளர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் த[illegible]மையில் பிரதேச செ[illegible]லக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகனும், சிறபபு விருந்தினராக சமூக சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட அலுவலர் க.செல்வமும் கலந்துகொள்வர். (ஐ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Apple Watch 2

கணினிகள் மற்றும் மொபைல் சாதனங்களுக்கு கிடைத்த பலத்த வரவேற்பைத் தொடர்ந்து அப்பிள் நிறுவனம் ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது. இதன்படி இந்த வருடம் ஏப்ரல் மாதத்தில் தனது முதலாவது ஸ்மார்ட் கடிகாரத்தை அறிமுகம் செய் திருந்தது. இதனைத் தொடர்ந்து Apple Watch 2 எனும் புதிய கைக் கடிகார வடிவமைப்பில் ஈடுபட்டுள்ள அந்நிறுவனம் குறித்த கடிகாரத்தை 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அறிமுகம் செய்யவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இரண்டாவது தலைமுறையாக வெளியாகவுள்ள இந்தக் கடிகாரத்தை வித்தியாசமாக வடி வமைத்துள்ள துடன், பல சிறப்பம்சங்களை உள்ளடக்கி குறைந்த விலையில் அறிமுகம் செய்யத் தீர்மானித் துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஸ்கைப்பின் புதிய பதிப்பில் புதிய வரப்பிரசாதங்கள்

உலகில் அதிகளவானவர்களால் பயன்படுத்துப்பட்டு வரும் இலவச வீடியோ மற்றும் குரல்வழி அழைப்புக்களை ஏற்படுத்த உதவும் ஸ்கைப்பின் புதிய பதிப்பை மைக்ரோசொப்ட் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

Skype 6.4 எனும் இப் புதிய பதிப்பில் அன்ரோயிட் இயங்குதளத்தைக் கொண்டு இயங்கும் ஸ்மார்ட் கடிகாரங்களுக்கான (Android Wear) புதிய வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதாவது நேரடியாக சட் செய்யும் வசதியுடன், குறும் செய்திகள் தொடர்பான அறிவிப்புக்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது.


அத்துடன் குரல்வழி மற்றும் வீடியோ அழைப்புக்களையும் Android Wear சாதனங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி தரப்பட்டுள்ளது.

## செல்லுமிடமெல்லாம் கூடவே வரும் மின்சார காற்றாலை

மின்சாரம் இல்லாத பகுதிகளுக்கு பயணங்களை மேற்கொள்ளும் போது மொபைல் சாதனங்களை சார்ஜ் செய்ய முடியாது தவிப்பவர்களுக்காக வந்துவிட்டது சிறிய காற்றாலை.

இதனை அயர்லாந்தைச் சேர்ந்த Einar மற்றும் Agust Agustsson எனும் சகோதரர்கள் தயாரித்துள்ளனர்.

பல வகையான காற்றாலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் Trinity 50 என்பது 650 கிராம் நிறை



உடையதாகவும் 30 சென்ரி மீற்றர்கள் உயரம் உடையதாகவும் இருப்பதுடன் 50 வாற்ஸ் மின்சக்தியை பிறப்பிக்க வல்லது. இது 7,500 mAh Lithiumdion மின்கலத்துக்கு ஒப்பானதாகும்.

Trinity 2500 ஆனது 300,000 mAh மின்கலத்துக்கு ஒப்பானதாகவும் இதன் மூலம் ஸ்மார்ட் கைப்பேசிகளை 160 தொடக்கம் 170 தடவைகள் வரை சார்ஜ் செய்யக்கூடிய மின்சக்தி பிறப்பிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர Trinity 400, Trinity 1000 வகை காற்றாலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

# பண்பட்ட வாசகர்களுக்கான விருதுகள் வடக்கில் 164 மாணவர்கள் கௌரவிப்பு







சாவகச்சேரி,ஒக்.05

பாடசாலை நூலகங்களைத் தமது கல்வித் தேவைக்காக பயன்படுத்திய மாணவர்கள்கள், பண்பட்ட வாசகர்களுக்கான விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுக் கொண்டனர்.

மார்ட்டீன் விக்கிரமசிங்க பவுண்டேசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் மத்திய கல்வி அமைச்சின், கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையினரால், வடமாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் யாழ்ப்பாணம், வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, தீவகம், முல்லைத்தீவு ஆகிய ஆறு கல்வி வலயங்களைச் சேர்ந்த 164 மாணவர்கள் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சுகிருஷ் ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

தமது கல்வித் தேவைக்காக பாடசாலை நூலகத்தை சிறப்பாக வாசிப்பதில் ஆர்வம் காட்டும் மாணவர்களாக விளங்குவோர் தொடர்பில் பரிந்துரை செய்யப்பட்ட மாணவர்கள் பண்பட்ட வாசகர்களுக்கான விருது -2014 இற்குத் தெரிவு செய்யப்பட்டு பதக்கங்களும் சான்றிதழ்களும் நூல்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மார்ட்டீன் விக்கிரமசிங்க பவுண்டேசன் நிறுவன செயலாளர் தயாபால ஜெயநந்தி, கல்வி நூல் வெளியீட்டு ஆலோசனை சபையின் செயலாளர் விஜித வெலகெதர, சபையின் தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் எஸ்.முரளிதரன், திட்டப் பணிப்பாளர் ஏ.எவ்.எம்.றாபி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.கே.விதானகே ஆகியோரும்-கௌரவ விருந்தினராக வேள்ட் விஷன் நிறுவன சாவகச்சேரி பிரதேச திட்ட முகாமையாளர் அ.கி.றொைசேரோ ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)

## அனுமதியின்றி மணல் ஏற்றியவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.05

அனுமதிப்பத்திரமின்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச்சென்ற அரியாலை கிழக்கைச் சேர்ந்த இளைஞரொருவர் யாழ்ப்பாணப் பொலிஸாரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு, யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஐம்பதாயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் தவறின் ஆறுமாதகாலச் சாதாரண சிறைத் தண்டனை விதித்தும் உத்தரவிட்டார். மணல் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் வாகனம் பதிவு செய்யப்பட்ட உரிமையாளருக்கு விடுவிக்கப்பட்டது. (ஐ-103)

## இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

கரணவாய், ஒக்.05

செம்பியன்பற்றுப் பகுதியில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எஸ்.ஞானகுமார்(வயது-48) எஸ்.ஆதவன் (வயது-23) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

குறித்த நபர்களின் வீட்டுக்குள் புகுந்த இனந்தெரியாத குழு இருவர் மீதும் கண்மூடித்தனமாக தாக்குதல் மேற்கொண்டதால் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். (ஐ-108)

(ஐ8-ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டச் சப்பாத்தி இல்லாததால் அடித்து கொல்லப்பட்ட சிறுமி

*தந்தையும், அண்ணனும் கைது*
*லாகூரில் கொடூரச் சம்பவம்*

லாகூர், ஒக்.5
வட்டமாகச் சப்பாத்தி தயாரிக்காததால் சிறுமி ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட கொடூரமான சம்பவமொன்று பாகிஸ்தானின் லாகூர் நகரில் இடம்பெற்றுள்ளது.
சர்வதேச சிறுவர் தினம் கடைப்பிடிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தச் கொடூரச் சம்பவம் நிகழ்ந்துள்ளமை பலரையும் அதிர்ச்சியிலும் சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.
பாகிஸ்தானின் லாகூரில் உள்ள அஷிம்பார்க் பகுதியை சேர்ந்த அனீகா என்ற சிறுமியே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.
வட்ட வடிவமாக சப்பாத்தி தயாரிக்காததால் கோபமுற்ற அவளது தந்தையும், அண்ணனும் ஆத்திரம் அடைந்து அனிகாவை அடித்து உதைத்தனர்.
வலி தாங்காமல் சிறுமி அனீகா அலறி துடித்ததையும் பொருட்படுத்தாத அவர்கள் கண் மூடித்தனமாக அடித்து தொடர்ந்தும் தாக்கினர். அதனால் அவள் மயக்கம் அடைந்தாள்.
இதனையடுத்து குறித்த சிறுமி உடனடியாக அருகிலிருந்த மருத்துவமனையில் சிகிச்சைகளுக்காக சேர்க்கப்பட்டாள். ஆயினும் மருத்துவமனைக்குக் கொண்டு வரும் வழியிலேயே குறித்த சிறுமி இறந்து விட்டாள் என்று அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.
அதைத் தொடர்ந்து குறித்த சிறுமியின் தந்தை மற்றும் அண்ணன் மீது கொலை வழக்குப் பதிவு செய்து அவர்களைக் கைது செய்தனர்.
பாகிஸ்தானில் இது போன்ற பல கொலைகள் நடைபெறுகின்றன என்றும், அதை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தாமல், மறைத்து உடல்களைப் புதைத்து விடுகின்றனர் என்றும் சமூக நல ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.
உலகில் தீவிரவாதிகளின் தாக்குதல்களால் இறக்கும் அப்பாவி மக்களைப் பற்றி சிந்தித்து, அதனுடன் தொடர்புடையவர்களுக்கு தீவிர தண்டனை வழங்கும் சர்வதேசம், இப்படியான குடும்ப வன்முறைகளால் உயிரிழக்கும் குழந்தைகளின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு அதிகபட்சமாக தூக்குத் தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
சிறுவர்களின் உரிமைகள் மற்றும் அவர்களது சந்தோசங்கள் பறிக்கப்படுவதும் அவர்கள் குடும்ப வன்முறைகளுக்கு உள்ளாவதும் கீழைத்தேய நாடுகளில் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இதன் அதிகபட்சமாக அவர்களின் பிஞ்சு உயிர்கள் பறிக்கப்படும் கொடூரம் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றது என்பது வேதனைக்குரிய விடயம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற)

# குவாத்தமாலா மண்

# 73 பேர் ச

## 350 பேர் வரையில் காணவி





குவாத்தமாலா, ஒக்.5
மத்திய அமெரிக்காவின் குவாத்தமாலாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73ஆக உயர்ந்துள்ளது என்று அந்த நாட்டு அரசு அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.
350 பேர் 50 அடி ஆழ இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர் என்றும், உயிரிழப்புக்களின் எண்ணிக்கை உயரும் எனவும் அஞ்சப்படுகின்றது.
தலைநகர் குவாத்தமாலா நகருக்கு அருகிலுள்ள எல் காம்ப்ரே தோஸ் என்கிற மலைக் கிராமத்தில், பெய்த கனமழையால் அங்கிருந்த பெரிய பாறைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, குடியிருப்புக்களின் மீது சரிந்து விழுந்து கிராமத்தையே முடியுள்ளது.
தற்போது அந்தப் பகுதியில் மீட்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.
மண்ணுக்கு அடியில் சிக்கியவர்களை மீட்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளதோடு, சுமார் ஆயிரத்து 800 இராணுவ வீரர்களும், தீயணைப்பு வீரர்களும் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

## துப்பாக்கி கட்டுப்பாட்டுச் சட்டம் அவசியம் தேவை

*ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவிப்பு*

வொஷிங்டன், ஒக்.5
எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் துப்பாக்கி கட்டுப்பாடுச் சட்டத்துக்கு ஆதரவு அளிப்போருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா.
கடந்த வியாழக்கிழமை ஒரேகான் மாகாணத்தில் உள்ள சமூக கல்லூரிக்குள் துப்பாக்கியுடன் புகுந்த மர்மநபர் மாணவர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிர யோகம் நடத்தியதில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 20க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.
இந்தச் சம்பவம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் அதற்கு ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்திருந்தார்.
இதுகுறித்து அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-
சட்டங்களை திருத்த வேண்டியது அவசியம். இதற்கு எதிர்க்கட்சிகள் தடையாக உள்ளன.
நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் துப்பாக்கி கட்டுப்பாடுச் சட்டத்துக்கு ஆதரவு அளிப்போருக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். மாதம் மாதம் துப்பாக்கிச் சூடு நடைபெறும் முன்னேறிய நாடு அமெரிக்கா தான். - என்றார். (ற)

## வைத்தியசாலையின் மீது குண்டுஸ் நகரில் தாக்குதல்

*19 பேர் சாவு; 37 பேர் காயம்*



காபூல், ஒக்.5
ஆப்கனில் குண்டுஸ் நகரில் உள்ள வைத்தியசாலை ஒன்றின்மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் 37 பேர் வரையில் காயமடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
அமெரிக்க வான் படையினரே தாக்குதல் நடத்தியிருந்தனர் என்று கூறப்படுகின்றது. அதேவேளை, குறித்த விமானத் தாக்குதலுக்கு தாங்கள் பொறுப்பாக இருக்கக் கூடும் என்று அமெரிக்க இராணுவம் தெரிவித்திருந்தது.
குண்டுஸ் நகரை கடந்த வாரம் தலிபான் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியிருந்தனர். எனினும் மீளவும் அந்த நகர் கைப்பற்றப்பட்டது என்று அரச படைகள் அறிவித்திருந்தன.
இருந்தபோதும் தற்போது அங்கு தொடர்ந்தும் தலிபான் மற்றும் அரச படையினருக்கு இடையில் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. (ற)

## சிறந்த மாண

நியூயோர்க், ஒக்.5
அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில
ஜோஸ் நகரில் உள்ள லேலேண்ட் ப
தினம்தோறும் பாடசாலைக்கு வந்து
கவனிக்கும் பூனை ஒன்றுக்கு றந்த ம
வழங்கப்பட்டுள்ளமை அனைவரையு
ஆழ்த்தியுள்ளது.
2009ஆம் ஆண்டு பூபா என்ற பூனை
ஆம்பர் மரியந்தால் என்ற பெண்ணின் ம
மார்க் ஆகியோர் அந்த பகுதியிலுள்ள
உயர்நிலைப் பாடசாலையில் படித்து
அவர்களுடன் தினமும் பூபாவும் வீட்டில்
தினமும் இவர்களுடன் பாடசாலைக்குச் செ
கியது. இந்தநிலையில் அண்மையில் பா
படிக்கும் மாணவர்களுக்கு, அடையாள அ
பூபாவுக்கு வழங்கியுள்ளனர். கடந்த வருட
வகுப்புகள் மட்டுமன்றி பாடசாலையில் ந
வைப்பது இல்லை என பாடசாலை நிர்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ன் சரிவு

சாவு

பில்லை





# இந்தோனேஷிய காட்டுத் தீ வரலாற்றில் மோசமானது

## நாஸா விஞ்ஞானிகள்

கோலாலம்பூர், ஒக்.5

இந்தோனேஷியாவில் ஏற்பட்டிருக்கும் காட்டுத் தீயின் காரணமாக தெற்காசியா முழுவதும் பரவிவரும் கரும்புகை, வரலாற்றில் இல்லாத வகையில் மோசமானதாகக் காணப்படுகின்றது என்று நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். தொடர்ச்சியாக மழையே இல்லாமல் இருப்பது நிலைமையை மேலும் மோசமாக்குவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். 1977 ஆண்டு சிங்கப்பூர், தென்கிழக்கு-சுமத்திரா ஆகிய பகுதிகளில் கடுமையான காற்று மாசுபாடு ஏற்பட்டது. தற்போது கிட்டத்தட்ட அந்த நிலையில் இந்த நாடுகள் எட்டியிருப்பதாகக் கூறப்படுகிறது. காட்டுத் தீயினால் சிங்கப்பூரின் பெரும் பாலான பகுதிகளில் இன்று கரும்புகை சூழ்ந்துள்ளது.

இந்தக் கரும் புகை மண்டலத்தால் சிங்கப்பூர் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு, அங்குள்ள பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை சிங்கப்பூர் மக்களை சுவாசக் கோளாறு தொடர்பான உதவிகளைப் பெற மருத்துவமனைகளை அணுகுமாறு சிங்கப்பூரின் சுகாதார அமைச்சு அந்த நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தோனேஷியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளும் தமது நாட்டுப் பிரசைகளையும் மருத்துவ உதவிகளைப் பெற மருத்துவமனைகளை நாடுமாறு கடந்த சில வாரங்களாக அந்நாடுகளின் அரச கோரிக்கை விடுத்திருந்தன. (ற



(தீ பற்றியுள்ள காட்டுப் பகுதியில் ஹெலிகொப்டர் மூலம் நீர் விசிறிடப்படுகின்றது.)

## ஆளில்லாத விமானம் மூலம் ஆபிரிக்காவுக்குத் தடுப்பூசி

*பில் கேட்ஸின் அறக்கட்டளை திட்டம்*

ஆபிரிக்க நாடுகளில் 'டிரோன்' எனப்படும் ஆளில்லாத விமானங்கள் மூலம் தடுப்பூசி மருந்துகளை விநியோகிக்க மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்க தொழிலதிபரும், உலகின் முதல்தர பணக்காரருமான பில்கேட்ஸ் மெலின்டா கேட்ஸ் என்ற அறக்கட்டளைநிறுவனத்தைநடத்தி வருகிறார். இந்த நிறுவனம் உலக நாடுகளுக்கு தடுப்பூசி மருந்துகளை விநியோகம் செய்து வருகிறது. ஆனால் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகள் இன்னும் முன்னேற்ற மடையாது உள்ளமையால் அங்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் தாழ் மட்டத்திலேயே காணப்படுகின்றன.

அது போன்ற ஆபிரிக்க நாடுகளில் டிரோன் எனப்படும் ஆளில்லாத விமானங்கள் மூலம் தடுப்பூசி மருந்துகளை விநியோகிக்க பில்கேட்ஸ் அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது.

அதற்கான சாத்தியக் கூறு ஆய்வை மெலின்டா கேட்ஸ் அறக்கட்டளை நிறுவனம் அமெரிக்க டிரோன் நிறுவனம் ஒன்றின் துணையுடன் நடத்தியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு அனுமதி கிடைத்தால் தொலைதூர ஆபிரிக்க கிராமங்களுக்கு டிரோன் மூலம் தடுப்பூசி மருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆபிரிக்காவின் சுகாதார நிலை குறிப்பிடத்தக்களவு மாற்றத்தை எதிர்நோக்கும் என நம்பப்படுகின்றது. (ற)

# கின்னஸ் சாதனைக்காக திரண்ட 4 ,600 காந்திகள்

பெங்களூர், ஒக்.5

கின்னஸ் உலக சாதனை முயற்சியாக 4 ஆயிரத்து 600 மாணவ-மாணவியர் காந்தி வேடத்தில் ஒரே இடத்தில் கூடினர். காந்தி ஜெயந்தி தினத்தை முன்னிட்டு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

காந்தியைப்போல் வேட்டி, துண்டு, கைத்தடி, கண்ணாடி ஆகியவற்றை அணிந்து ஒரே இடத்தில் சுமார் 4 ஆயிரம் மாணவ-மாணவியரை கூட வைத்து, புதிய உலக சாதனை படைக்க பள்ளியின் நிர்வாகிகள் ஏற்பாடு செய்தனர். உலக சாதனைகளை அங்கீகரித்து, பதிவு செய்யும் கின்னஸ் நிறுவனத்துக்கும் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டது.

காந்தியின் பேர்த்தியான சுமித்ரா காந்தி நேரில் கண்டு நெகிழ்ச்சி அடைந்தார்.

காந்தியின் உதவியாளராக இருந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த கோபால் என்பவரும் இந்த நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்றார். இதற்காக சுமார் 80 லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டுள்ளது. இந்த சாதனையை கின்னஸ் நிறுவனமும் அங்கீகரித்துள்ளது. (ந-ரி4)





# ஐ.எஸ். தலைமையகம் தாக்குதலில் தரைமட்டம்

*ரஷ்ய இராணுவம் தெரிவிப்பு*

மொஸ்கோ, ஒக்.5

சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாத அமைப்புக்கு சொந்தமான 9 முக்கிய நிலைகள் மற்றும் ராக்காவுக்கு அருகே உள்ள ஐ.எஸ். தலைமையகம் என்பன முற்றிலுமாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்று ரஷ்ய இராணுவம் அறிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரமாக மேற்கொள்ளப்பட்ட சுகோய் போர் விமானங்கள் மூலமான தாக்குதலிலேயே அவை தரைமட்டமாக்கப்பட்டுள்ளன என்றும் தாக்குதல்களில் பீற்றப்-500 ரக குண்டுகளைப் பயன்படுத்தப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் ஏற்கனவே வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை பதுக்கி வைத்திருந்தனர் என்றும் அதன் மீது குண்டுகள் வீசப்பட்டதால் பெரும் அழிவு ஏற்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

குறிப்பாக சிரியாவின் வடமேற்கு பகுதியில் இத்லிப் மாகாண எல்லையில் அமைந்துள்ள ஜிசர் அல்-சுகுர் நகரத்தில் மலைப் பகுதியில் வெடிபொருள்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் பதுக்கி வைத்திருந்தனர் என்றும்-அதை ரஷ்யா தனது சுகோய்-24 ரக குண்டு வீசும் போர் விமானங்களால் தாக்கி அழித்துள்ளது என்றும், சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த பகுதிகள் தொடர்ந்து ஆளில்லாத விமானங்கள் மூலம் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்றும் ரஷ்ய இராணுவம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ற)

# சிலியில் அடுத்தடுத்து நிலநடுக்கம்

லண்டன், ஒக்.5

சிலி நாட்டில் நேற்று உள்ளூர் நேரப்படி அதிகாலை 3 மணியளவில் அடுத்தடுத்து 2 முறை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 ஆகவும் அதையடுத்து 20 நிமிடங்கள் கழித்து ஏற்பட்ட நிலநடுக்கம் 6.1 ஆகவும் பதிவாகியுள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

அடுத்தடுத்து ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தின் பாதிப்பு தெற்கு அமெரிக்காவிலும் உணரப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

எனினும் இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்போ? காயங்களோ? ஏற்படவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (ற)

# ணவன் விருது பெற்ற பூனை



...ாநிலத்திலுள்ள சான்...ட் பாடசாலையில்...வந்து பாடங்களை...த மாணவன் விருது...ரையும் வியப்பில்...

...யை தத்தெடுத்த... மாணவர்களான மேத்யூ,...லுள்ள லேலேண்ட்...து வருகின்றனர்.

...வீட்டில் இருக்காமல்...குச் செல்லத் தொடங்...யில் பாடசாலையில்...பாள அட்டைக்காக புகைப்படம் எடுக்கப்பட்டபோது முதல் அடையாள அட்டையை... வருடத்துக்கான சிறந்த மாணவன் விருதும் பூபாவுக்குத் தான் வழங்கப்பட்டுள்ளது. ...யில் நடைபெறும் விளையாட்டுப் போட்டி, கலைநிகழ்ச்சிகள் எதையும் பூபா விட்டு... நிர்வாகிகள் கூறுகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ லக்ஸ்மன்

# மக்களைப் பெரிதும் கவர்ந்த மாற்றுத் திறனாளிகளின் கண்காட்சி

மாற்றுத்திறனாளிகள் சமூகத்தின் ஓர் அங்கம் என்பது மறுப்பதற்கில்லை. எனவே அவர்களின் தேவைகளுக்குக் கை கொடுத்து ஸ்திரமான வாழ்க்கையை உறு திப்படுத்த அனைத்து மக்களும் முன்வர வேண்டும். அவர்களுக்கென தற்சமயம் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை அமைக்கும் பணியில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் ஈடுபட்டு வருகின்றது. அதற்கான உதவிகளை அவர்கள் வசதி கூடிய மக்களிடமிருந்தும் புலம் பெயர்ந்த உறவுகளிடமிருந்தும் எதிர் பார்க்கின்றனர் என வலுவிழந்தவருக்கான புனர்வாழ்வுச் சங்கம் நல்லூர் உற்சவத்தின் போது நடத்திய கண்காட்சியின் போது அதன் பொறுப்பாளர் ந.ஜெயக்குமாரி குறிப்பிட்டார். சங்கத்தின் சார்பில் இடம்பெற்ற கண்காட்சியில் அவர்களின் உற்பத்திப் பொருள்கள் பெருமளவில் காட்சிப்படுத்தப்படவில்லை. எனினும் காட்சியில் இடம்பெற்றவை தரமானதாகவும் மக்களைக் கவரக்கூடியதாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிய நிறக் கடதாசிகளைக் கொண்டு மிகவும் மெல்லியதாக வெட்டப்பட்ட கடதாசிகளில் உருவாக்கப்பட்ட பூக்கள், மிருகங்களினதும், சிறுவர்களைக் கவரக் கூடிய வேறு உருவங்களினாலான வாழ்த்து அட்டைகள் ரொம்பவும் பிரமாதமாகக் காணப்பட்டன. கலைகளை அவர்கள் எவ்வாறு நேசிக்கிறார்கள், பிறருக்கு அதை எவ்வாறு கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் என்பதை அந்தத் தயாரிப்புக்களைப் பார்வையிட்ட நூற்றுக் கணக்கான மக்கள் உணர்ந்துள்ளனர். மாற்றுத்திறனாளிகளிடம் உள்ள திறமைகள் வெளிக் கொணரப்படுவது அவசியம் எனவும் சிலர் தெரிவித்தனர். கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள வாழ்த்து அட்டைகளுக்கு ஈடாக அவை காணப்பட்டன. விலையும் பெரிய அளவில் இல்லை. ரூபா 75, ஆகக் கூடிய விலையாக இருந்தது. கழிவுப்பொருள்களையும் பயன்படுத்தலாம் என்பதை அவர்களின் தயாரிப்புக்களான அலங்காரப் பொருள்கள் சான்று பகர்ந்தன. தவிர ஆடைகள் தயாரிப்பதிலும் நன்கு பயிற்சி பெற்றுள்ளனர் என்ற தகவலை அங்கிருந்த பெண்களுக்கான ஆடைப்பகுதி எடுத்துக் காட்டியது. ஐசிங்கேக் வகைகள் போன்ற அவர் களின் தயாரிப்புக்கள் தேர்ச்சியடைந்த பயிற்சியாளர்களுக்கு நிகராக விளங்கின.



> “தமது ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடியதான, பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் பல்வேறு தரம் மிக்க பொருள்களைக் கொண்ட பெரிய கண் காட்சி ஒன்றை மாற்றுத்திறனாளிகளால் மக்களுக்குத் தரமுடியும் என்ற நம்பிக்கையை இந்தச் சிறிய கண்காட்சி புலப்படுத்தியுள்ளது.”

சிறிய உற்பத்திகளைச் செய்யக்கூடியதான பயிற்சிகள் அவர்களுக்கு வழங்கப்படுவதாகவும் பெருமளவு மாற்றுத்திறனாளிகள் இந்தப் பயிற்சிகளைப் பெற்றிருப்பதாகவும் தமது வீடுகளில் தங்கியுள்ளவர்கள் தினமும் நிலையத்துக்கு வந்து பயிற்சிகளில் கலந்து கொள்வதுடன் விடுதியில் தங்கியிருப்போரும் இவ்வாறான சிறுகைத்தொழில் பயிற்சிகளைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கும் ஜெயக்குமாரி தம்மைப் போன்றவர்களுக்கு பெரிய அளவில் மக்களின் உதவிக் கரங்கள் நீள்வதில்லை என்றும் குறிப்பிட்டார். இவர்கள் தங்களது வாழ்வுக்கு உதவியாக சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் வெள்ளைப் பிரம்பு போன்ற பொருள்களைக் கொள்வனவு செய்து விற்பதுண்டு எனவும் தெரிவிக்கப் பட்டது. மாற்றுத் திறனாளிகளால் உற்பத்தி பண்ணப்பட்ட பொருள்கள் கணிசமான மலிவு விலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. காட்சிக்கு வந்திருந்தவர்களும், உதவவேண்டும் என்ற மனப்பாங்குடன் சிலவற்றைக் கொள்வனவு செய்து கொண்டனர்.

மிகக் குறைந்த அளவிலான பொருள்களைக் கொண்டதாக கண்காட்சி அமைந்த போதும் தமது மனம் நிறைந்த ஒரு கண்காட்சியாகவே இதனை அவர்கள் கருதிக்கொண்டதாக எண்ண முடிந்தது. பல கஷ்டங்களின் மத்தியிலும் நல்லமுறையில் தமது பயிற்சிகளை முடித்துக்கொண்டு தம்மால் முடிந்த அளவுக்கு சிறிய அளவிலான இந்தக் கண்காட்சியை அவர்கள் ஏற்படுத்தியிருந்தனர். அவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடியதான, பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் பல்வேறு தரம் மிக்க பொருள்களைக் கொண்ட பெரிய கண்காட்சி ஒன்றை மாற்றுத்திறனாளிகளால் மக்களுக்குத் தரமுடியும் என்ற நம்பிக்கையை இந்தச் சிறிய கண்காட்சி புலப்படுத்தி யுள்ளது. அரசு, மாகாணசபை என்பன இவர்களின் திறமையை வளர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

---

# எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவும் தீவா காணி அதிர்ஷ்டம்



தமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப தமக்கென காணியொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதே அனைவரதும் கனவாக உள்ளது. தீவாவின் மூன்று பெருமைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு இந்தக் கனவு நனவாகியுள்ளது.

இலங்கையின் மிக வெற்றிகரமான நுகர்வுப் பொருட்கள் நிறுவனங்களில் ஒன்றான ஹேமாஸ், ஒளிமயமான நாளையை உருவாக்கும் வகையில் தொடர்ந்து அதன் வாடிக்கையாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்திவரும் பெருமையைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

தீவா நாட்காட்டியின் மிகவும் [illegible] பார்ப்புக்குரிய நிகழ்வாக [illegible] காணி அதிர்ஷ்டம் ஊக்குவிப்புத் திட்டம் அமைந்துள்ளதுடன், சமூகத்தின் மீது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சிறந்த வழிமுறையாகவும் இது அமைந்துள்ளது.

ஹேமாஸ் மனுபக்டரிங் நிறுவனத்தின் முதற்தர டிடர்ஜன்ட் சலவைத்தூள் வர்த்தக நாமமான தீவா மூலம் கடந்த மே 1ஆம் திகதி முதல் ஜூலை 31 ஆம் திகதி வரை முன்னெடுத்த வருடாந்த தீவா காணி அதிர்ஷ்டம் மாபெரும் நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டத்தில் வெற்றி பெற்ற மூன்று வெற்றியாளர்களுக்கு அண்மை யில் காணிஉறுதிகள்வழங்கப்பட்டிருந்தன. 2015 தீவா காணி அதிர்ஷ்டம் ஊக்குவிப்புத்திட்ட காலப் பகுதியில் தீவா அதன் பெருமைக்குரிய வாடிக்கையாளர்களுக்கு வாராந்தம் பெறுமதி வாய்ந்த பரிசில்களை வெல்லும் வாய்ப்பை வழங்கியிருந்தது. இதன் போது 13 வெற்றியாளர்களுக்குத் தங்க நாணயங்களும், 90 தினசரி வெற்றியாளர்களுக்கு தலா ரூ.10, 000 வீதமும் வழங்கப்பட்டிருந்தன. பெறுமதி வாய்ந்த தீவாவை வழங்குவதில் ஒரு தசாப்தத்துக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட வர்த்தகநாமம் எனும் ரீதியில், தீவா அதன் விசுவாசமிக்க வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகளையும் வழங்கி வருகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் கொழும்பை அண்மித்து காணிகளைப் பரிசளிப்பதன் ஊடாக ஒருடசினுக்கும் அதிகமான வெற்றியாளர்கள் தம் வாழ்க்கையை மாற்[illegible] வது வருடமாக தீவா அதன் காணி [illegible] னெடுத்ததுடன், 500 இற்கும் மேற்பட்ட வெற்றியாளர்கள் பணப் பரிசில்கள் மற்றும் ஏனைய பெறுமதி வாய்ந்த வெகுமதிகளை வென்றுள்ளனர்.

இந்த வருட ஊக்குவிப்புத் திட்டமும் தீவா பாவனையாளர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றிருந்தது. கொழும்பை அண்மித்து பெறுமதி வாய்ந்த காணிகளை பரிசளிக்கும் வகையில் கடந்த 2011 ஆம் ஆண்டில், முன்னெடுக்கப்பட்ட வட்டத்துக்கு காணி எனும் முதலாவது தீவாவாடிக்கையாளர் ஊக்குவிப்புத் திட்டத்தை ஒத்ததாக, கடந்த 2012ஆம் ஆண்டில் நுவனக்காரியன்ட இடமக் எனும் திட்டத்தில் பங்கேற்குமாறு தீவா வாடிக்கையாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் கடந்த 2013ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட தீவாவின் புதையலுடன் காணி எனும் மூன்றாவது மாபெரும் வாடிக்கையாளர் ஊக்குவிப்புத் திட்டத்தின் ஊடாக நான்கு காணித்துண்டுகள் வெற்றியாளர்களுக்குப் பரிசளிக்கப்பட்டன. கடந்தாண்டு மட்டும் ஐந்து வாடிக்கையாளர்கள் காணி உரிமையாளர்கள் எனும்பெருமையைப்பெற்றிருந்ததுடன், இதுவரை 16 அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளர்கள் காணித் துண்டுகளை வென்றெடுத்துள்ளனர்.

எமது விசுவாசமிக்க நுகர்வோர் தளத்தை நாம் முழுமனதுடன் மதிப்பதுடன், ஒவ்வொரு தீவா ஊக்குவிப்புத் திட்டத்தின் ஊடாகவும் அவர்களது வாழ்க்கையை மேம்[illegible] வழங்குவதே எம்து எதிர்பார்ப்பாக அமைந்திருந்தது.

வீடொன்றை நிர்மாணிக்க, காணியொன்றைச் சொந்தமாக்கிக் கொள்வதே பெரும்பாலான இலங்கையர்களின் வாழ்நாள் கனவாக உள்ளதுடன், எமது தீவா காணி அதிர்ஷ்டம் திட்டம் ஊடாக இந்தக் கனவை நனவாக்குவதற்கான தளத்தை வழங்கி வருகிறோம் என ஹேமாஸ் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஃபியோனா முனசிங்க தெரிவித்தார்.

மூன்றாவது காணியை வென்ற மாதம்பே பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவியான ஷர்னிகா ரட்னகுமார் தமது மகிழ்ச்சியை எம்மோடு இவ்வாறு பகிர்ந்து கொண்டார், சில நிறுவனங்கள் பரிசில்களை வெறும் பரிசில்களாக மட்டுமே வழங்குகிறது. ஆனால் தீவா மாத்திரமே அதன் காணி வெகுமதியின் ஊடாக ஒரு புதிய வாழ்க்கையைப் பரிசளிக்கிறது. இந்தப் பரிசானது எனக்கும், எனது குடும்பத்துக்கும் எல்லையற்ற சந்தோசத்தை அளித்துள்ளது. எமது எதிர்காலத்தைப் பாதுகாத்த தீவாவுக்கு எனது மனமார்ந்த நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். கொழும்பில் காணியொன்றைச் சொந்தமாக்கிக் கொள்ளும் எமது கனவு தற்போது நனவாகியுள்ளது என்றார்.

இந்த வருடத்தின் காணி அதிர்ஷ்டம் திட்டத்தின் முதல் வெற்றியாளரான கேகாலை துலிகா பிரியதர்ஷினி கருத்துத் தெரிவிக்கையில், இந்தப் போட்டியில் நான் கடந்த பல ஆண்டுகளாகப் பங்குபற்றி வந்ததுடன், நான் வெற்றியீட்டுவேன் எனக் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை. இந்தக் காணியானது நிச்சயமாக எமது வாழ்க்கையை மாற்றிய மைப்பதுடன், எமது குழந்தைகளும் வளம் மிக்க எதிர்காலத்தை ஆவலுடன் [illegible] (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூனைக்கு மணி கட்டுவது யார்?

சுற்றாடல் சுத்தமாக இருக்க வேண்டியது மிக அவசியமே. அதற்காக சுகாதார அதிகாரிகள் வீடுகளுக்குச் சென்று வளவுகளை, காணிகளை பார்வையிட்டு துப்புரவு செய்யும் வண்ணம் அறிவுரை கூறுவதும் நல்லதே. குளியல் அறையிலிருந்து 500 யார் தூரமுள்ள தென்னை, வாழை மரங்களுக்கு சிறு பள்ளம் வெட்டி நீரை ஓடவைப்பது வழமையான செயல் அதுவும் மண் வாய்க்காலில் நீர் ஓடிய பின்னர் தரை காய்ந்து விடும். அப்படியான வாய்க் காலில் நீர் நின்றதாக எனது நண்பர் வீட்டிலே (நாயன் மார்கட்டு) அதனைக் காட்டி காவல் துறையினர் (பொலிஸார்) முழுச்சிங்களத்தில் எழுதி அவரை காவல் நிலையம் வரச்சொல்லி அவரை அரை நாளாகக் காக்க வைத்து குற்றப் பணம் உடன் அற விட்டு பணம் வாங்கிக் கொண்டனர். இது என்ன பொலிஸ் குற்றமா? வீட்டிலே பயன்தரும் மரத்துக்கு தண்ணீர் போவதைக் குற்ற மென கண்டவர்களுக்கு தெருவில் ஆழமான வாய்க்காலில் கறுப்பு நிற சேறும், தண்ணீரும், குப்பைகளும் தேங்கி நிற்பது தெரியவில்லையா? யாழ். போதனா வைத்திய சாலை, ஆரியகுளத்து நாகவிகாரை இவைகளை சுற்றியுள்ள வாய்க்கால் எல்லாம் எந்நேரமும் சேறும், குப்பையுமாகவே இருப்பதைக் காணலாம். இங்கு டெங்கு நுளம்பு வராதா? நல்லூர்ப் பகுதியில் உள்ள பெரிய கால் வாயை மாநகரசபை ஊழியர்கள் சுத்தம் செய் வதாக ஒரு பாசாங்கு காட்டி துப்புரவு செய்தார்கள். துப்புரவு செய்த குப்பைகளை எரிக்க வேண்டும். அல்லது வெளியே (தெருவில்) அள்ளி போட்டிருக்க வேண்டும். அரைகுறையாக செய்து அப்படியே குப் பைகளை குவித்து விட்டு போய்விட்டனர். இதனால் என்ன பயன். வீடுகளுக்கு வந்து முக்கிய அவசர தேவை என வெளியே போனவர்களின் வீடுகளுக்கு மஞ்சள் சிவப்பு என கலரில் நோட்டிஸ் ஒட்டிய சுகாதார அதிகாரிகள் இவைகளுக்கு என்ன கலர் நோட்டிஸ் ஒட்டப்போகின்றார்கள். எல்லாவற்றுக் கும் மக்களை பயம் காட்டி எதற்கெடுத்தாலும் குற்றப் பணமென அறவிடுவதை விட்டு, அரசு மக்களுக்கு ஒரு வழி காட்டியாக இருக்க வேண்டும். பணம், ஆள் பலம்,போதிய வாகனக் கருவி வசதிகள் எல் லாம் உள்ள அரசு தெருவில் தேங்கி நிற்கும் கழிவு நீரை ஓடவைக்கலாமே. ஆழமான வாய்க்கால் வெட்டி அதனை மூடாமல் ஓர் அரசு ஓடிவிட்டது. அதனை சிமெந்து கல்லால் மூடியாகப் போட வேண்டாம், இரும்புக் கம்பியினால் வலைகள் செய்து மூடி விடலாம் அல்லவா. இதனால் குப்பைகள் கழிவுகள் விழாமல் ஓரளவு சுத்தமாக கால்வாய் இருக்கும் அல்லவா. கிட்டு பூங்காவை எழில் ஆக்க முன்னர் மாநகரத் தெருவை, வாய்க்காலை துப்புரவு செய்து எழில் ஆக்குங்கள். நகரை சுத்தமாக வைத்துக் கொண்டு அதிகாரிகள் மக்களுக்கு கட்டளை இடலாம். மாநகரசபையும், மாகாண சபையும், அதிகாரிகளும் குடிமக்களுக்காக சேவை செய்ய வேண்டும். எமது நாட்டிலே எல்லாம் தலை கீழாகவே உள்ளது. நகரங்களிலுள்ள கழிவுநீரை ஓடவைத்தாலே 80% வீதம் டெங்கு அழிந்து விடும். வீட்டிலே குப்பைகளை எரிக்க வசதி இல்லாதவர்கள் மாநகர சபையின் குப்பை லொறியிலோ அல்லது வண்டி யிலோ குப்பைகளை கொட்ட (கொடுக்க) போனால் அந்த ஊழியர்கள் கப்பம் கேட்கின்றனர். மாநகர சபைக்கு ஒவ்வொன்றுக்கும் வரிகளும் கட்டி இதையும் கொடுக்க எல்லா மக்களாலும் முடி யுமா? இவைகளை யார் கட்டுப்படுத்துவது? இதனை உயர் அதிகாரிகளுக்கு மக்கள் முறையிட்ட போதும் அவை செவிடன் காதில் ஊதிய சங்கு கதையாகவே உள்ளது. இவர்களுக்கு யார் நோட்டீஸ் ஒட்டுவது, யார் தண்டம் அறவிடுவது ?தமிழ் மக்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதம் கொடுக்கின்றனர். இதனை என்னவென்று சொல்வது? மொத்தத்தில் எல்லா வழியாலும் தமிழனுக்கு வேதனையன்றி நிம்மதி இல்லை. பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற கதையாகவே யாவும் உள் ளது.

*யாழ். வீமன்*

# காலம்தான் பதில் கூறவேண்டும்

இலங்கையில் நடந்த இறுதிப் போரின் முக்கிய பங்காளிகள் அமெரிக்காவும் இந்தியாவும்தான். இலங்கையில் கொடுங்கோல் ஆட்சியாளருக்கு சகல வழிகளிலும் உதவியவர்கள் இவர்களே. இதற்கு அவர்கள் கூறிக் கொண்ட சாட்டு பயங்கரவாத ஒழிப்பு. எது பயங்கரவாதம்? உரிமை கேட்பது பயங்கரவாதமா? இன அழிப்புச் செய்வதா ஜனநாயகம்? பதினைந்தாம் நூற்றாண்டு வரை அமெரிக்கா என்று ஒரு நாடே இருந்திருக்கவில்லை. கொலம்பஸின் வருகைக்கு பின் அங்கு வந்து குடியேறிய ஆங்கிலேயர்கள் அந்த நாட்டின் பூர்வீகக் குடிகளான செவ்விந்தியர்களை இனச்சங்காரம் செய்து அந்த நாட்டைத் தம்முடைய தாக்கிக் கொண் டதுடன் அவர்களே இன்று சர்வ தேசத்தின் பொலிஸ்காரர்களாகவும் காட்டிக் கொள்கிறார்கள். இன்றும் கூட அங்கு வாழும் கறுப்பின மக்கள் நிறவெறியையும், இடர்பாடுகளையும் எதிர்கொண்டு வருகிறார்கள். இதைத் தடுப்பதற்கு அமெரிக்க ஆட்சியாளர்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. அடுத்து இந்தியா தனிப் பெரும் நாடாக இருந்திருக்கவில்லை. சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள், பாளையக் காரர்கள், ஜமீன்தார்கள் என்பவர்களின் ஆட்சியில் பல்லின மக்கள் வாழ்ந்த நாடு, அந்த நாடு இன்று இந்து மத, இந்திமொழி. வெறிபிடித்த ஆரியர்களின் கைகளில் சிக்கிக்கொண்டுள்ளது. இந்தியாவின் ஒரு மாநிலமான ஜம்முகாஷ்மீரில் வாழும் மக்களில் பெரும்பான்மையினர் இஸ்லாமியர்கள். இவர்களை இந்துக்களும் இந்தியப் படையினரும் துன்புறுத்துவதும், கொலை செய்வதும் சர்வசாதாரண நிகழ்வாகி விட்டது. அது மட்டுமல்ல 1987 ஆம் ஆண்டு அமைதிப் படை என்று இங்கு வந்த வானரப் படையினர் செய்த வன்கொடுமைகளை நேரடியாகச் சந்தித்தவர்கள் எம் மக்கள் இறுதிப் போரிலும் இவர்கள் நேரடியாகவே ஈடுபட்டார்கள். நிலைமை இவ்வாறு இருக்க இந்த நாடுகள் எமக்காகக் குரல் கொடுக்குமா? ஐ.நா. சபையும் நடுநிலையாகச் செயற்படவில்லை. ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் ராஜபக்சவின் அடியாளாகவே செயற்பட்டு வந்தார். இப்படிப்பட்ட கசாப்புக்கடைக் காரர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா? ராஜபக்சாவையும் விடக் கொடியவர்கள் இவர்கள். இன்றும்கூட அமெரிக்கா இலங்கை ஆட்சியாளர்களைப் பாதுகாக்கும் முறையிலேயே நடந்து வரு கிறது. இவர்களை வழிக்குக் கொண்டு வருவது கல்லில் நார் உரிப்பது போன்றது தான். காலம்தான் இதற்கெல்லாம் பதில் கூறவேண்டும்.

*ப.யேசுபாதம்*




## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# பொலிஸுக்கு மட்டுமல்ல பெற்றோருக்கும் பங்குண்டு

நாட்டில் - வடக்கில் இடம்பெறும் அண்மைக்காலச் சம்பவங்கள் அனைவரது மனங்களையும் நோகடிப்பதாக உள்ளன. அத்தகைய சம்பவங்களுக்கு முடிவில்லையா என்று ஏங்கும் அளவுக்கு, எதிர்பார்ப்பை வெளியிடுமளவுக்குச் சமூகத்தில் மக்கள் விரோத நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இவை எப்பொழுதுதான் தீர்த்து வைக்கப்படவுள்ளன என்ற கேள்விக்கு மக்களாலோ, பொலிஸாராலோ, நீதித்துறையாலோ கூட பதில் சொல்ல முடியாத நிலையில், நாம் இந்த அசிங்கங்களைக் கண்டுகழிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளோம்.

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னரான கொலையில் தொடங்கி வேலணை யுவதி வீட்டிலிருந்து கடத்தப்பட்டுக் காட்டுக்குள் கொண்டு செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை, பிற மாவட்டங்களில் நிகழும் வன்புணர்வுகள் கிளிநொச்சியில் சிறுமி துஷ்பிரயோகத்துக்குப் பின்னர் கொலை, தென்பகுதி கொட்டதெனியாவ சிறுமி வன்புணர்வின் பின்னரான கொலை என்பன சமூகத்தில் ஏதாவது ஒரு அழிவு நிகழ்வை மனதால் ஏற்றுக் கொள்ளமுடியாத இழிசெயலை அன்றாடம் பார்த்துச் சினக்கும் அளவுக்கு, வெறுப்படையும் அளவுக்கு நிலைமை சென்று கொண்டிருக்கிறது.

வன்புணர்வின் பினன்னரான கொலைகள் மட்டுமன்றி மாணவிகள் பாலியல் முறைகேடுகளுக்கு உள்ளாக்கப்படுவதும் ஆரோக்கியமான சமூகத்தைப் படுகுழியில் தள்ளி விட்டுப் போகின்றன. பாலியல் முறைகேடு, பாலியல் லஞ்சம் என்ற இழி நிலையும் உயரதிகாரிகளால் துணிந்து முன்னெடுக்கப்படுகின்றன. தட்டிக் கேட்பவர்கள் தற்போது இல்லை என்ற ஒரு துணிவும் அதற்குக் காரணம் என்பதனை எவருமே மறுதலிக்க முடியாது. ஆனால் இந்நிலையை எவருமே சகித்துக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இந்தத் துஷ்பிரயோகங்கள், வண்புணர்வுகள் மட்டுமன்றி அதற்கு முன்னர் நடந்த பாலியல் முறைகேடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். கடந்த வருடம் இடம்பெற்ற காரைநகர் சிறுமி கடற்படையினரால் பாலியல் முறைகேட்டுக்கு உட்படுத்தப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் வழக்கு, நெடுந்தீவில் சிறுமி ஒருவர் 2013 இல் கோரமான வன்புணர்வின் பின்னர் கல்லால் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் என்று பட்டியல் நீண்டு செல்கின்றது.

அத்தகைய சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுக்கின்றபோதிலும் அது எந்தளவுக்கு உள்ளது என்ற நியாயமான சந்தேகம் எழுப்பப்படுகிறது.

ஏனெனில் நெடுந்தீவுச் சிறுமி வழக்கில் பாலியல் துஷ்பிரயோகம் பற்றிய டீ.என்.ஏ அறிக்கையைப் பொலிஸார் இன்னும் நீதிமன்றில் சமர்ப்பித்திருக்கவில்லை. அதுபற்றிப் பொலி ஸார் அக்கறையற்றுள்ளனரா என்ற கேட்கும் அள வுக்கு நிலைமை காணப்படுகின்றது. அந்தச் சம்பவம் நடந்து 3 வருடங்கள் கழிந்துவிட்டபோதிலும் பொலிஸார் அந்த வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தவில்லை என்றே கூறமுடிகிறது. அதனாலும் அந்த வழக்கின் விசாரணை முடி வின்றியே உள்ளது. பாலியல் முறைகேடுகள், வன்புணர்வுகள் பற்றிய வழக்குகளை விரைந்து முடித்துத் தண்டனையும் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பு எனப் பரவலாகக் கூறப்படுகிறது. அத்தகைய நபர்களுக்கு - சூட்டோடு சூடாக உரிய தண்டனையை வழங்கி அதனை அனுபவிக்கச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் புரிந்த குற்றச் சம்பவங்களும் அதற்கான தண்டனையும் அனைவருக்கும் தெரியவரும். அது ஏனையவர்களுக்கும் நல்ல பாடமாக அமையும்.

தற்போது எமது சமூகத்தில் உள்ளவர்கள் ரவுடித் தனத்தில் ஈடுபடுகிறார்கள். காவாலிகளாக அலைகிறார்கள். மோட்டார் சைக்கிள்களில் உலாப் போகிறார்கள். அவர்களுக்கு என்று தொழில், பொறுப்புணர்வு, கடமை என்று ஏதாவது ஒன்று இருக்குமா என்று பார்த்தால் எதுவும் இருக்காது. ஆனால் அவர்களுக்கு நவீனரக மோட்டார் சைக்கிள், நவீன கைத்தொலைபேசி அவை எல்லாவற்றையும் விட அவர்களுக்குத் தேவையானளவு பணம் எப்பொழுதும் இருந்து கொண்டே இருக்கிறது. அவற்றை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் அவற்றை வாங்கிக் கொடுக்க வேண்டிய அளவுக்கு என்ன அவசியம் ஏற்பட்டுவிட்டது என் பதனை ஒரு பொழுதும் உணர்ந்ததில்லை என்றே கூறமுடி கிறது. ஒரு சிலர் பணத்துக்காகக் களவு, கொள்ளை அதற்காகக் கொலையும் செய்யத் துணிபவர்களாகவே உள்ளனர்.

தமது பிள்ளைகள் என்ன செய்கிறார்கள்? என்பது பெற்றோருக்குத் தெரிய வேண்டும். அவர்களில் என்ன மாற்றம் தெரிகிறது என்று பெற்றோர் கண்காணிக்க வேண்டும், அவர்கள் அவர்களது குடும்ப நிலைக்கப்பால் வசதி வாய்ப்புக்களைப் பெறும் போது அது நல்ல வழியில் கிடைத்ததா? அந்த வழி எவ்வாறானது என்பது பற்றிய எந்தக் கேள்வியும் கேட்காதிருப்பார்களானால் பெற்றோரில் பெருந்தவறு இருக்கின்றது. எமது பிரதேசத்தில் நடக்கும் இத்தகைய செயற்பாடுகளை பொலிஸார் மட்டும் தான் கட்டுப்படுத்த வேண்டும் என்று நாம் எவராவது நினைப்போமானால் அது இந்த ஜென்மத்தில் நடக்காது. அதனைத் தடுக்க ஒவ்வொரு பெற்றோரும் உறவுகளும் சமூக அமைப்புகளும் முன் வர வேண்டும். அப்பொழுது தான் எமக்குள்ளேயே உள்ள அந்த ரவுடிகளையும் பொறுக்கிகளையும் கட்டுப் படுத்தி எமது அடுத்த சமூகத்தை யாவது பாதுகாக்கலாம்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாட்டில் நல்லிணக்கம் மலர பணியாற்ற வேண்டிய தருணம்

போரின் இறுதிக் கட்டத்தில் நிகழ்த்தப்பட்ட போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு மாறான குற்றங்கள் தொடர்பாக முன்னைய இலங்கை அரசின் ஆதரவோ அனுசரணையோ இல்லாத நிலையில், விசாரணைகளை மேற்கொண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணிமனையின் நிபுணர்கள் தயாரித்திருந்த அறிக்கையை, கடந்த 16 ஆம் திகதி பேரவையின் 30 ஆவது கூட்டத் தொடரில் மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசேன் தாக்கல் செய்து, அதன் மீதான தமது பரிந்துரைகளையும் தெரிவித்திருந்தார்.

அறிக்கையின் பிரகாரம் இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு, அனைத்துலக நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டும் என்பதே பிரதான பரிந்துரையாக அமைந்திருந்தது. அது மட்டுமன்றி அறிக்கை மீதான ஆணையாளரின் குறிப்புரையும் கடுமையாக அமைந்திருந்தது.

இலங்கை அரசுக்கும் ஏனைய தரப்புக்களுக்கும் இது பெரும் அதிர்ச்சியையும் அங்கலாய்ப்பையும் ஏற்படுத்தியிருந்தது. இந்த நிலைமையில் அமெரிக்காவின் தரப்பில் இலங்கைக்கு ஆதரவாக கூட்டத் தொடரில் தாக்கல் செய்யப்பட்ட முதல் தீர்மான வரைவிலும் அனைத்துலக கலப்பு நீதிமன்ற விசாரணை வலியுறுத்தப்பட்டிருந்தமை இலங்கைத் தலைவர்களுக்குப் பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

அதன் பேரில் இலங்கை அரசு, குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக அனைத்துலக கலப்பு நீதிமன்றம் என்ற சொற்பிரயோகம் அகற்றப்பட்டு, பொதுநலவாய மற்றும் ஏனைய நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றம் என்ற சொற்பிரயோகம் சேர்க்கப்பட்டு தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேற்றப்பட்டது. 47 உறுப்பு நாடுகளும் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளன. குறிப்பாக இலங்கை அரசு அமெரிக்கத் தீர்மானத்தை முன்மொழிவதில் இணை அனுசரணை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.நேற்று வரை 38 நாடுகள் இணை அனுசரணை வழங்க முன்வந்திருப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன.

இத்தனையும் நடந்து முடிந்துள்ள நிலையில், இலங்கைத் தலைவர்கள் அனைத்துலக தலையீடு இன்றி முற்றிலும் உள்ளக விசாரணையே நடத்தப்படும் என்பதாக வியாக்கியானங்களை வெளியிட்டு வருவது விசித்திரமாக இருக்கின்றது.

தீர்மான வாசகம் கூறுவதுபோல் வெளிநாட்டு நீதிபதிகளைக் கொண்ட நீதிமன்றத்தை அமைக்க அரசமைப்பில் இடமில்லை. அவ்வாறு செய்வதெனில் அரசமைப்பு திருத்தம் செய்யப்பட வேண்டியிருக்கும் என்றெல்லாம் கூறப்படுவதைப் பார்க்கின்றோம்.

கடந்த வாரத்தில் --

பிரதமர் ஒரு நிகழ்வில் பேசியபோது, உலகில் எங்குமே நிகழாத வடிவத்தில் உள்ளக விசாரணை ஒன்றை நடத்தி உண்மைகளைக் கண்டறிவோம். அவ்வாறு செய்யாவிடில் சர்வதேசத்தைப் பகைத்துக் கொள்ளநேரும். உண்மையைக் கண்டறிவதற்காகவே மக்கள் எமக்கு ஆதரவளித்தார்கள் என்று கூறியுள்ளார். இதற்கிடையில் தீர்மானத்தை முற்றுமுழுதாக நிராகரிக்கும்படி முன்னாள் ஜனாதிபதியும் ஆதரவுக் குழுவினரும் கோரிவருகின்றனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் அவர்கள் ஆயத்தமாகின்றனர்.

இந்த நிலைமையில், நொண்டிக் காரணங்களைக் கூறி ஜெனிவா தீர்மானத்தை எந்த வகையிலும் செயற்படுத்தாமல் விடுவது சாத்தியமில்லை. அதனால் உலக நாடுகளின் பகையை முன்னரை விட மோசமான அளவு இலங்கை அனுபவிக்க நேரும். உள்நாட்டில் மைத்திரி - ரணில் அரசைப் பதவியில் அமர்த்திய தமிழ்த் தரப்பினரின் பகைமையையும் அரசு பன்மடங்கு சம்பாதிக்கும்.

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாது ஏமாற்றிய ராஜபக்ச ஆட்சியாளர்களை, வாக்குப் பலத்தால் கவிழ்த்த மக்கள், அதே பாணியில் செயற்பட வெகுகாலம் பிடிக்காது. எனவே சர்வதேசத்துக்கு வழங்கியுள்ள வாக்குறுதியை அச்சொட்டாக நிறைவேற்றி, நாட்டில் நல்லிணக்கமும் அமைதியும் மக்கள் மத்தியில் புரிந்துணர்வும் மலர, விரைந்து பணியாற்ற வேண்டிய தருணம் இது வென்று சுட்டிக்காட்டுகிறோம்.

# நல்லாட்சி அரசு செயலிலும் நல்லதனத்தைக் காட்டுமா?



■ சேரலாதன்

நல்லாட்சி புரிவதாகக் கூறிக் கொள்ளும் மைத்திரி–ரணில் இணைந்த இலங்கை அரசு இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளை விசாரிப்பதில் நல்ல தனமாக நடந்து கொள்வதாகத் தெரியவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இறுதிப்போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளை மீறிய சம்பவங்கள் தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பான இலங்கையின் கடப்பாட்டையும், குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் மனித உரிமைகள் ஆணையாளர் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். ஆனால் விசாரணை என்ற சொல்லைக் கேட்பதற்கே இலங்கை அரசு தயங்குவது தெளிவாகத் தெரிகின்றது.

முன்னாள் ஆட்சியாளர்களையும், படைத் தரப்பினரையும் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் காப்பாற்றிக் கொள்வதே அரசின் நோக்கமாக உள்ளமையும் தெளிவாகத் தெரிகின்றது.

இறுதிப்போரின்போது படையினர் மேற்கொண்ட மூர்க்கத்தனமான தாக்குதலில் சுமார் 40 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டதாக தமிழர் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதைவிட அவயவங்களை இழந்தவர்களும், படுகாயங்களுக்கு உள்ளானவர்களும் ஏராளமென்பது அந்தத் தரப்பினரின் மூலமாகத் தெரிய வந்துள்ளது. பெண்கள் பலர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டதான தகவல்களும் வெளி யாகியுள்ளன. இதைவிட வெள்ளைக் கொடியுடன் சரணடையச் சென்ற புலிகளின் முக்கியஸ்தர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டதாகவும், பலரைக் காணவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. படையினரிடம் சிக்கிய புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகனான பாலச்சந்திரன், இசைப்பிரியா ஆகியோரின் ஈவிரக்கமில்லாத கொலைகள் இன்றும் கூட தமிழர்களின் மனங்களில் ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தி வருகின்றன. இறுதிப்போர் என்ற போர்வையில் தமிழ் இனத்தை முற்றுமுழுதாகத் துடைத்தொழிக்கும் நடவடிக்கையே இடம்பெற்ற தாகக் கூறப்படுவதும் உண்டு.

இவற்றின் பின்னணியில் அப்போது ஜனாதிபதியாகவிருந்த மகிந்த ராஜபக்சவும் அவரது சகோதரர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. படைத்தரப்பினருக்கு உத்தரவு பிறப்பிக்கின்ற அதிகாரமும் இவர்களுக்கு இருந்ததால் போர்க்குற்றங்களுக்கு இவர்கள் முக்கியமாகப் பொறுப்புக்கூற வேண்டும். மேலும் சனல் – 4 தொலைக்காட்சியில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மிகமோசமான போர்க் குற்றங்கள் தொடர்பாக பல தடவைகள் காண்பிக்கப்பட்டுள்ள போதிலும், இலங்கை அரசு இவற்றைக் கவனத்தில் கொள்ளாது முற்றாகவே நிராகரித்து விட்டது. சர்வதேச நிபுணர்கள் அடங்கிய குழுவொன்றின் மூலமாக இதன் உண்மைத் தன்மையை ஆராய்ந்து பார்ப்பதற்குக்கூட இலங்கை அரசு முயற்சி செய்யவில்லை. இவையெல்லாம் குற்றவாளிகளைப் பாதுகாக்கின்ற செயல்களாகவே பார்க்க முடிகின்றது. மகிந்த ராஜபக்ச மின்சார நாற்காலியில் அமர்வதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும் தடுத்து விட்டதாக அரசின் சார்பில் பெரும்பான்மையின மக்களின் மத்தியில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவ்வாறாயின் மின்சார நாற்காலியில் அமர்வதற்குரிய குற்றங்களை அவர் புரிந்திருக்க வேண்டும். ஆனால் அவர் தண்டனை பெறுவதில் இருந்து காப்பாற்றப்பட்டிருக்கிறார் எனக் கொள்ள முடியும். ஆகவே போர்க் குற்றவாளியெனக் கருதப்படும் ஒருவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இறுதிப் போரில் பாதிக்கப்பட்டவர்கள் வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அல்ல. தமிழர்களான அவர்களும் இந்த நாட்டுக் குடிமக்கள் தான் என்பதை ஒருகணம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆனால் மகிந்த அரசு அவ்விதம் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. மாறாக ஏதோ எதிரி நாட்டுடன் போர் புரிவதாகவே கருதியது. இதனால்தான் பல்லாயிரக்கணக்கில் தமிழர்கள் கொல்லப்பட்டதையும் ஏராளமானவர்கள் பல்வேறு விதத்திலும் பாதிக்கப்பட்டதையும் அப்போதைய அரசு கண்டு கொள்ளவில்லை. மாறாக வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துவதில் தீவிரம் காட்டியது. மகிந்த போர் வெற்றியின் நாயகனாகப் போற்றப்பட்டார். அவரது மதிப்பும் செல்வாக்கும் பெரும்பான்மையின மக்கள் மத்தியில் உச்சத்தைத் தொடும் அளவுக்கு உயர்ந்தது. ஒரு வரலாற்று நாயகனாகவே அவர் மதிக்கப்பட்டார். ஆனால் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் மண்ணோடு மண்ணாகக் கலப்பதற்குக் காரணமான அவரது கறைபடிந்த கரங்களை எவரும் சிந்தித்துப் பார்க்கவில்லை. இன்று அவரையும் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களையும் காப்பாற்றுவதற்கான தீவிர முயற்சிகளில் நல்லாட்சி அரசு ஈடுபட்டுள்ளதைக் காண முடிகின்றது.

இதேவேளை – இலங்கையில் நல்லாட்சி நிலவுவதாகக் கூறி அமெரிக்கா இலங்கைக்குச் சார்பானதொரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பித்திருந்தது. அதில் சர்வதேசத்தின் பங்களிப்புடனான போர்க்குற்ற விசாரணைகளை இலங்கை மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இலங்கை மற்றும் இந்தியாவின் அழுத்தங்கள் காரணமாக அந்தத் தீர்மானம் வலுவிழக்கச் செய்யப்பட்டதாக இப்போது தெரிய வந்துள்ளது. மேற்படி தீர்மானத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்குத் தொடுநர்கள் தொடர்பாக எதுவுமே தெரிவிக்கப்படவில்லை என்பதால் போர்க்குற்ற விசாரணைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதேவேளை – போர்க்குற்ற விசாரணைகளை நடத்தக்கூடிய அளவுக்கு வலுவான நீதித்துறைக் கட்டமைப்பு இலங்கையில் இல்லையென ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும், கலப்பு நீதிமன்றம் ஒன்றின் மூலமாகவே நீதியான போர்க்குற்ற விசாரணைகள் இடம் பெறுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், மனித உரிமைகள் ஆணையாளரின் கருத்துக்கள் புறமொதுக்கப்பட்ட நிலையில் அமெரிக்கத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை வழிமொழி வதாக இலங்கையும் உறுதியளித்துள்ளது. அமெரிக்கா எப்போதுமே தனது நலனை முன்னிறுத்தியே செயற்பட்டு வருகின்றது. தனது கொள்கைகளுக்கு ஆதரவு தெரிவிப்பவர்களை அரவணைத்துச் செல்வதும் அந்த நாட்டின் பிரதான கொள்கை யாகும். இந்த நிலையில்தான் இலங்கை அரசுக்கு உதவி புரிவதற்கு முன் வந்துள்ளது. ஆனால் போர்க்குற்றவாளிகள் முன்னைய அரசிலேயே அங்கம் வகித்திருந்தனர் என்பதையும் அமெரிக்கா கருத்தில் கொண்டிருக்க வேண்டும். மகிந்தவையும் அவரைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றி விடுவதால் தற்போதைய அரசுக்கு என்ன இலாபம் ஏற்படப் போகின்றது என்பதையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்குதான் விடயமே இருக்கின்றது. கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது தாம் வழங்கிய உறுதிமொழிகளைக் காப்பாற்றுவதிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீவிரமாக ஈடுபட்டுள்ளார். மகிந்த ராஜபக்சவையும், படையினரையும் போர்க்குற்ற விசாரணைகளிலிருந்து காப்பாற்றுவேன் என அவர் அப்போது தெரிவித்திருந்தார். தற்போது அதனை நிறைவேற்றி வைப்பதே அவரது பிரதானமான செயற்பாடாக அமைந்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் இதற்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. நீதியான விசாரணைகள் இடம் பெறுவதை உறுதி செய்வதே நல்லாட்சி அரசொன்றின் முக்கிய கொள்கையாக இருத்தல் வேண்டும். குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள் எவராக இருந்தாலும் நீதியான முறையில் விசாரணை செய்யப்படல் வேண்டும். அவர்கள் குற்றவாளிகளா? அல்லது நிரபராதிகளா? என்பதை விசாரணைகள் மூலமே தீர்மானித்துக்கொள்ள வேண்டும். ஆனால் நீதியான விசாரணைகளுக்கு முட்டுக் கட்டை போடுவது நல்லாட்சி என்ற சொல்லுக்கே இழுக்கைத் தேடித் தரும்.

இதேவேளை – போர்க்குற்றவாளிகள் பாதுகாக்கப்பட்டு விட்டால் போரின்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை அரசு வழங்கப் போகின்ற நிவாரணம்தான் என்ன? இந்த அரசு அவர்களையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவ்வாறு நடந்து கொள்ளாது விட்டால் மகிந்த அரசுக்கும் நல்லாட்சி எனக்கூறிக் கொள்ளும் அரசுக்குமிடையியே வித்தியாசமே இருக்க முடியாது.

ஆகவே போர்க்குற்ற விசாரணைகள் நீதியான முறையில் இடம் பெறுவதை அரசு உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும் பாதிப்புக்களை எதிர்கொண்டவர்களுக்கு உரிய நியாயம் வழங்கப்படல் வேண்டும். இதைவிடுத்து வெறும் வார்த்தைகளில் மட்டுமே நல்லாட்சி எனக் கூறிக் கொள்வதில் எந்தவித அர்த்தமும் இருக்கப்போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாசுதன்

**ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும்.....**
**ஏய உணர்விக்கும் என்னம்மை........**
**தூய உருப்பளிங்கு போல்வாழ் என் உள்ளத்தினுள்ளே......**
**இருப்பளிங்கு வாராது இடர்.....**

# மீண்டும் வேண்டும்...! நம் காவலர்கள்...!



நவராத்திரி காலங்களிலே முப்பெரும் தேவிகளின் சொரூபமான ஆதிபராசக்தியை வேண்டி சகலகலாவல்லிமாலை பாடினோம். தேவியின் இறையருளை வேண்டி இறைஞ்சினோம். எப்போதும் முப்போதும் அவளை வணங்கி வருகிறோம். தமிழர்களாகிய நாங்கள் கல்வி, வீரம், செல்வம் என மூன்று அருட்செல்வங்களையும் பெற்ற சமூகமாக வாழ்ந்து வந்தோம். ஆனால் இன்று அந்த உயர்நிலையில் இருந்து பின்னகர்த்தப்பட்டிருக்கிறோம். 2009 என்ற அந்த காலதேவனின் இறுதி மூச்சுவரை உயர்நிலைப்படுத்தப்பட்டிருந்த இந்த மூன்றின் ஒருமித்த உச்ச நிலைகள் திட்டமிட்ட இனஅழிப்பு என்ற செயலுருவத்தின் படிநிலைகளால் கீழிறக்கப்பட்டிருக்கின்றது.

கட்டுக்கோப்புடனும், சமூக விழுமியங்களின் மீதான பற்றுதலுடனும், சீரான பாதையிலே ஒழுங்கமைக்கப்பட்டிருந்த ஒரு சமூகம் இன்று திட்டமிட்ட செயலூக்கங்களினால் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஆறு ஆண்டுகளில் ஆண்டின் ஆரம்பத்தில் முடிவுறுத்தப்பட்ட வீரமும் அபகரிக்கப்பட்ட செல்வமும் முற்றாக அமிழ்த்தப்பட்ட நிலையில் படிப்படியாக ஆண்டின் வளர்ச்சிப்போக்கில் அடுத்த கட்ட தமிழினத்தின் அழிவுக்கான நுண்ணுயிர் கொல்லியாக, கல்வி எனும் புலமைச் சொத்தை மழுங்கடித்தல், சமூக விழுமியங்கள் மீதான பற்றுதலை சீர்குலைத்தல் என்ற நோய்கள் உயிர்க்கொல்லியாக பரப்பி விடப்பட்டிருக்கின்றன. இதனை தமிழ்ச் சமூகத்தில் இடம்பெற்று வருகின்ற அண்மைக்கால சம்பவங்களின் பின்னணிகளைத் துருவி ஆராய்வதன் மூலம் கண்டுகொள்ள முடியும். இதனை யாரும் மறுக்கவும், மறுதலிக்கவும் முடியாது என்பது நிறுத்திட்டமான உண்மை.

2009ஆம் ஆண்டுகளின் முன்னர் வடபுலத்திலே மாணவர்கள் உயர்நிலையிலே இருந்தார்கள். கற்றல் கற்பித்தல் செயன்முறைகள் செயற்றிறன், வினைத்திறன் என்ற எல்லைகளுக்குள் உச்சம் கண்டிருந்தது. க.பொ.த. சாதாரண தரம், க.பொ.த உயர்தரத்திலே மாவட்ட நிலையிலும், தேசிய நிலையிலும் ஏனைய இன மாணவர்களை பின்தள்ளி முன்னிலை பெற்றார்கள். அவர்களுக்கான தட்டிக்கொடுப்புக்களும், ஊக்கப்படுத்தல்களும் தமிழீழ தேசியத் தலைமைகளிடம் இருந்து வலுவாகக் கிடைத்தது. அவர்களின் எதிர்காலப் பாதைகள் சீர்மைப்படுத்தப்பட்டன. எதிர்கால சமூக மாற்றத்துக்கான புலமைச் சொத்துக்கள் ஆணித்தரமாக வேரூன்றின. ஆனால் இன்று திட்டமிட்ட திசை திருப்பங்கள் மூலம் மாணவர்கள் போதையூட்டப்பட்டிருக்கின்றார்கள். வீரத்தின் ஊக்கமருந்தோடு தளராமல் நடைபயின்றவர்கள் இன்று நிஜமான போதையால் கட்டுக்கடங்காமல் வீதிகளில் கட்டாக்காலிகளாக துரத்தி விடப்பட்டிருக்கின்றனர். குழுச்சண்டைகளும், வாள்வெட்டுக்களும், கேலிச்செய்கைகளும் கட்டுக்கடங்காமல் எம் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கட்டுக்கோப்புடனிருந்த ஒரு சமூகத்தின் நிஜத்திரையுடன் ஒப்பிட்டுப் பார்க்கையிலே இந்த நிர்க்கதியான நிழல் விம்பங்கள் எம் சமூகத்தின் நிலைத்திருப்பை கேள்விக்குறியாக்கியிருக்கின்றது.

இது ஒருபுறமிருக்க பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் கட்டுக்கடங்காமல் அதிகரித்திருக்கின்றன. போர் என்கின்ற கொடிய ஆயுதம் பெரும் அழிவைத் தந்ததன் பின்னணியிலே தற்போது போதை என்கின்ற விஷ ஆயுதம் கொண்டு தமிழ் சமூகத்தின் பெருமைக்குரிய பெண்மை எனும் பொக்கிஷம் வன்முறையால் சீரழிக்கப்பட்டு வருகின்றது. பெண் அடிமைத்தனத்தின் விலங்கை உடைத்தெறிந்து வீரநடை போட்டவர்கள் இன்று திட்டமிட்ட போதை என்ற ஆயுதங்களின் வன்முறையால் பயமுறுத்தப்படுகின்றனர். சுதந்திரமாக நடமாடமுடியாமல் வீடுகளுக்குள் முடக்கப்பட்டிருக்கின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பு வலயத்தினுள் துளிர்விட்ட இந்த வன்முறைச் சம்பவங்கள் சாரதாம்பாள், கிருஷாந்தி எனத் தொடங்கி இசைப்பிரியா, புங்குடுதீவு மாணவி வித்தியா எனத் தொடர்ந்து அண்மையிலே சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக தலைதூக்கத் தொடங்கியிருக்கின்றன.

குற்றங்கள் அதிகரிப்பதற்கான மிகப் பிரதானமான காரணங்களாக சொல்லப்படக் கூடியவை நீதித்துறை, சட்டம், ஒழுங்கு என்பவற்றில் இருக்கின்ற ஓட்டைகளும், தண்டனைக் குறைப்புக்களுமே. இதைவிட மிகப் பெரியளவிலே தப்புக்களைக் கண்டு கொள்ளாது அசமந்தப் போக்குடன் குற்றவாளிகளிடம் கையூட்டல்களை பெற்றுக்கொண்டு அவர்களுடன் நட்பு பாராட்டி நடந்து கொள்வதும் குற்றவாளிகளைத் தேடிக் கைது செய்வதில் காட்டிவருகின்ற தாமதமும், விசாரணைகளின் பின்னடிப்பும் இவர்களிடம் இருந்து வருகின்ற வினைத்திறனற்ற செயற்பாடுகள் என்பனவே.

இந்த வகையிலே அரசின் மறைமுக நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலே கட்டுக்கோப்புடன் வாழ்ந்த ஒரு பூர்வீக இனத்தின் நிலைத்திருப்பை கேள்விக்குட்படுத்தும் வகையிலே நன்கு திட்டமிட்டு போதை என்கின்ற கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஓர் அழிவுக்கிருமியை கட்டுப்பாடுகளற்று திசைமாறி இருக்கின்ற ஒரு சமூகத்தின் மத்தியிலே வரையறை என்கின்ற எல்லைகளை மீறி சுதந்திரமாக நுகர்வுக்குட்படுத்தக்கூடிய வழிவகைகளையும், சூழமைவுகளையும் கட்டியெழுப்பி எங்கும் அமைதி, சமாதானம், சமத்துவம் என்ற நாமத்தோடு வெளித்தெரியாத வகையிலே அழிவுக்கிருமியாக பரப்பிவிட்டிருக்கின்றது.

இந்தச் சூழ்நிலைகளின் விபரீதங்களையும், விளைவுகளின் ஆழத்தையும் புரிந்து கொண்டு தமிழ்ச் சமூகம் மீண்டும் மீண்டெழுவதற்கான புரிதலுடன் கூடிய காத்திரமான அறிவுசார் செயன்முறைகள் தேவைக்குரியதாக எம்முன் தோன்றியிருக்கின்றது. இதற்கு முற்றுமுழுதாக சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு குடிமகனதும் உயரிய பங்களிப்பும், கல்விப்புலத்தின் விழிப்பூட்டல் செயற்பாடுகளும், சமூக நிறுவனங்களின் தன்னம்பிக்கையான கருத்தியல் வெளிப்பாடுகளும் ஒருமித்து கட்டியெழுப்பப்பட வேண்டிய, ஒருமித்துப் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

ஒரு சமூகத்தின் திட்டமிட்ட அழிவு என்ற இந்த கீழ்நிலையிலிருந்து மீண்டு வருவதற்கு மிகப் பெரிய காத்திரமான செயற்பாடுகளின் எல்லையிடல்களும், கடந்த காலத்தில் எம்மினம் நெறிப்பிறழ்வில் இருந்து தப்பிப்பிழைக்க மேற்கொண்ட பாதுகாப்பு வன்முறைகளின் அனுபவப்பட்டறிவுகளையும் மீண்டும் சிந்திக்க வேண்டியவர்களாகவும் அந்தச் செயற்பாடுகளின் செயல்வலுவை உணர்ந்து செயற்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

அந்த வகையிலே எங்களுடைய தமிழ் சமூகம் மீண்டும் நல்வழிப்படவும், நேரிய சிந்தனை கொண்டு சீர்மைப்படவும் கடந்த காலத்தின் எம்மினத்தின் காவலர்களை ஞாபகப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

ஓர் அரசுக்குரிய அனைத்துக் கட்டமைப்புக்களையும் கொண்டு விளங்கிய தமிழீழ அரசிலே காவல்துறை, சட்டத்துறை, நீதித்துறை, நிதி நிர்வாகம், சிவில் நிர்வாக சேவை, ஆயம் எனப் பல கட்டமைப்புக்கள் கட்டமைக்கப்பட்டிருந்தன. இவை அனைத்திலும் மிக முதன்மையான கட்டமைப்பாக நோக்கப்பட்டது காவல்துறை.1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்ட காவல்துறை தமிழீழ மக்களின் நலனைப் பேணுவதில் மட்டும் நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டது. தமிழீழக் காவல்துறை நல்லொழுக்கம், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சீரிய பண்புடையவர்களாக இருந்தனர்.

பொதுமக்களுக்கு சேவை செய்யும் மனப்பாங்குடன் சமூக நீதிக்கும், சமூக மேம்பாட்டுக்கும்உழைக்கும் மக்கள் தொண்டர்களாகவும் கடமை புரிந்தனர். காவல்துறையைப் பொறுத்தவரையிலே குற்றங்கள் நடந்து முடிந்தபின் குற்றவாளியை தேடிப்பிடித்து கூட்டில் நிறுத்துவது அதன் நோக்கமாக இருக்கவில்லை. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்துக் குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதே அதன் இலட்சியமாக இருந்தது.

போர் கடுமையாக நடைபெற்ற காலப்பகுதியில் மிதிவண்டிகள் மட்டும்தான் பயன்படுத்தப்பட்டு வந்தன. பலபத்து மைல்கள் மிதிவண்டியிலே போய் குற்றவாளியொருவரை கைதுசெய்து அதிலேயே அழைத்து வந்தார்கள். ஊழல், இலஞ்சம், துளியளவுமற்ற கறை படியாத துறையாக தமிழீழ காவல்துறை விளங்கியது. சமூகக் கட்டமைப்புக்கு குலையாது பாதுகாத்த பெருமை தமிழீழ காவல் துறைக்கு உரியது. விடுதலைப் போராட்டத்தில் முக்கிய மைல்கல்லாக அமைந்திருந்தது. தமிழீழ சட்டத்துறை, நீதித்துறையால் வழங்கப் பட்ட தண்டனைகளும், காவல்துறையின் மக்கள் நலன் பேணுகின்ற கண்ணியமான, கட்டுப்பாடான செயற்பாடுகளும் குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு இடமளிக்க வில்லை. தமிழ் மக்கள் எந்தவித பயமுமின்றி நிம்மதியாக வாழ்ந்தார்கள். நள்ளிரவிலும் பெண்கள் எந்த வித பயமும் இன்றி சுதந்திரமாக நடமாடித் திரியக்கூடிய சூழ்நிலைகள் இருந்தன. ஆனால் 2009 இன் பின்னரான காலப்பகுதியில் துளிர்விட்ட பெண்களுக்கெதிரான வன்புணர்வுச் சம்பவங்களும், கோஷ்டி மோதல்களும், மதுப்பாவனை அதிகரிப்புக்கள், போதைப் பொருள்களின் கடத்தல்கள், அவற்றின் நுகர்வின் அதிகரிப்பு என்பன இன்று எல்லைமீறி அதிகரித்த நிலையை அடைந்திருக்கின்றது. குறிப்பாக அண்மையில் வேலணையில் இடம்பெற்ற சம்பவம் நோக்கத்தக்கது. வேலணையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது கணவனுடன் வீட்டில் இருந்த பெண்ணை, கணவனைத் தாக்கி விட்டு கடத்திய சம்பவம் புங்குடுதீவு மாணவியின் கடத்தலின் பின்னரான மிகப் பிரதானமான மக்கள் மத்தியில் பய உணர்வை ஏற்படுத்திய சம்பவமாக பதிவாகியுள்ளது.

இது தவிர, யாழ்.மத்திய பஸ் தரிப்பிடத்தின் பின்புறமாக உள்ள மின்சார நிலைய வீதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவமும் அதன் பின்னான உயிரிழப்பும் தமிழ் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியிருக்கின்றது.

சம்பவங்கள் இடம்பெற்று அவற்றின் விபரீதத் தன்மைகள் எல்லை மீறி சென்றதன் பின்னர் அந்த இடங்களுக்கு பொலிஸார் வருவதும் விசாரணை என்ற பெயரில் காலத்தை இழுத்தடிப்பதும் தொடர்கிறது. இந்த நிலையில், சிறுவர் மற்றும் பெண்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்கள், வன்புணர்வுகள், படுகொலைகள் தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகள் நிறைவடைந்த மாத்திரத்தில் நேரடியாக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்து துரித விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருப்பது கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது போலத்தான் இருக்கிறது. அதுதவிர இவ்வாறான கருத்துக்கள் வெறும் காதில் பூச்சுற்றுகின்ற வேலைதான். புங்குடுதீவு மாணவி படுகொலையின் பின்னர் மைத்திரிபால சிறிசேன நேரடியாக இங்கு வருகை தந்து சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று கூறிச் சென்றார். ஆனால், இன்று பல மாதங்கள் கடந்த நிலையிலும் எந்த ஒரு தீர்வும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படவில்லை. மாறாக விசாரணை என்ற பெயரில் காலம் இழுத்தடிக்கப்படுகின்றது.

வடபகுதியில் இடம்பெற்று வருகின்ற, வன்முறைச்சம்பவங்கள் இலங்கைப் பொலிஸாரினது செயற்பாடுகளையும், அந்தச் செயற்பாடுகளின் வினைத்திறன் தன்மையையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டி நிற்கின்றது. இதன் மூலம் நீதியின் தீர்வு என்பது பின்னடைவு கண்டிருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வு என்பது தமிழர்களின் வரலாற்றிலே முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மாறாக இந்த நீதியின் தீர்வு என்பது தமிழ் மக்களுக்கு இந்த இரு சொற்களின் முதல் எழுத்தான நீ...தீ...! என்பதைத் தான் சுட்டி நிற்கின்றது. எங்களைப் பாதுகாக்க நாங்களே தீயாக புறப்பட வேண்டும் என்பதுதான் அது. ஆக, இந்த நிலையில் எங்கள் வரலாற்றின் பக்கமிருந்த நீதித்துறை, சட்டத்துறை அதன் வழி கட்டமைக்கப்பட்ட காவல்துறை என்பவற்றின் பாதுகாவலை மீண்டும் தேவைக்குட்படுத்தியிருக்கின்றது. கிராமங்கள் தோறும் சமூகப் பற்றுதலும், கடமையுணர்வும் உள்ள இளைஞர்கள் ஒருமித்த கருத்தோடு இணைந்து கூட்டாகப் பயணித்து தட்டுவோரை தட்டினால் தீர்வு எனும் வழி பிறக்கலாம். உழைக்கும் மக்கள் தொண்டர்களாக சமூகத்தின் கட்டமைப்புக்களில் தீங்கும், குலைவும் ஏற்படாமல் பாதுகாத்த பெருமையைப் பெறலாம்.


**சமூகக் கட்டமைப்புக்கு குலையாது பாதுகாத்த பெருமை தமிழீழ காவல் துறைக்கு உரியது. விடுதலைப் போராட்டத்தில் முக்கிய மைல்கல்லாக அமைந்திருந்தது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 30 | 60 | 60 | 20 |
| கத்தரி | 60 | 60 | 50 | 60 | 40 | 80 | 80 | 30 |
| கரட் | 60 | 120 | 60 | 70 | 120 | 120 | 100 | 80 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 60 | 60 | 120 | 60 | 80 | 120 | 100 | 50 |
| பாகல் | 100 | 80 | 120 | 80 | 120 | 130 | 110 | 80 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 100 | 60 | 100 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 80 | 100 | 100 | 100 | 120 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 120 | 120 | 140 | 100 | 80 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 60 | 50 | 30 |
| தக்காளி | 80 | 80 | 100 | 80 | 60 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 | 70 | 60 | 60 | 30 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 25 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 120 | 140 | 140 | 200 | 200 | 100 |
| புடோல் | 40 | 60 | 40 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 70 | 30 | 70 | 70 | 60 | 80 | 100 | 40 |
| வெண்டி | 50 | 40 | 120 | 60 | 60 | 60 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 140 | 140 | 140 | 140 | 200 | 160 | 120 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 | 60 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 45 | 40 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 120 | 100 | 120 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 160 | 200 | 160 | 240 | 200 | 400 | 160 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 12 | 20 | 15 | 08 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 | 50 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 140 | – | 180 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 120 | 70 | 140 | 80 | 120 | 80 |

# மருத்துவ குணங்கள் தேங்காயிலும்..!



சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தடவி வந்தால் தீப்புண்கள் விரைவில் குணமாகும். கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்த டானிக். தேமல், படை, சிரங்கு போன்ற நோய்களுக்குத் தயாரிக்கப்படும் மருந்துகளில் பெருமளவு தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுகிறது. மாதவிடாய் போது ஏற்படும் அதிக உதிரப்போக்குக்கு தென்னை மரத்தின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு நல்ல மருந்து. வெள்ளை படுதலுக்கு தென்னம் பூ மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தயாரிக்கும்போது கிடைக்கும் புண்ணாக்கோடு கருஞ்சீரகத்தையும் சேர்த்து தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

தேங்காய் சிரட்டையில் (வெளிப்புற ஓடு) இருந்து தயாரிக்கப்படும் ஒருவித எண்ணெய் தோல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. மூல முளை, ரத்த மூலம் போன்றவற்றுக்கு தென்னங்குருத்திலிருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது. தேங்காய்ப் பால் நஞ்சு முறிவாகப் பயன்படுத்தப்படுகிறது. சேராங் கொட்டை நஞ்சு, பாதரச நஞ்சு போன்றவற்றுக்குத் தேங்காய்ப் பால் நஞ்சு முறிவாகும். தேங்காய் எண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்படும் தைலங்கள் பல்வேறு நோய்களுக்கு அருமருந்து.

தேங்காயில் உள்ள ஃபேட்டி ஆசிட் உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்கிறது, உடல் எடையைக் குறைக்கிறது என்று சமீபத்திய ஒரு ஆய்வில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இது மருத்துவ உலகினர் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. தேங்காயில், தேங்காய் எண்ணெயில் கொழுப்புச் சத்து அதிகம். உடலுக்கு ஆகாது. குறிப்பாக நீரிழிவு நோயாளிகள், இதய நோயாளிகள் தேங்காயைத் தொடக் கூடாது என்ற பரப்புரைக்கு இந்த ஆய்வு பெரும் சவால் விடுத்துள்ளது.

அதேவேளையில் பூலோகத்தின் கற்பக விருட்சம் என்று சொல்லி தென்னையையும் அதன் முத்தான தேங்காயையும் சித்த மருத்தவம் உட்பட இந்திய மருத்துவ முறைகள் காலம் காலமாகப் போற்றி வருகின்றன. தாய்ப்பாலில் உள்ள புரதச் சத்துக்கு இணையானது இளநீரில் உள்ள புரதச் சத்து. சித்த மருத்துவம் உட்பட இந்திய மருத்துவ முறைகளில் தென்னையின் பயன்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. தென்னையின் வேரிலிருந்து குருத்து வரை எல்லாப் பாகங்களிலும் மருத்துவக் குணங்கள் கொட்டிக்கிடப்பதாகச் சொல்கிறது சித்த மருத்துவம். தேங்காய், தேங்காய் எண்ணெய் உடல் நலத்துக்குக் கேடு என்ற பிரசாரம் தேங்காய் எண்ணெய் மீது சுமத்தப்பட்டிருக்கும் அவதூறு என்கிறார்கள் நமது பாரம்பரிய மருத்துவர்கள்.

தேங்காய் எண்ணெய்

(தொடரும்)




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 700 | 500 |
| நண்டு | 350 | 400 | 400 | 300 | 200 | 400 |
| கணவாய் | 550 | 600 | 400 | 600 | 700 | – |
| பாரை | 500 | 500 | 600 | 500 | – | 400 |
| சுறா | 500 | 500 | 600 | 650 | 700 | 450 |
| சீலா | 300 | 400 | 500 | 400 | 400 | 350 |
| விளை | 700 | 500 | 400 | 450 | 600 | 400 |
| மூரல் | 300 | 400 | 300 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 400 | 250 | 400 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | 500 | – | – |
| ஒரா | 400 | 350 | – | 400 | – | – |
| திரளி | 250 | 250 | 150 | 350 | 200 | – |
| நகரை | 200 | 250 | – | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 150 | 100 | 120 | 100 | – |
| ஒட்டி | 250 | 200 | 200 | 300 | – | 250 |
| திருக்கை | 150 | 300 | 200 | 280 | 300 | 130 |
| பாலை | 400 | 250 | – | 500 | – | – |
| வாழை | 100 | 150 | – | 350 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | – | 120 | 50 | – |
| மதனம் | 150 | 200 | 220 | 250 | – | 250 |

## தன்னம்பிக்கை கொள்ளுங்கள்

நமது நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகத் திகழுங்கள்! தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒருசிலருடைய வரலாறே உலக சரித்திரம் ஆகும். அளவற்ற பலமும் பெண்ணைப் போல் இரக்கமுள்ள இதயமும் பெற்றவனே உண்மை வீரன். இளைஞர்களே, தேச முன்னேற்றம் என்னும் தேர்ச் சக்கரத்தைச் செலுத்துவதற்கு உங்கள் தோள்களைக் கொடுங்கள். நீங்கள் செம்மறியாடுகள் என்ற மயக்கத்தை உதறித் தள்ளுங்கள். சுயநலம் என்பதை அறவே தூர எறிந்துவிட்டு வேலை செய்யுங்கள். உன்னை நீயே பலவீனன் என்று நினைத்துக் கொள்வது மிகப் பெரிய பாவம்.

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | 3 | | 5 | | |
| | 5 | | 9 | | | | 3 | |
| | 8 | 7 | | | 1 | | | |
| | | | | | 6 | | 7 | 5 |
| | | 8 | 5 | | 2 | 3 | | |
| 5 | 7 | | 1 | | | | | |
| | | | 8 | | | 2 | 1 | |
| | 6 | | | | 4 | | 9 | |
| | | 1 | | 2 | | 7 | 5 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 6 | 8 | 3 | 5 | 7 | 9 | 2 | 4 |
| 7 | 9 | 5 | 1 | 2 | 4 | 3 | 6 | 8 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 8 | 1 | 5 | 7 |
| 4 | 5 | 6 | 7 | 3 | 1 | 8 | 9 | 2 |
| 9 | 1 | 2 | 8 | 4 | 6 | 7 | 3 | 5 |
| 8 | 3 | 7 | 5 | 9 | 2 | 6 | 4 | 1 |
| 5 | 8 | 9 | 4 | 7 | 3 | 2 | 1 | 6 |
| 2 | 4 | 1 | 6 | 8 | 9 | 5 | 7 | 3 |
| 6 | 7 | 3 | 2 | 1 | 5 | 4 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையிலான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலினும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**புரட்டாதி-19**
**செவ்வாய்க்கிழமை**
**06.10.2015**

திதி: நவமி
மு.இ.08.21 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
பி.ப.02.23வரை
சுபநேரம்: 10.32-12.02 வரை
இராகு காலம்:
03.02-04.32 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

**இரண்டாம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் நேற்று முன்தினம் உதயனில் வெளியானது. இன்று 3 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றிப் பார்ப்போம்.**

மூன்றாம் எண்ணில் பிறந்தவர்களும் அதிர்ஷ்டசாலிகளே. திருவள்ளுவர் திருக்குறளில் அறத்துப்பால், பொருட் பால், காமத்து பால் என மூன்று வகையாகப் பிரித்து திருக்குறளை இயற்றியுள்ளார். முத்தமிழ் முழக்கம் நமது முன்னோர்களால் இயற்றப்பட்டுள்ளன. அவை இயல், இசை, நாடகமாகும். எனவே மூன்று என்ற எண்ணும் நமது வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே கருதப்படுகிறது. மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் குருவின் ஆதிக்கத்துக்குரியவர்கள்.

**குண அமைப்பு**

மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் குருவின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் என்பதால் நல்லொழுக்கமும், உயர்ந்த பண்புகளையும் பெற்றிருப்பார்கள். நல்ல பேச்சாற்றல், எழுத்தாற்றல் யாவும் அமைந்திருக்கும். தாம் கற்றதை பிறருக்கும் கற்றுக் கொடுக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்கள். நல்லவர்களிடத்தில் சுமுகமாக பழகும் குணமும், அத்து மீறி நடப்பவர்களை கண்டிக்கத்தக்க தைரியமும் உடையவர்கள். தன்னைச் சார்ந்தவர்களாக இருந்தால் தவறுகளை மன்னிக்கும் சுபாவம் இருக்கும். எந்தக் காரியத்திலும் ஈடுபட்டாலும் அதை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். மிகவும் சுறுசுறுப்பும், எதையும் எளிதில் கிரகிக்கக்கூடிய தன்மையும் இவர்களுக்கு உண்டு. சுயநலம் பாராமல் உதவி செய்யக்கூடிய குணமிருப்பதால், இவர்களிடம் எதையும் எளிதில் சாதித்துக் கொள்ளலாம். முகஸ்துதிக்கு அடிமையாவார்கள். உண்மையே பேசி நீதி நியாயத்தை வாழ்வில் கடைபிடிப்பார்கள். பெரிய கருத்தரங்குகளிலும் மணிக்கணக்கில் பேசக்கூடிய திறமை இருக்கும். எவ்வளவு வேகமாகப் பேசினாலும் சொற்கள் அழுத்தம் திருத்தமாக வந்து விழும். தான் செய்த பெரிய சாதனைகளைப் பற்றியும், பிறருடைய குற்றம் குறைகளையும் சில நேரங்களில் பழித்துப் பேசுவார்கள். இவர்களிடம் இருந்து வரக்கூடிய வார்த்தைகள் வில்லில் இருந்து விடுபடும் அம்பு போலக் கடுமையானதாக இருக்கும். முன் கோபக்காரர்கள். ஆனாலும் கோபம் தணிந்து பின் உண்மையை உணர்ந்து கொள்வார்கள். எதையும் மனதில் வைத்துக் கொள்ளாமல் கள்ளம் கபடமின்றி உள்ளன்புடன் அனைவரிடமும் மனம் திறந்து பேசுவதால், இவர்களிடம் இரகசியங்கள் தங்காது. மற்றவர்களுக்கு உதவி செய்யக்கூடிய பண்பு இருந்தாலும் அடிமைத் தொழில் செய்வது அறவே பிடிக்காது. பல்வேறு பொதுக் காரியங்களில் ஈடுபடக் கூடிய வாய்ப்பும் உண்டாகும். ஆன்மிக, தெய்வீகப் பணிகளில் அதிக ஈடுபாடுடையவர்கள்.

**உடலமைப்பும் ஆரோக்கியமும்**


மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் நடுத்தரமான உயரத்தை உடையவர்கள், நீண்ட கழுத்தும், திரண்ட புஜங்களும் கூரிய மூக்கும், நல்ல நிறமும் இருக்கும். இவர்கள் குரலில் அதிகாரமும், கட்டளையிடுவது போல கண்டிப்பும் பிரதிபலிக்கும். தலையில் சீக்கிரமே வழுக்கை விழும். சாதாரணமாக சரும நோய் தோன்றும். நரம்புத் தளர்ச்சி, மூட்டு வாதம் முதலியவை உண்டாகும். சரியான நேரத்துக்கு உணவு உண்ணும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால் குடலில் புண்களும் ஏற்படும். இருதய பலவீனம் உண்டாகும். இவர்கள் அதிக சிந்தனைகள் செய்வதால் தலைவலி ஏற்படவும் வாய்ப்புண்டு. குளிர்ச்சியான பொருள்களைத் தவிர்ப்பது நல்லது.

**குடும்ப வாழ்க்கை**

மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் குடும்ப வாழ்வில் எவ்வளவு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் அதனை சுலபமாக சமாளித்து விடுவார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபட்டாலும் ஒரு சிலருக்கு மட்டுமே காதல் திருமணம் கைகூடும். பலருக்கு பெரியவர்கள் பார்த்து நிச்சயிக்கும் திருமணமே நடைபெறும். இவர்களுக்கு அமையும் வாழ்க்கைத் துணை நல்ல தெய்வ நம்பிக்கை மிக்கவராகவும், கணவன், மனைவி இருவரும் விட்டுக் கொடுத்து செல்லக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஒருவரின் வாழ்க்கைக்கு மற்றொருவர் ஏணியாக இருப்பார்கள் என்று கூறினால் மிகையாகாது. உற்றார், உறவினர்களின் ஆதரவு ஓரளவுக்கே அமையும். சில நேரங்களில் அவர்களுடன் ஒத்துப்போக முடியாத சூழ்நிலையும் உண்டாகும்.

**பொருளாதாரம்**

மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் பெரும்பாலும் செல்வந்தர்களாகவே இருப்பார்கள். எதிர்பாராத வகையில் திடீர் தனவரவுகளையும் கிடைக்கப்பெறுவார்கள். சுகவாழ்வு, சொகுசு வாழ்வுக்குப் பஞ்சம் இருக்காது. வாழ்க்கையில் பண கஷ்டம் இருக்காது. பல்வேறு பொதுக் காரியங்களுக்கும், ஆன்மிக, தெய்வீக காரியங்களுக்காகவும் செலவு செய்யக்கூடிய வாய்ப்பு அமையும்.



**தொழில்**

மூன்றாம் எண்ணில் பிறந்தவர்கள் மிகுந்த புத்திசாலிகள் என்பதால் இவர்களுக்கு ஏற்ற தொழில் என பார்க்கும் போது பல பேருக்கு கல்வி சொல்லித் தரக்கூடிய ஆசிரியர் பணி, தலைமை ஆசிரியர் பொறுப்பு யாவும் அமையும். நீதிபதிகள், வக்கீல்கள் முதலான சட்டத் தொடர்புடைய தொழில்களும் முன்னேற்றம் கொடுக்கும். நல்ல வியாபாரிகளாகவும், கோயிலில் பணிபுரிபவர்களாகவும் இருப்பார்கள். 3 ஆம் எண் குருவின் ஆதிக்கத்திலிருப்பதால் ஜோதிடக் கலையிலும் ஆர்வம் இருக்கும்.

**நண்பர்கள், பகைவர்கள்**

கள்ளம் கபடமின்றி வெள்ளை உள்ளத்துடன் பழகக்கூடிய இவர்கள் பிறருக்கு சுயநலமில்லாமல் உதவி செய்வார்கள். நன்றிக்கு உதாரணமாக இருப்பார்கள். தனக்கு பிடிக்காதவர்களைக் கண்டு கொள்ளவே மாட்டார்கள். 1,2, 9 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் இவர்களுக்கு நட்பாக இருப்பார்கள். 5,6 ஆம் எண்ணில் பிறந்தவர்களுடன் இவர்களால் ஒத்துப் பேசமுடியாது.

**குருவுக்குரிய காலம்**

நவம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையிலான ஒரு மாத காலமும், மற்றும் பெப்ரவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான காலமும் குருவைச் சேர்ந்தவை. பகல் இரவு இரண்டும் குருவுக்கு பலமான காலங்கள். வியாழக்கிழமை குருவுக்கு உகந்த நாள்.

**குருவுக்குரிய திசை**

குருவுக்குரிய திசைவடகிழக்கு மூலை எனக் குறிப்பிடக் கூடிய ஈசானிய மூலையாகும். 3 ஆம் எண்ணுக்குரியவர்கள் எந்தக் காரியத்தையும் ஈசானிய மூலையில் தொடங்கினால் நற்பயன்கள் உண்டாகும்.

**அதிர்ஷ்டக் கல்**

குருவுக்குரிய இரத்தினம் புஷ்பராகம் ஆகும். புஷ்பராக கல் பதித்த மோதிரம், சங்கிலி போன்றவற்றை அணிந்து கொள்வதால் எல்லா வகையிலும் மேன்மைகளையும், வெற்றிகளையும் அடையலாம்.

**பரிகாரங்கள்**

குருபகவானுக்கு வியாழக்கிழமைகளில் நெய் தீபமேற்றி, முல்லை மலர்களால் அலங்கரித்து மஞ்சள் வஸ்திரம் அணிவித்து அர்ச்சனை செய்வது உத்தமம். குருவுக்கு பிரதியாக தட்சிணாமூர்த்தியையும், வழிபடலாம். ஸ்ரீராமனுடைய சிறப்பைக் கூறும் பாடல்களையும் பாராயணம் செய்யலாம்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்ட திகதி –3,12,21,30
அதிர்ஷ்ட நிறம் –பொன்நிறம், மஞ்சள்
அதிஷ்ட திசை – வடக்கு
அதிர்ஷ்ட கிழமை –வியாழன்
அதிர்ஷ்டக் கல் –புஷ்பராகம்
அதிர்ஷ்ட தெய்வம்– தட்சிணாமூர்த்தி

# பெரிது பெரிது பெண்மையின் சக்தி!

இணையவள்

பெண் என்பவள் ஆதாரசக்தி, வாழ்வின் ஆதாரம். பெண் இல்லை எனில் சிருஷ்டியே இல்லை. அவளை முன்னிறுத்தியே சிருஷ்டி நடந்து வருகின்றது என நேற்றுமுன்தினம் உதயனில் வெளியானதைப் பார்த்தோம். இன்று பெண்கள் பூச் சூடலாமா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

பெண்கள் மீது அனைத்து ஆண்களுக்கும் ஒருவித பயம் கலந்த பக்தி உண்டாகிறது. ஆனால் அதே ஒரு பெண்ணாக இருந்தால் தனது கணவனின் ஆத்மசக்தியைத் தனக்கும் சேர்த்துத் துணையாக்கிக் கொண்டு, தனது இல்லறத்தை நல்லறமாக்கிக் கொள்ளுவது மட்டுமல்லாமல், தனது குலத்தையே தழைக்கச் செய்வாள். உண்மையில் பெண்கள் ஆண்களை விடப் பலம் படைத்தவர்கள் மனோரீதியாக. முதலில் சொன்னதற்கு உதாரணம் புனிதவதியார். கணவன் கொடுத்த மாம்பழத்தை சிவனடியாருக்குப் படைத்த அவர், பின்னர் இறை அருளால் மற்றொரு மாம்பழத்தை வரவழைக்கக் கண்ட அவரது கணவன் பரமதத்தன், அவரிடம் இருந்து ஒதுங்கினான்.. ஏனெனில் அவரின் இறைத் தன்மையைக் கண்டு அவன் பயமும், மரியாதையும் கலந்த ஓர் உணர்வு அவனிடம் உண்டாகியது. பவளமல்லிப் பூவைத் தலையில் சூட முடியுமா? இறைவனுக்கே படைக்கப்பட்டவை அல்லவா அவை? தானே மலர்ந்து, தானே உதிரும் அந்தப் பூவைப் பொறுக்கி இறைவனுக்கு மட்டுமே அர்ப்பணிக்க முடியும் அல்லவா? அதே மல்லிகைப் பூ, பிச்சிப் பூ, முல்லைப் பூக்கள் மங்கையரும் சூடலாம், இறைவனுக்கும் அர்ப்பணிக்கலாம். மற்ற சில வேலைகளுக்கும் பயன்படும். ஆகவே இப்படிப் பட்ட பெண்களைப் புனிதவதியார் என்றழைக்கப்படுவதில் தவறே இல்லை. பிறப்பால் மட்டுமன்றி அவர்களின் புனிதத் தன்மை ஏதோ ஒரு காலகட்டத்தில் வெளிப்பட, அவர்கள் பிறந்ததின் நோக்கம் புலப்பட, சாதாரண வாழ்வு வாழ அவர்கள் படைக்கப் படவில்லை என்பது புலனாகின்றது. இதைப் போய்த் தவறு என்று சொல்லி, புனிதம் என்று பெண்ணை ஒதுக்கிய ஆணாதிக்கம் என்று கூறப் புனி





தத்தின் அர்த்தத்தையே புரிந்து கொள்ளாதவர்கள். அந்தப் பெண் படைக்கப்பட்ட நோக்கம் தெரிய வந்ததுமே இல்வாழ்வு அவளுக்கு மறுக்கப்பட்டது என்றாலும், முதலில் கலங்கிய அந்த அம்மையார் பின்னர் தெளிந்தார் அல்லவா? தனது வாழ்வின் நோக்கம் புரிந்து கொண்டார் அல்லவா? ஒருவேளை இதைப் புரிந்து கொண்டு தான், ஔவை திருமணத்துக்கு முன்பே, மூப்பை வேண்டிப் பெற்றாளோ? குடும்பத்தைத் தாங்கும் ஒரு பெண், தனது குடும்பத்தை மட்டுமன்றி சமூகத்துக்கே பெரிய உதவி புரிகின்றாள். நல்மக்களை வளர்ப்பதன் மூலம் நாட்டையே உயர்த்து கின்றாள். கணவனது உடல், உள்ளம் மட்டுமில் லாமல் அவனின் ஆன்மாவையும் காப்பது பெண்களே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தளபதியின் சமரசம்



ஒரு நாட்டின் மன்னர் ஒருவர், முல்லாவுக்கு ஒரு வீட்டின் ஒரு பகுதியை அன்பளிப்பாகக் கொடுத்தார். அந்த வீட்டுக்கு மாடி உண்டு. அந்த மாடிப் பகுதியை மன்னர் ஒரு படைத் தளபதிக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். மாடியில் இருக்கும் படைத் தளபதியின் மனைவி அடிக்கடி கல் உரலில் மா இடிப்பாள்.

அந்தச் சமயத்தில் கீழ் வீட்டில் இருக்கும் முல்லாவுக்கு பெரிய தொந்தரவாக இருக்கும். மா இடிக்கும்போது வீடே அதிரும். இடியோசை மாதிரிச் சத்தமும் கேட்கும். முல்லா இரண்டு மூன்று தடவை படைத் தளபதியைச் சந்தித்து கொஞ்சம் மெதுவாக மா இடிக்குமாறு அவர் மனைவிக்குச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார். படைத் தளபதிக்கோ கோபம் வந்து விட்டது. இது மன்னர் எனக்காக அளித்த வீடு. ஆகவே இது எனக்குச் சொந்தமானது. எனது வீட்டில் எனது மனைவி எப்படி வேண்டுமானாலும் மா இடிப்பாள். அதைக் கேட்பதற்கு நீ யார் ? என்று முல்லாவை அதட்டி அனுப்பி விட்டார். மறுநாள் முல்லா கீழே உள்ள தனது வீட்டுப் பகுதியில் கடப்பாறையைக் கொண்டு இடித்துக் கொண்டிருந்தார். கீழே என்ன செய்கிறாய் ? என்று படைத் தளபதி மாடியில் இருந்து அதட்டினார். கீழ்ப்பக்கம் இருக்கும் எனது வீட்டை முற்றிலுமாக இடித்துத் தள்ளி விட்டுப் புதிதாக கட்டத் தீர்மானித்திருக்கிறேன் என்றார் முல்லா. அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த படைத் தளபதி என்னய்யா முட்டாளாக இருக்கிறீரே, கீழ்வீடு முழுவதையும் இடித்தால் மேல் வீடு என்ன ஆகும் என்று யோசித்தீரா ? என்று கோபத் தோடு கேட்டார். மேல் வீட்டைப் பற்றி நான் ஏன் கவலைப்பட வேண்டும். எனக்குச் சொந்தமான வீட்டை நான் இடிக்கி றேன். இதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை என்று கூறி விட்டு முல்லா சுவரை இடிக்கத் தொடங்கினார்.

பதறிப்போன படைத்தளபதி முல்லாவிடம் சமரசம் பேச முற்பட்டார். நாம் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக் கொள்ளாமல் ஒருவரையொருவர் அனுசரித்தச் செல்வது தான் நல்லது. நாம் இருவரும் நண்பர்களாக இருப்போம் என்றார் தளபதி. நான் எப்போதுமே யாருக்கும் நண்பன்தான்! என்று கூறிவிட்டு முல்லா சிரித்தார்.

# வர்ணம் தீட்டலாம் வாங்க



# கிளியைப் பற்றிதெரியுமா?



கிளி ஓர் அழகான பறவை.
கிளி கீ கீ எனக் கீச்சிடும்.
கிளி பழங்கள் தின்னும்.
கிளியின் நிறம் பச்சை.
கிளியின் சொண்டின் நிறம் சிவப்பு.
கிளி வீட்டின் செல்லப்பிராணி.
கிளி மனிதர்கள் பேசுவதைத்தானும் பேசும்.
கிளி முட்டை இடும்.
கிளியில் பல இனங்கள் உண்டு.
கிளி பொந்துக்குள் வசிக்கும்

ஜெ.தூரிகா, தரம்- 3,
சென்.பெனடிற் வித்தியாலயம்.

# வெற்றிபெற விரைந்து செயற்படுங்கள்



செயல்களே உங்களுக்கு வெற்றிமாலையைச் சூட்டுகின்றன. உங்களுக்கு என்னென்ன தெரியும் என்பதைவிட அவற்றில் என்னென்னவற்றை எந்தெந்த அளவுக்கு நீங்கள் செயற்படுத்துகின்றீர்கள் என்பதே முக்கியம். பயன்படுத்தப்படாத அறிவும், பயணப் படாத பாதையும் பயன்படுவதில்லை. உங்களின் ஒவ்வொரு அறிவுத்துளியும் வெற்றியாக விளைய வேண்டும் எனில், அதை உழைப்பு என்ற நிலத்தில் ஊன்றி, வியர்வை என்னும் நீர் பாய்ச்சி, களைப்பு எனும் களையை நீக்கி முயற்சி யெனும் உரமிட்டு வளர்க்க வேண்டும். அப்பொழுது தான் உங்களின் வாழ்நாள் வளமுடையதாக அமையும். எல்லையில் லாத ஆற்றலை அடி மனதில் வைத்துக் கொண்டு வெற்றிக்கனியைச் சுவைக்காமல் நீங்கள் இருக்கின்றீர்கள் என்றால், அதற்கு வேறு யாரும் பொறுப் பல்ல. நீங்கள்தான் முழுப் பொறுப்பு. ஏனென்றால், உங்களது முயற் சிச் சிறகுகளை அசைக்காததால்தான், வெற்றிவானம் உங்களுக்கு அகப்படவில்லை. ஆக்க ஆற்றலை வைத்துக் கொண்டு நீங்கள் செயல் எனும் தேரில் ஏறி வெற்றியூரை அடையவில்லை எனில், அதற்கு நீங்களே காரணம். அவ்வாறு ஆற்றலை வைத்துக் கொண்டு சோம்பல் சிறையில் அடைபட்டுக் கிடக்கின்றீர்கள் என்றால், உங்களுக்கு நீங்களே தீங்கு செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று பொருள். உங்களுடைய வெற்றிக்கும் தோல் விக்கும் நீங்கள் பொறுப்பு ஏற்கும் போதுதான் உங்களது வாழ்க்கைப் படகை உங்களின் இலக்கை நோக்கிச் செலுத்த முடியும். கொஞ்சம் சிந்தியுங்கள், உங்களுடைய எண்ணத்தைக் கொஞ்சம் மாற்றியமைத்தால் வெற்றிப் பாதையை உங்களால் அறிந்து கொள்ளமுடியும். எண்ணங்களே முன்னேற்றத்தின் ஏணிப்படிகள். ஆக்க எண்ணம் மேலே ஏறுகின்றது. அழிவு எண்ணம் கீழே இறங்குகின்றது.

**வெற்றிக் கைகாட்டி**

கீழ்க்காணும் வழிகளில் சிந்தித்தால், வெற்றிப்பாதையைத் தெரிவு செய்வதற்கு உங்களை நீங்களே ஆயத்தப்படுத்திக் கொள்ள முடியும்.

1.தவறு நேர்ந்து விடுமோ என்ற அச்சத்தை தவிர்த்து விடுங்கள்.
2.சோர்வை அகற்றுங்கள்.
3.தள்ளிப்போடும் எண்ணத்தைக் கிள்ளிப் போடுங்கள்.
4.வென்றால் வெற்றி, தோற்றால் அனுபவம் என்ற நோக்கில் எதையும் தொடங்குங்கள்.
5.வெற்றிக்கு புத்திசாலித்தனமான உழைப்பே மூலதானம் என முழுமையாக நம்புங்கள்.
6.வெற்றிப்பயணத்தில் இலக்கை அடையும் வரை ஓய்வில்லை என்ற உறுதி எடுத்துக் கொள்ளுங்கள்.
7.தோல்வி நேர்ந்தால் பிறரைக் குறை கூறும் மனநிலையை அகற்றி விடுங்கள்.
8.எதிலும் நன்மை உண்டு என்று நம்புங்கள்.
9.உங்களை நீங்கள் முழுமையாகப் பயன் படுத்தத் தொடங்குங்கள்.

**அச்சம் அச்சப்படட்டும்**

உங்களின் எழுச்சியையும் உத்வேகத்தையும் கண்டு, அச்சம் அச்சப்படட்டும். சூரியனின் உதயம் கண்டு விலகுகின்ற இருளைப் போல உங்களின் ஒளித்தொடக்கத்தையும் உற்சாக ஈடுபாட்டையும் கண்டு, மனதில் ஒட்டிக் கொண்டிருக்கும் அச்சமும் எதிர்மறையான சிந்தனையும் விலகி ஓடட்டும். செய்து முடிக்க முடியும் என்ற முனைப்போடு ஒரு செயலைத் தொடங்கும்போது, அந்தச் செயலைச் செய்து முடிப்பதற்கான ஆற்றல் இயல்பாகவே உங்களுக்கு வந்து விடுகின்றது என மனநல அறிஞர்கள் கூறுகின்றார்கள். ஆகவே, ஆழ்மனதில் நம்பிக்கை விதைகளைத் தூவுங்கள். அச்சமின்றி எதையும் விழிப்புணர்வோடு தொடங்குங்கள். எல்லாத் திசைகளையும் நன்கு கவனித்தவாறே உங்கள் வெற்றிப் பயணம் தொடங்கட்டும். அதிக மகிழ்ச்சியோ அதிக கவலையோ உங்களை அதிகமாகப் பாதிக்காதவாறு மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்ளுங்கள்.

**சோர்வை விரட்டுவோம்**

ஒருவரை வெற்றியிலிருந்து விலக்கி வைப்பதில் சோர்வு முந்திக் கொள்கின்றது. ஆகவே, சோர்வை விலக்கி விட்டால்தான் உங்களால் வெற்றியடைய முடியும். வாழ்வின் மீதும், செய்கின்ற செயலின் மீதும் பிடிப்பும் ஈடுபாடும் இல்லாதபோது மனதில் சோர்வும் தளர்ச்சியும் உண்டாகின்றது. பின்னர், அதுவே உடற் சோர்வாக மாறி உங்களுடைய ஊக்கத்தையும் உற்சாகத்தையும் குலைத்து விடுகின்றது. அதன் காரணமாக நீங்கள் முழு ஈடுபாட்டுடன் பணி செய்யாத நிலை ஏற்படுகின்றது. முழு ஈடுபாடும் ஆர்வமும் இல்லாமல் செய்யப்படுகின்றன பணிகள் எதிர்பார்த்த அளவில் வெற்றியடையாமல் தோல்வியைத் தழுவுகின்றன. மனமும் உடலும் சோர்வாகவும் தளர்ச்சியாகவும் இருக்கும்போது செய்கின்ற செயல்களில் ஏற்படுகின்ற தோல்வி, மேலும் உங்களைப் பலவீனம் அடையச் செய்கின்றது. ஆகவே, மனம் சோர்வற்ற நிலையில் உற்சாகமாகவும் புத்துணர்வோடும் இருக்குமாறு வைத்துக் கொண்டால், உங்களது வெற்றிப் பயணம் இனிமையாகத் தொடரும். மனதை புத்துணர்வோடும் உத்வேகத்தோடும் வைத்துக் கொள்ள கீழ்க் காணும் வழி முறைகளைப் பின்பற்றலாம்.

1.தன்னம்பிக்கை தரும் நூல்களைப் படியுங்கள்.
2.உற்சாகமும் ஊக்கமும் தரும் சொற்பொழி வுகளைக் கேளுங்கள்.
3.உங்களை ஊக்கப்படுத்தும் ஆற்றல் உடைய நண்பர்களுடன் உரையாடுங்கள்.
4.மனதில் தன்னம்பிக்கையை விதைக்கும் பாடல்களைக் கேளுங்கள்..
5.வாழ்நாளில் எதையாவது ஆக்கபூர்வமாகச் சாதிக்க வேண்டும் என்று எப் பொழுதும் எண்ணிக் கொண்டே இருங்கள்.
6. மன ஆற்றலை இழக்கச் செய்யும் சூழ்நிலை, நூல்கள், நண்பர்கள், போன்றவற்றை விலக்குங்கள். மேலும் எதிர்மறை எண்ணத்தை உண்டாக்கும் சூழலில் இருந்து விலகுங்கள்.

**தள்ளிப்போடும் எண்ணம்**

எதையும் தள்ளிப்போகும் எண்ணம் உங்களுடைய வெற்றிக்குத் தடைகல்லாக இருக்கின்றதா என எண்ணிப்பாருங்கள். நீங்கள் தள்ளிப்போடுவது பணிகளைப் மட்டும் அல்ல உங்களுடைய முன்னேற்றத்தையும் தான் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தள்ளிப் போடுவது என்பது ஒருவிதமான மனநோய் என்று கூடச் சொல்லலாம்.

முடிக்க முடியாத பணிகளைத் தள்ளிப் போடுவதற்கும் முடிக்கக்கூடிய பணிகளைத் தள்ளிப்போடுவதற்கும் நிறைய வேறுபாடு உண்டு. அவ்வாறு தள்ளிப் போடுவதால் ஏற்படும் விளைவுகளும் வேறுவேறானவை. ஆகவே, இன்றே முடிக்கக் கூடிய பணிகளை நாளை என்று தள்ளிப் போடாதீர்கள். காரணமும் அவசியமும் இல்லாமற் பணிகள் உங்களிடம் தேங்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்குச் சிறுவருக்காக பட்ஜெட்டில் அதிக நிதி தேவை

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கோரிக்கை

வவுனியா, ஒக்.5
வடக்கு-கிழக்கில் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாக கூடியகவனம்செலுத்தப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், புதிய வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக அதிகளவு நிதி ஒதுக்கப்பட வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார்.
சிறுவர் தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழுகின்ற மக்களை விடவும் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ்பேசும் மக்கள் போரின் பாதிப்புகளை நேரடியாகச் சந்தித்தவர்களாகவுள்ளனர். போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 6 வருடங்களைக் கடந்த பின்பும் வடக்கு மக்கள்தற்போதுவரைபோரின்கடுமையான பாதிப்புகளிலிருந்து மீளமுடியாதவாறு பெருந்துயரத்துக்குள் அமிழ்த்தப்பட்டுள்னனர்.
குறிப்பாக வடக்கு-கிழக்கில் வாழும் சிறுவர்களுக்கு இலங்கையின் ஏனைய மாகாணங்களில் வாழும் சிறுவர்களை விடவும் பல குறைபாடுகளும், பிரச்சினைகளும் காணப்படுகின்றன. அத்தியாவசியமான தேவைகளும் பிரத்தியேகமான வசதி வாய்ப்புகளும் தேவைப்படு கின்றன.
கொடுமையானபோரின்காரணமாகத் தாய் அல்லது தந்தை இருவரையும் இழந்துள்ள பிள்ளைகள், காணாமல் ஆக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பிள்ளைகள், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் பிள்ளைகள், கடும் காயமுற்றுள்ள விசேட தேவைக்குட்பட்டுள்ளவர்களின்பிள்ளைகள்என்றுமிகவும் மோசமான பாதிப்புகளுடன் சிறுவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.
இவர்களில்ஒருதொகுதிசிறுவர்கள் போரினால் அவயங்களை இழந்தும், துப்பாக்கிச் சன்னங்கள், எறிகணைச் சிதறல்களை உடலில் தாங்கிக்கொண்டும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ரணத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களுக்கு மருத்துவ தேவைகள் காணப்படுகின்றன. அதேவேளை பாடசாலைக்கல்வியைகைவிட்டும், கைவிடும் நிலையிலும் உள்ளமையும் விசேடமாகக் கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.
போரின் நேரடித் தாக்கங்களிலிருந்து மீளமுடியாது தவித்துக்கொண்டிருக்கும் இந்த சிறுவர்களுக்குரிய கல்வி, உணவு, சுகாதாரம், பாதுகாப்பு, பராமரிப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டியபெரும் பொறுப்பு அரசுக்கே உண்டு. அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.
வடக்கு மாகாணத்தில் மட்டும் 12ஆயிரம் வரையான சிறுவர்கள் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்துள்ளனர். ஆகவே புதிய அரசு 2016ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில், போரினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களின்அறுவைச்சிகிச்சைஉள்ளிட்ட விசேட மருத்துவ தேவைகளுக்கு என்று கூடியளவு நிதியை ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றேன். வன்மம் காட்டாமல், பகையுணர்வுபாராட்டாமல்மனிதாபிமானத்தோடு புதிய அரசு இதனை செய்ய வேண்டும்-என்றுள்ளது.(த-402)

## குடும்பப் பெண் சாவில் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக். 5
அக்கராயன் வைத்தியசாலையில் பணிபுரியும்பெண் உத்தியோகத்தர் ஒருவர்உயிரிழந்துள்ளார். அவரது சாவில் சந்தேகம் உள்ளது என்று கூறப்படுகின்றது.
47 வயதுடைய குறித்த பெண்கிருமி நாசினி அருந்தி தற்கொலைக்கு முயன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் நேற்று கிளிநொச்சி வைத்தியசாலையில்அவரின்உறவினர்களால் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காது உயிரி ழந்தார்.
உடற் கூற்றுப் பரிசோதனையின் போது அந்தப் பெண் கிருமி நாசினி அருந்தியமையால் சாவு ஏற்பட்ட போதும்உடலின்பலபாகங்களிலும் சந்தேகத்திற்கிடமான பல காயங்களும் காணப்பட்டுள்ளது என்றும் அதனால் அவரது சாவில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (ற-4,101)

## கவிதை நூல் தொகுப்பு வெளியீடு

'பார்வைகள்' கவிதை நூல் தொகுப்பு வெளியீடு இன்று பி.ப. 3.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.
நூலாசிரியர் அபிர்ராஜனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் தி.ஜோண்குயின்ரஸ் நூல் வெளியீட்டு உரையை வழங்கவுள்ளார். (ற-ரி5)

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

வவுனியா, ஒக்.5



வவுனியாமத்தியபஸ்நிலையத்தில் 2கிலோ 250கிராம் கேரள கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என வவுனியா கஞ்சா தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.
கடந்த வியாழக்கிழமை கிடைத்த ரகசியத்தகவல் அடிப்படையில் நண்பகல் 12 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்ட 2 கிலோ 250 கிராம் கொண்ட கேரள கஞ்சா பொதி கைப்பற்றப்பட்டுள்ளது.
அவற்றைக் கொண்டு சென்றனர் என்று சந்தேகிக்கப்படும் 26,28 வயதுடைய இரு இளைஞர்களுடங் வவுனியா மாவட்ட கஞ்சா தடுப்பு உதவி பொலிஸ் அதிகாரி எஸ். ஜ. றுவான் றணசிங்க தலைமையிலான எட்டுப்பேர் கொண்ட குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதானவர்கள் இன்று வவுனியா நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளார். (ற)

## சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர் இந்த வருடமும் தெரிவு செய்யப்படுவர்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5
வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலிருந்தும் சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களை தெரிவு செய்து கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் இந்த வருடமும் சிறந்த வீட்டுத்தோட்டச்செய்கையாளர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர் என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.
குறித்த போட்டியில் சகல வீட்டுத் தோட்டச் செய்கையாளர்களும் பங்குபற்ற முடியும் எனவும் வீட்டுத் தோட்டம் 1/16 ஏக்கருக்கு கூடிய விஸ்தீரணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வீட்டுத் தோட்டம் தானியப் பயிர்கள், அவரையினப் பயிர்கள், கிழங்குத் தாவரங்கள், உள்ளூர் மரக்கறி பயிர்கள், மேல்நாட்டு மரக்கறிப் பயிர்கள், வாசனைப் பயிர்கள், மருத்துவ பயிர்கள், பழப்பயிர்கள், அழகுத் தாவரங்கள் மற்றும் ஏனைய பயன்தரு மரங்களை கொண்டிருக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
பயிர்ச்செய்கை தொடர்ச்சியானதும் வருடம் முழுவதும் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்தியை பெறக்கூடியதாகவும் மனைப்பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய வகையிலும் இருத்தல் வேண்டும் எனவும் சேதன விவசாயம், சுற்றுப்புறச் சூழலுக்கு நேசமான பீடை முகாமைத்துவம், ஒருங்கிணைந்த விவசாயம், தேனீ வளர்ப்பு நடவடிக்கை, சிக்கனமாகவும் வினைத்திறன் நீரைப் பயன்படுத்தும் தொழில்நுட்பங்களை கொண்டிருத்தல், சூழல்முகாமைத்து வமும் சூழல் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதலும், நிலம் மற்றைய வளங்களின் வினைத்திறனான பயன்பாடு போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.
போட்டிக்கானவிண்ணப்பப்படிவங்களை சம்பந்தப்பட்ட விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளில் நடத்தப்பட்டு மூன்று சிறந்த வீட்டுத் தோட்டச் செய்கையாளர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் இரண்டாம் கட்டத் தெரிவானது விவசாயப் போதனாசிரியர் மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றவர்கள் மத்தியில் நடத்தப்பட்டு மாவட்ட மட்டத்தில் மூன்று வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவர் எனவும் விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார்.
மாவட்ட மட்டத்தில் முதல் 3 இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் விவசாயப் போதனாசிரியர் பிரிவு மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெறும்வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. பரிசளிப்பு வைபவம் எதிர்வரும் தை மாதம் நடைபெறும் எனவும் இதற்கான மதிப்பீடுகள் நவம்பர் மாதம் நிறைவுறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-10)

## அமெ. தீர்மானத்துக்கு எதிராக எட்டுக் கட்சிகள் போர்க்கொடி

### ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கத் திட்டம்

ஜெனிவாவில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடரில் அமெரிக்காவின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு எதிராக 8 கட்சிகள் கூட்டாகப் போர்க்கொடி தூக்கியுள்ளன.
இலங்கை மீதான ஐ.நா. தீர்மானத்திற்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களைமுன்னெடுக்கவும் இந்தக் கட்சிகள் தீர்மானித்துள்ளன.
இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 14ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடுகள் செய் யப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின் றது.
தேசிய சுதந்திர முன்னணி, மகஜன ஐக்கிய முன்னணி, தூய யஹல உறு மய, ஜனநாயக இடதுசாரி முன்னணி, தேசிய விடுதலை மக்கள் முன்னணி, லங்கா சம சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற் றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்கு எதிரான அணி ஆகியன இணைந்தே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளன எனக்கூறப்படுகின்றது.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிருப்திக்குழுவின்தலைவராக செயற்படும் குமார வெல்கம மற்றும் பந்துல குணவர்த்தன, மகஜன ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, தூய யஹல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் கூடி இது தொடர்பில் தீவிர பேச்சில் ஈடு பட்டுள்ளனர் எனவும் தெரிவிக் கப்படுகின்றது.
இந்தப் பேச்சின்போதே ஐ.நா. தீர்மானத்திற்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. (த-சி)


விற்பனைக்கு
LI 7390 TIPPER TATA 3 Cube
விற்பனைக்குண்டு.
T.P - 077 169 7675

வீடு/காணி தேவை
திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்திக்கு அருகில் தனிப்பட்ட தேவைக்காக வீடு /காணி தேவைப்படுகிறது. விற்க விரும்புபவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்.
T.P: 076 803 4974


## பாலியல் குற்றவாளிகளுக்குத் தூக்கு: வலியுறுத்தி கொழும்பு வரை நடைபவனி

### இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கின்றது

யாழ்ப்பாணம், ஒக்.5
பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு தூக்குத் தண்டனையை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தி யாழ்ப்பாணம் தொடக்கம் கொழும்பு வரையான நடைபவனி இன்று ஆரம்பமாகவுள்ளது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.
புங்குடுதீவு மாணவி மற்றும் கொட்டதெனியாவ ஆகியோர் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நடைபெறவுள்ள இந்த நடைபவனி இன்று காலை 6.30 மணிக்கு யாழ்.மத்திய பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து கிளிநொச்சி வரையும், நாளை கிளிநொச்சி முதல் வவுனியா வரையும், நாளைமறுதினம் வவுனியா முதல் அநு[illegible]யிலும், 8 ஆம் திகதி [illegible] அநுராதபுரம் முதல் மாகோ வரையும், 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாகோ முதல் குருநாகல் வரையும், 10 ஆம் திகதி சனிக்கிழமை குருநாகல் முதல் வறாக்காப்பொல கம்பஹா வரையும், 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வறாக்காப் பொல தொடக்கம் வரையும், 12 ஆம் திகதி கம்பஹாவிலிருந்து [illegible] என அமைப்பாளர் [illegible]பாலசெல்வம் தெரிவித்துள்ளார். (ற-ரி5)


இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 2015-10-04 | வெற்றி வாரம் 1885 | வர்ணம் ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
13 17 30 50
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 3,313,420/-

ஜனஜய
வெற்றி வாரம் 675 திகதி 2015-10-04
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
V 21 26 39 53
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.7,157,100/-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக ஓமந்தையில் பேரணி

*ஓமந்தை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்று*



வவுனியா, ஒக்.5
நாட்டில் இடம்பெற்று வரும் சிறுவர் மற்றும் பெண்கள் மீது இடம்பெறும் துஷ்பிரயோகங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஓமந்தை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் நேற்றுக் காலை கண்டனப் பேரணி நடத்தப்பட்டது.

ஓமந்தை பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி சமன் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் ஓமந்தை வசிக்கும் பொதுமக்கள், அரச ஊழியர்கள், ஓமந்தை ஓட்டோ சாரதிகள், வர்த்தகர்கள், ஓமந்தை பொலிஸ் நிலைய பொலிஸார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சிறுவர்களை சிறுவர்களாக பார்க்க வேண்டும், பாதுகாப்பான சிறுவர் சூழலை உருவாக்குவோம், சிறுவர் துஷ்பிரயோகங்களை மேற்கொள்வோருக்கு தூக்குத்தண்டனை வழங்கு, காமஅரக்கர்களுக்கெதிராக ஒன்று திரள்வோம் போன்ற பதாகைகளுடன் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி ஓமந்தை மத்திய மகாவித்தியாலயத்தை சென்றடைந்தது. (ற-402)

# பட்டதாரிகள் உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்கின்றது


*ஐவர் வைத்தியசாலையில்*

அம்பாறை, ஒக்.5
வேலைவாய்ப்புகளில் புறக்கணிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டதாரிகள் கடந்த நான்கு நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நான்காவது நாளான சனிக்கிழமை மாலை 5 பேர் கடும் சுகவீனமுற்ற நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை தொடக்கம் இவர்கள் திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முதல் அமைச்சர் அலுவலக வாயிலில் உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். சுமார் 100க்கும் மேற்பட்ட பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ற-10)



# உணவகங்கள் மீது திடீர் சோதனைகள்



திருகோணமலை, ஒக்.5
திருகோணமலை நகரின் மத்தியில் உள்ள உணவகங்கள் மீது உணவு பாதுகாப்பு குழுவினர் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது செய்தி பத்திரிகையில் உணவுப் பண்டங்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை, சமைப்பதற்காக பயன்படுத்தப்பட உள்ள இறைச்சி சுகாதார முறையில் வைத்திருக்கப்படாமை, வடிகால்களில் கழிவுகள் கொட்டப்ப டுகின்றமை, மல சலகூட வாயிலில் வைத்து சமைப்பதற்காக மீன்கள் வெட்டப்படுகின்றமை, பழுதடைந்த கிழங்குகள் நல்ல கிழங்குகளுடன் சேர்த்து அவிக்கப்பட்டமை, போன்ற குற்றச்செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குறித்த உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# கலப்பு நீதிமன்ற நீதிபதிகளில் தமிழ் நீதிபதிகளும் வேண்டும்

*இந்திய கம்யூனிச கட்சி கோரிக்கை*

சென்னை, ஒக்.5
இலங்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவுள்ள கலப்பு நீதிமன்ற நீதிபதி குழாத்தில் தமிழ் நீதிபதிகளும் உள்வாங்கப்பட வேண்டும் என இந்திய கம்யூனிச கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றத்தின் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அண்மையில் ஜெனீவாவில் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இலங்கை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கவுள்ள கலப்பு நீதிமன்றம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அந்த கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு தலையிட்டு, தமிழ் நீதிபதிகளை இடம்பெற செய்ய வேண்டும் எனவும் கோரியுள்ளார்.

மேலும் இறுதிப் போரின்போது இடம்பெற்றதாக கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உள்ளக பொறிமுறை நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.

அதற்காக நியமிக்கப்படும் தீர்ப்பாயத்தில் பொதுநலவாய நாடுகளின் நீதிபதிகளும், வெளிநாட்டு நீதிபதிகளும் கட்டாயமாக உள்வாங்கப்படும் அதேநேரம், உள்நாட்டுநீதிபதிகளாகதமிழ்நீதிபதிகள் நியமிக்கப்படவேண்டும்எனவும்அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் சபாபதி



மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சபாபதி நேற்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு சபாபதியின் அன்பு மனைவியும், துரைராசா, நாகேஸ்வரி, செல்வராணி, யோகேஸ்வரி, ஜெயந்தி, நவரட்ணராஜா (நகுலன் களஞ்சியம், சங்கானை), பாலகிருஸ்ணன் (கனடா), காலஞ்சென்றவர்களான இராஜரத்தினம், நாகராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2015) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 5 இடங்கள் முன்னேறியது இலங்கை

கொழும்பு, ஒக்.5
உலகபோட்டியான(பொருளாதார) சுட்டெண்ணில் இலங்கை 5 இடங்களை தாண்டி முன்னேறியுள்ளது.

2015 ஆம் 2016 ஆம் ஆண்டுக்கான புதிய சுட்டெண்களை உலக பொருளாதார ஒன்றியம் வெளியிட்டுள்ளதுடன் இலங்கை இதில் 68 ஆவது இடத்தில் உள்ளது. 2014 ஆம் 2015 ஆம் ஆண்டு சுட்டெண் வரிசையில் இலங்கை 73ஆவது இடத்தில் இருந்தது.

கடந்த வருடத்தை போல் இந்த வருடத்திலும் சுவிஸர்லாந்துக்கு முதலிடம் கிடைத்துள்ளது. 140 நாடுகளைஅடிப்படையாககொண்டு இந்த பொருளாதார சுட்டெண் வெளியிடப்பட்டுள்ளது. இதில் 140ஆவது இடத்தில் கினியா உள்ளது.

முதல் பத்து நாடுகள் வரிசையில் முறையே சுவிஸர்லாந்து, சிங்கப்பூர், அமெரிக்கா, ஜேர்மனி, நெதர்லாந்து, ஜப்பான், ஹொங்கொங், பின்லாந்து, சுவீடன், இங்கிலாந்து ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. (ற)

# கொட்டதெனியாவ சிறுமி கொலை; இடைக்கால அறிக்கை 7ஆம் திகதி

கொழும்பு, ஒக்.5
வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கொட்டதெனியாவ சிறுமி கொலை தொடர்பான இடைக்கால விசாரணை அறிக்கையை எதிர்வரும் 7ஆம் திகதி சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

சிறுமி கொலை தொடர்பில் மாணவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். மரபணுபரிசோதனைகளில் குறித்த மாணவர் குற்றவாளி இல்லைஎன்றுநீதிமன்றம்தீர்ப்பளித்ததன் பின்னர் சிறுவன் விடுதலை செய்யப்பட்டார். என்றாலும், காரணமின்றி சிறுவன் கைதுசெய்யப்பட்டான் என்று பல்வேறு எதிர்ப்பலைகள் எழுந்தன.

கொலை தொடர்பில் முறையாக விசாரணைகள் மேற்கொள்ளப்படாமல்உயர்தரம்பயின்றுகொண்டிருந்த குறித்த மாணவனை கைது செய்தமை சட்டவிரோதமான செயலென மாணவனின் பெற்றோர் முறைப்பாடும் செய்திருந்தனர்.

விடுதலைசெய்யப்பட்ட மாணவன் உள்ளிட்ட இருவர்வழங்கியமுறைப்பாட்டின் அடிப்படையில் இந்த அறிக்கை எதிர்வரும் 7ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வறிக்கையில் மாணவனை விளக்கமறியலில் வைக்குமளவுக்கு போதுமான சாட்சியங்கள் இருந்ததா என்பது குறித்து பிரதானமாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

கைதானபின்னர்சிறுவன்உள்ளிட்ட இருவரும் பொலிஸாரால் தாக்கப்பட்டமைதொடர்பிலானவிடயங்களும் இவ்வறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத்தெரியவந்துள்ளது.

சிறுமியின் கொலை தொடர்பில் தானே சிறுமியை கொலை செய்ததாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்றாவது சந்தேக நபர் கொண்டையா ஒப்புக் கொண்டார். இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் ஒருவர் கடந்த 3ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கொலை தொடர்பில் இறுதி விசாரணை அறிக்கைகள் முடிவடையவில்லைஎன்றுபொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ற-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொபிட்டல் சொத்துகளை துஷ்பிரயோகம் செய்தார் மகிந்த!



கொழும்பு, ஒக்.5
இலங்கை மொபிட்டல் தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பணம் மற்றும் சொத்துக்களை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தமது அரசியல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

மொபிட்டல் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று பணிப்பாளர் ரஞ்ஜித் ரூபசிங்கவின் அதிகாரத்தை பயன்படுத்தியே குறித்த ஊழல் மோசடி இடம்பெற்றுள்ளது என்றும், குறித்த மோசடி தொடர்பான விரிவான விசாரணைகளைநிதிமோசடிவிசாரணைப் பிரிவினர்ஆரம்பித்துள்ளனர்என்றும் கூறப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மொபிட்டல் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனங்கள் பரப்புரை நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டதோடு, அதற்கென சுமார் 2.5 மில்லியன்ரூபாவுக்குமேல்செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் மொபிட்டல் நிறுவனஊழியர்களும்சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

மகிந்தவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்காக மொபிட்டல் நிறுவனத்தின் 15 மில்லியன் ரூபா செலவில் நாள்காட்டி அச்சிடப்பட்டுள்ளதோடு, நிறுவனத்தின் பரப்புரை மற்றும் அச்சிடல் உள்ளிட்ட நடவடிக்கைகள் கேள்விப்பத்திரமின்றி தமக்கு தேவையான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தற்போது இதுகுறித்து விரிவானவிசாரணைகளைஆரம்பித்துள்ள நிதி மோசடி விசாரணைப் பிரிவினர், விரைவில் ரஞ்ஜித் ரூபசிங்கவிடம் இகு குறித்து விசாரணை செய்யவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# முதியோர் தின நிகழ்வும் நடைபவனியும்

கிளிநொச்சி, ஒக்.5
வடமாகாண சமூகசேவைகள் திணைக்கள அனுசரணையுடன் சர்வதேச முதியோர் தின நிகழ்வு கிளி நொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நாளைக் காலை 8.30 மணி இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வானது நாளைக் காலை 8 மணிக்கு கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயத்திற்கு அண்மையிலிருந்து ஆரம்பமாகுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ற)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்மா மாணிக்கம்



கைதடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா மாணிக்கம் நேற்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடுவிலான் - வள்ளி தம்பதியினரின் அன்பு மகளும், மாணிக்கத்தின் அன்பு மனைவியும், சண்முகநாதனின் (டென்மார்க்) பாசமிகு தாயாரும், நந்தினியின் (டென்மார்க்) அன்பு மாமியாரும் காலஞ்சென்ற புருசோத்தமன், மற்றும் கபிலன் (பொலிஸ் உத்தியோகத்தர்), சஜிதா ஆகியோரின் பாசமிகு பெரியதாயாரும் ச.சினேகா, ச.தரணிகா, க.பர்சனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2015) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் கைதடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி கிழக்கிலுள்ள ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி வடக்கு, கைதடி.

தகவல் : குடும்பத்தினர்.

### வயிரவி மார்க்கண்டு



சாயுடை மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவி மார்க்கண்டு நேற்று (04.10.2015) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயிரவி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா பறுவதம் தம்பதியினரின் மருமகனும், சோதிமலரின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, வேலுப்பிள்ளை, செல்லம்மா, செல்லத்துரை, அப்புத்துரை மற்றும் ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரனும், லதா, ஆனந்தராசா, கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசலிங்கம், நந்தினி, புலேந்திரராசா ஆகியோரின் அன்பு மாமனும், பகலவன், கிஷானிகா, டெனிஷா, அனிஷா, நவீன், றீகன், மானுகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2015) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை கிழக்கு கொடிக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திர் கோயிலடி,
கோப்பாய் கிழக்கு.

தகவல் : குடும்பத்தினர்.

### திருமதி சந்திரமதி இளையவன்



ஆவரங்கால் மேற்கு, சர்வோதயா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரமதி இளையவன் 03.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னட்டி - சடச்சி தம்பதியினரின் அன்பு மகளும், பாலன் இளையவனின் அன்பு மனைவியும், பாலன் - பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்புவின் அன்புச் சகோதரியும், சிவஞானம், சதாசிவம், சந்திரன் (லண்டன்), பரமலிங்கம் (சுவிஸ்), அதிஷ்டலட்சுமி, காலஞ்சென்ற இராசம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் அழகம்மா, சறோஜாதேவி, றஜனாதேவி(லண்டன்), றஞ்சினிதேவி (சுவிஸ்), இரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியாரும், சசீதா, நந்தா, கஜிர்தா (கனடா), நஜீர்தா, கஸ்தூரி, கல்பனா, றாஜினி (ஜேர்மன்), றாகுலன், கீர்த்தனா, சசீலன் (லண்டன்), சங்ஜீர்ணா (லண்டன்), சார்னீஜன் (லண்டன்), பவித் (சுவிஸ்), பவீனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2015) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பி.ப. ஒரு மணியளவில் பூதவுடல் ஆவரங்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சர்வோதயா வீதி, ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தகவல் : குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சிவஞானம் கனகசபாபதி

(சட்டத்தரணி)



கொட்டடி ஆஸ்பத்திரிவீதியைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கனகசபாபதி 01.10.2015 காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவஞானம் தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி வேலுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் தயாளன், அரவிந்தன்,கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிஸ்ரீனின் மாமனாரும் ஆரியன்,லஸ்மன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான லீலாவதி -அல்பேட் சின்னையா, பத்மாவதி- ஸ்ரீபத்மநாதன் மற்றும் புனி(கனடா),ரவீந்திரன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை (06.10.2015) சிட்னியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

திருமதி. கனகசபாபதி
152, o Sullivan Road
Leumean NSW 2560 Australia
T.P. No. 006 1246 100 218

தகவல்: மருமக்கள்

### திருமதி செல்லம்மா திருஞானசம்பந்த மூர்த்தி



அராலி மேற்கைப் பிறப்பிடமாகவும், மூளாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா திருஞானசம்பந்த மூர்த்தி 03.10.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருஞானசம்பந்த மூர்த்தியின் அன்பு மனைவியும், முருகதாஸ், குகதாஸ், வேதவல்லி, ஜெயதாஸ், ஆனந்தவல்லி ஆகியோரின் பாசமிகு தாயாருன், புனிதவதி, தேமொழி, கருணானந்தன், தேவகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், கஜன், வாசுகி, மயூரன், ஜெயராம், பிரணவி, வக்சலா, திவாகரன், கிருபாகரன், லிங்க தாசன், சிறினிவாஸ், சுதர்சினி, சுபகர்ணி, அஷ்வினி, அருஸ் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2015) செவ்வாயக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்னை இல்லம்
மூளாய் கிழக்கு, சுழிபுரம்.

தகவல் : குடும்பத்தினர்.

### சபாபதி திருவம்பலம்



மிருசுவில் வடக்கு குருக்கள் மாவடியைப் பிறப்பிடமாகவும், அல்லாரை தெற்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி திருவம்பலம் 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுபாபதி - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான காசித்தம்பி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, தியாகராஜா, நல்லபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, தில்லைநாயகம், குஞ்சையா, சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சந்திரா (கல்வயல்), சிவராசா, சிவகுமார் (கிராம்புவில்) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், முருகையா, திருமதி (பிரதேச வைத்தியசாலை - வரணி), புஸ்பமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா, சௌமியா, ஜெயகரன், மேனகா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பவித்திரா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பவுசியா (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.10.2015) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கச்சாய் எறியால் பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்லாரை தெற்கு,
மீசாலை.

தகவல் - குடும்பத்தினர்.
0773717878, 0776843023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெனிவாத் தீர்மானத்தைத் தடுக்க உயிரை கொடுப்பாராம் பவித்திரா

கொழும்பு, ஒக்.5
இலங்கை தொடர்பான ஜெனிவா அறிக்கையின் பிரேரணைகளை தடுப்பதற்காக உயிரைக்கொடுத்தேனும் தடுப்பேன் எனமுன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் விசுவாசியும், நாடாளுமன்ற உறுப்பினருமான பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.
இரத்தினபுரியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
கிராமிய மட்டத்திலுள்ள சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களின் அபிலாசைகளுக்கேற்பவே எனது அரசியல் செயற்பாடுகள் அமைந்திருக்கும்.
எதிர்காலத்தில் நாங்கள் ஒன்றிணைந்து எதிர்க்கட்சியை சரியான வழியில் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம்.
அதேநேரம் அரசின் நல்ல விடயங்களுக்கு ஆதரவு வழங்குவதுடன், பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்களை எதிர்க்கவும் தயங்க மாட்டோம்.
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவுடன்கொண்டுவரப்பட்டுள்ளஜெனிவா அறிக்கையின் பிரேரணைகள் தொடர்பான செயற்பாடு நாட்டை அழிவுப் பாதைக்குள் தள்ளிவிடும்.
எனவே உயிரைக் கொடுத்தாவது அதனைத்தடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்வேன். - என்றார்.
இதேவேளை, இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமைமீறல்கள்மற்றும்போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கலப்பு நீதிமன்றத்தின் மூலம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என அண்மையில் ஜெனிவாவில் பிரேரணை ஒன்று ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (ற)

# முல்லை. இளைஞர்களுக்கு மின்னிணைப்புப் பயிற்சிகள்

## எஸ்.ரி.ஏ சொலிடரிட்டி பவுண்டேசன் அமைப்பால்

யாழ்ப்பாணம், ஒக்.5
எஸ்.ரி.ஏ சொலிடரிட்டி பவுண்டேசன் அமைப்பின் மூலம் சுவிஸ் நாட்டு பல்கலைகழக மாணவர்களால் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர்களுக்கான மூன்றுநாள் மின்னிணைப்பு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் எஸ்.ரி.ஏ சொலிடரிட்டி பவுண்டேசன் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட 6மாத கால மின்னிணைப்பு பயிற்சியை பெற்று கொள்ளும் 26 இளைஞர்களுக்கு பயிற்சியின் நிறைவில் சுவிஸ் நாட்டின் பல்கலைகழகத்தின் மின்னிணைப்பு கற்கையை மேற்கொள்ளும் சுவிஸ் நாட்டை சேர்ந்த 8 மாணவர்களால் நேற்றுமுன்தினம் முதல் மின்னிணைப்பு பற்றிய தேவையான மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. சுவிஸ் மாணவர்களால் வழங்கப்படும் குறித்த பயிற்சிகள் முல்லைத்தீவு இளைஞர்களுக்குமூன்றுநாள்கள்வழங்கப்பட்டுள்ளன.
இந்தப் பயிற்சிகள் முல்லைத்தீவு உடையார் கட்டு பகுதியில் உள்ள தொழிற் பயிற்சி நிலைய கட்டட தொகுதியில் மேற்கொள்ளப் பட்டது.
இப் பயிற்சிநிறைவின் போது சுவிசில் மின்னிணைப்பாளர் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவர்களால் முல்லைத்தீவு மாணவர்களுக்கான மின்னியலாளர் தொழில் சார் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.
அத்தோடு மின்னிணைப்பாளர் பயிற்சியை பெற்ற இளைஞர்கள் தொழிற் பயிற்சி நிறுவனத்தில் தங்களுடையகல்வியை தொடரவேண்டுமானால் அவர்களுக்கான நிதி உதவிகளும் குறித்தசுவிஸ்மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டஉள்ளதாக திட்ட பணிப்பாளர் திரு.வி. வாமதேவன் தெரிவித்தார்.
இவ் மின்னிணைப்பாளர் கற்கை நெறியானது கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சித்திரை மாதமளவில் மேற்கொள்ளப்பட்டதாகவும் இது இரண்டாவது தடவையாக மேற்கொள்ளவதாகவும் திட்ட பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ற-21)

### ஐ.நா. பரிந்துரை

என அந்தக் கட்சி எச்சரித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கப் பிரேரணை குறித்துக்கருத்துத்தெரிவித்த அந்தக் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க இவ்வாறு தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கையின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட அமெரிக்காவின்தீர்மானம், நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் இல்லை என சில கட்சிகள் தெரிவித்துள்ளன. இதனை ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ளாது.நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலான எந்த நீதித்துறையையும் ஜாதிக ஹெல உறுமய அனுமதிக்கப்போவதில்லை. என்று அவர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
ஐ.நா. தீர்மானம் கலப்பு நீதிமன்றம் அல்லது அதனை ஒத்த நீதிமன்ற அமைப்பை வலியுறுத்துகிறது. எனவே நாடாளுமன்றில் குறித்த தீர்மானம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். நாடாளுமன்றின் ஒப்புதல் பெறப்படாமல், அரசு தீர்மானத்தில் எதையும்செயற்படுத்த முடியாது. நாடாளுமன்றின் ஒப்புதல் இல்லாமல் நிறுவப்படும்எந்தநீதித்துறையையும் எம்மால் ஏற்க- ஆதரிக்கமுடியாது- என்றார்.
கலப்பு நீதிமன்றம் நிறுவுவதற்கு ஆதரவு கோரப்பட்டால் ஜாதிக ஹெல உறுமய ஆதரவு வழங்குமா என கேள்வி எழுப்பியமைக்கு பதிலளித்த அக்கட்சியின் பேச்சாளர், எந்த வகையிலான நீதிமன்ற அமைப்பொ அரசு முதலில் நாடாளுமன்றில் தீர்மானத்தை சமர்ப்பிக்கும் போது, அதன் வரைவை அவதானித்து முடிவு எடுபோம்-என்றார்.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அரசு இராஜதந்திரம், சர்வதேச சமூகத்தில் பின்னடைவைக் கண்டிருந்தது. எனினும் இப்போது சர்வதேசத்துடன் உறவுகளைப் பேண நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. எனவே இலங்கை இதனைசரியாகப் பயன்படுத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த சிறி வர்ணசிங்க குறிப்பிட்டார். (ற-வ)

### இலங்கைக்கு

ரணில் விக்ரமசிங்க ஜப்பானுக்கு சென்றுள்ளார். நேற்று நடைபெற்ற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில் இரண்டு பிரதமர்களும் கலந்து கொண்டிருந்தனர்.
அதைத் தொடர்ந்து பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபேயுக்கும் இடையில் உத்தியோகபூர்வசந்திப்பு இடம்பெற்றது.
இதன்போது, ஜப்பான் அரசும், தானும் இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவு வழங்குவோம் எனஜப்பான் பிரதமர் தெரிவித்துள்ளார் என ஜப்பானிய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இதேவேளை, நாளை செவ்வாய்க் கிழமை இரு நாட்டுப் பிரதமர்கள் மற்று முக் குழுவினருக்கிடையிலான இருதரப்பு பேச்சு நடைபெறும் என்றும் இதன் போது இரு நாடுகளுக் கிடையிலான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-வ)

### ஜப்பான்

தூதரகம் தெரிவித்துள்ளது.
இதேவேளை பல இருதரப்பு ஒப்பந்தங்களும் ரணிலின் ஜப்பான் பயணத்தின் போது கைச்சாத்திடப்படவுள்ளது. (ற-வ)

### இலங்கை அரசுக்கு

குறிப்பிட்டுள்ள உள்நாட்டுப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகள் இடம்பெற வேண்டும் என்ற பரிந்துரையையும் அவர் நிராகரித்துள்ளார்.
இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மற்றும்தற்போதைய குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
குறித்த தீர்மானத்தில் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்த உள்நாட்டு விசாரணை பொறிமுறையில், பொதுநலவாய மற்றும்வெளிநாட்டு நீதிபதிகள், வழக்கறிஞர்கள், விசாரணையாளர்கள் இடம்பெறுகின்றனர்.
இந்த தீர்மானித்தின் படி இலங்கை பாதுகாப்புப் பிரிவில் மனித உரிமைகளை மீறியதாக சந்தேகிக்கப்படுபவர்களை, நீதிமன்றத்தின் முன் நிறுத்த போதுமான சாட்சிகள் இல்லையாயின், அவர்களை நிர்வாக செயல்முறையின் கீழ் பணிநீக்கம் செய்ய முடியும். இவை குறித்த தீர்மானத்திலுள்ள சில எதிர்மறை நடவடிக்கைகள்.என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் நிகழ்ச்சி நிரலிலே செயற்படுவதாக பிரதமர் ரணில் குறிப்பிட்டுள்ளார்.
ஆனால் ஜெனிவாவில் மரண பொறியிலிருந்து நாடு மீட்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வீதிகளில் சுவரொட்டி வெளியிட்டுள்ளனர். இவற்றை பார்க்கும் போது தீர்மானத்தில் உள்ள வெளிநாட்டு நீதிபதிகள் கொண்ட உள்ளகப் பொறிமுறை விடயம் ஆச்சரியமாக இருக்கிறது.
இந்த தீர்மானம் விதிகளுக்கு நாட்டின் இயலாமையை சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது.
இலங்கை அரசு படையினரின் நலன்களில் முதலில் அக்கறை கொள்ள வேண்டும். - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
லிபியாவின் முன்னாள் ஜனாதிபதி கடாபி, எனது தோளில் கரம் போட்டுள்ளபடம்வெளியானமைஉண்மை தான். மேற்குலகநாடுகளிநெருக்கடி காரணமாக சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்க முன்வந்திருந்த கடனை நிறுத்தியது. அந்தக் காலப் பகுதியில் இறுதி போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் நிதி நெருக்கடி ஏற்பட்டது. அப்போது எனது தொலைபேசி அழைப்பை ஏற்று கடாபி 500 மில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாக வழங்கி ஒத்துழைத்தார். அவ்வாறு இல்லையெனின் போர் வெற்றிக்கு முன் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கும். - என்றும் மகிந்த ராஜபக்ச தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ற-வ)

### மரதன்

சுமார் 6 ஆயிரத்துக்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்துகொண்ட இந்த மரதன் ஓட்டப் போட்டியில் ஓடிய மகிந்த 5 கிலோமீற்றர் தூரத்தை 50 நிமிடங்களில் நிறைவு செய்துள்ளார்.
கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் இருந்து ஒருகொட வத்த சந்திவரையான 5 கிலோமீற்றர் தூரத்திற்கே மகிந்த ஓடியுள்ளார்.
குறித்த மரதன் ஓட்டப் போட்டியானது, நீர்கொழும்பு கடற்கரை பூங்கா அருகில் நிறைவடைந்தது. (ற)

### படகு இயந்திரம்

ஞானே உயிரிழந்தவராவார்.
குருநகர் கரையிலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுக் காலை 6.45 அளவில் இந்தப்பரிதாப சம்பவம் இடம்பெற்றது. அந்தச் சமயம் லேசான மழை பெய்து கொண்டிருந்தது.
குடாநாடு முழுவதும் நேற்றுமுன்தினம் இரவு பரவலாக மழை பெய்து கொண்டிருந்தது. நேற்றுக் காலை மீன்பிடிப்படகில் 4 பேர் இறால் பிடிப்பதற்குச்சென்றுள்ளனர். இறால் பிடித்துக் கொண்டு திரும்பிக் கொண்டிருந்தபோதே இந்தப் பரிதாபசம்பவம் இடம்பெற்றது. ஆழ்கடலுக்குச் சென்ற அவர்கள் இறால் பிடித்துவிட்டுக் கரையை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்தபோது இடியுடன் கூடிய மழை பெய்தது.
தொழிலுக்குச் சென்ற நால்வரும் கரைதிரும்பிக் கொண்டிருந்தபோது கனிஸ்ரனே படகின் இயந்திரத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார். அதன் போதே மின்னல் தாக்கியுள்ளது.
இதன் சீமா ... அவர் ... அடுத்த ... கனிஸ்ரன் கடலில் விழமுற்பட்டார். அவரை நாம் உடனே தாங்கிப் பிடித்துவிட்டோம். அதன்போதே அவரது தலை வெடித்து ரத்தம் பாய்ந்தது. வாய், காது வழியாகவும் ரத்தம் வெளியேறியது. அவரில் எந்த உணர்வும் இருக்கவில்லை. - என்று அவருடன் கூடச் சென்றவர்கள் கூறினார்கள்.
படகு இயந்திரமும் பழுதடைந்ததை அடுத்து வேறொரு படகு அந்த இடத்துக்கு அழைக்கப்பட்டது. உணர்வற்றுக் கிடந்த கனிஸ்ரனையும் தூக்கிக் கொண்டு அவர்கள் அந்தப் படகில் கரைதிரும்பியுள்ளனர். உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டமை பரிசோதனையில் தெரியவந்தது.
நீதிமன்ற உத்தரவுப்படி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். ஏனைய விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.
இத்தகைய சம்பவம் இங்கு மிக அரிதான விடயம். 2000 ஆம் ஆண்டும் அரியாலையில் இவ்வாறான மின்னல் தாக்கம் இடம்பெற்றது என்று கூறப்படுகிறது. தவிர இத்தகைய தாக்கத்தால் ஏற்கனவே 2 பேர் உயிரிழந்திருந்தனர் என்றும் கூறப்பட்டுள்ளது.
இடிமின்னலின் போது இரும்புப் பொருள்கள் மற்றும் இயந்திரங்களை இயக்குதல் உள்ளிட்ட விடயங்களிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடுமாறு வளிமண்டலவியல் திணைக்களத்தினர் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (ற-4,78,101)

### ஐ.நா. தீர்மானத்தா

லாளர் ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது தமக்குக் கிடைத்த பெரு வெற்றியென்று அரசு பெருமிதம் கொண்டுள்ளது. இதனால் நாட்டுக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என்றும் கூறப்படுகின்றது. ஆனால் மேற்படி தீர்மானம் பேராபத்தானது என்று மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச ஆகியோர் சுட்டிக்காட்டி வருகின்றனர். இவ்வாறு இருதரப்புமே மனித உரிமை விவகாரம் பற்றிய பிரச்சினையைதமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்திவருகின்றன. எந்தவொரு தரப்புமே தீர்மானத்தின் உண்மைநிலை பற்றி இதுவரை நாடு பற்றி சிந்தித்து விளக்கமளிக்கவில்லை. - என்று அவர் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் உள்ளக விடயமான மனித உரிமைகள் பற்றி ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கலந்துரையாடப்பட்டு அதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பாகும்.
இவ்வாறு நாட்டுக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசம் தலையிடுவதற்கு மகிந்த ஆட்சியின்போது வழி திறந்து கொடுக்கப்பட்டது. போருக்குப் பின்னரும் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டன. ஜனநாயகம் மதிக்கப்படவில்லை. மனித உரிமை விவகாரம் அரசியல் ஆயுதமாகக் கப்பட்டது. இந்நிலையில் தற்போது மகிந்த அணியினர் போலி காரணங்களைக் கூறிவருகின்றனர்.
போர் முடிவடைந்த பின்னர் அரசு செய்யவேண்டிய விடயங்களைச் செய்யவில்லை. அவற்றைச் செய்யுமாறு நாம் சுட்டிக்காட்டினோம். எமது கோரிக்கை குறித்து அரசு செவிசாய்க்கவில்லை. அதனால் தான் இன்று பிரச்சினை விஸ்வரூபமெடுத்துள்ளது.
அதேவேளை, அரசு கூறுவதுபோல் எமக்கு வெற்றி கிடைக்கவில்லை. நிறைவேறியுள்ள தீர்மானத்தால் நாட்டுக்கு ஆபத்திருக்கிறது. அதை நாம் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும். அந்தஅபாயத்தைப்புரிந்து கொண்டு அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.
எனவே, பிரச்சினைகளைமூடிமறைக்காது அரசு நேர்மையாக செயற்படவேண்டும். எந்தவொரு தரப்பையுமே ஏமாற்று வதற்கு முற்படக் கூடாது. நீதியை நிலைநாட்ட வேண்டும்.? என்றார். (ற-சி)

### சர்வதேச

தெரிவித்து, பிக்குகள் சங்கம் ஒன்று புத்தளத்தில் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.
புத்தளம் - கற்பிட்டி விகாரைக்கு முன்னால் நேற்று முதல் இந்த உணவுத் தவிர்ப்பு போராட்டம் இடம்பெறுகிறது. இதில் ஆறு பிக்குகள் பங்கேற்றுள்ளனர்.
சர்வதேச நீதிபதிகள் இந்த விசாரணைகளில் இணைத்துக் கொள்ளப்படுவது, இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ற-வ)

### பல்கலை.

வெளியிடப்படும் என்று பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.
இதனைத் தெரிந்து கொள்ள www.ugc.ac.lk என்ற இணையத்தளத்திற்குள் பிரவேசியுங்கள் அல்லது 1919க்கு அழைப்பை மேற்கொள்ளுங்கள் என்றும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ற-வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரகீத் கடத்தல் சம்பவம் குறித்து படை அதிகாரிகளிடம் விசாரணை

கொழும்பு, ஒக்.5
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்யப்பட்டது தொடர்பாக, இராணுவத்தைச் சேர்ந்த மேலும் மூன்று மேஜர் ஜெனரல் தர அதிகாரிகளிடம் விசாரணை நடத்தப்படவுள்ளது.
பிரகீத் எக்னெலிகொட காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரித்து வரும், பொலிஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இந்த தகவலை வெளியிட்டுள்ளனர். இவ்வாறு கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
இவர்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்ட பின்னர், இதுதொடர்பான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே, இராணுவப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் அருண வன்னியாராச்சியிடம் விசாரணை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
(ற-வ)

# நாமலுக்கு சொந்தமான நிறுவனம் பொலிஸாரால் திடீர் சோதனை

கொழும்பு, ஒக்.5
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு சொந்தமான நிறுவனமொன்றினை கடந்த வாரம் பொலிஸ் நிதி குற்றவியல் விசாரணை பிரிவினர் சோதனை செய்ததாக தகவல்கள் சண்டேலீடர் ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
நாமல்ராஜபக்சவினால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத பணப்பரிமாற்ற நடவடிக்கைகள் குறித்து மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் ஒரு பகுதியாகவே இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. நாமல் ராஜபக்சவின் ஆறு நிறுவனங்கள் குறித்து இடம்பெற்றுவரும் விசாரணைகளின் ஒரு பகுதியாகவும் இது இடம்பெற்றுள்ளது.
வெள்ளிக்கிழமை கவர்ஸ் கோர்ப்பரேட்சேர்விஸ் என்ற நாமல்ராஜபக்சவின் நிறுவனம் மீது விசாரணைகளை ஆரம்பித்துள்ள பொலிஸ் நிதி குற்றவியல் விசாரணை பிரிவினர் விரைவில் ஏனைய நிறுவனங்கள் குறித்தும் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.
குறிப்பிட்ட நிறுவனங்களிற்கான நிதி எவ்வாறு கிடைத்தது, இந்த நிறுவனங்கள் எவ்வாறு வருமானம் ஈட்டுகின்றன, அந்த வருமானத்திற்கு என்ன நடைபெறுகின்றது என்பது தொடர்பாகவே விசாரணைகள் இடம்பெறுகின்றன என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-வ)

# ஐ.நா. குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்வதற்குத் தயார்

## கருணா தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.5
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்த விசாரணைகளை எதிர்நோக்கத் தயார் என முன்னாள் பிரதி அமைச்சர் கருணா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில வார இதழான சண்டேலீடரில் வெளியாகியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் கடந்த மாதம் வெளியிடப்பட்ட விசாரணை அறிக்கையில் கருணாவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. சிறுவர்களை படையில் இணைத்துக் கொள்ளல் உள்ளிட்ட பல பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் அவருக்கு எதிராக சுமத்தப்பட்டிருந்தது.
இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் நிராகரித்துள்ள கருணா, இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:-
தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து பிளவடைந்த உடன் நாம் இந்தியாவிற்கு தப்பிச் சென்றோம். இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டு பிரதான அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டேன்.
எந்தவொரு துணை இராணுவக் குழுவினையும் நாம் உருவாக்கவில்லை. அத்துடன் எந்த குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை. கருணா குழு என ஐ.நா. விசாரணை அறிக்கையில் குற்றம் சுமத்தப்பட்ட போதிலும் எமக்கு அவ்வாறான ஓர் குழு பற்றி தெரியாது. விசாரணைகள் நடத்தப்பட்டால் அதனை எதிர் நோக்குவதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. விசாரணைகளை எதிர்நோக்கத் தயார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற-வ)

# இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிக்க தமிழக மீனவர்களுக்கு உரிமையுண்டு

## மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம்

கொழும்பு, ஒக்.5
இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமை தமிழக மீனவர்களுக்கு உள்ளது. இதுகுறித்து தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் வழக்கு தொடர்ந்துள்ளதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்
இதுதொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிய கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது,



இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்பட்ட மற்றொரு சம்பவம் குறித்து தங்களின் கவனத்துக்கு கொண்டு வருகிறேன். ஒக்ரோபர் முதலாம் திகதி நாகப்பட்டினம் மாவட்டத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 7 மீனவர்களை இலங்கைகடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவர்களது மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.
ஆயுதங்கள் எதுவும் இல்லாத அப்பாவி இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தி வருவது தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாரம்பரியமான பாக்கு நீரிணை கடற்பகுதிகளில் மீன் பிடிக்கும் அப்பாவி தமிழக மீனவர்களை மிரட்டும்நோக்கத்துடன் இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது அவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.
இலங்கை கடல் பகுதியில் மீன் பிடிக்கும் பாரம்பரிய உரிமை தமிழக மீனவர்களுக்கு உள்ளது. இதுகுறித்து தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் தனிப்பட்ட முறையில் வழக்கு தொடர்ந்துள்ளேன். இந்த வழக்கில் தமிழக அரசும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளது.
தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க இலங்கைக்கு தாரை வார்க்கப்பட்ட கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்து செய்யக் கோரியும் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன்.
இப்பிரச்சினையில் தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 7 தமிழக மீனவர்களை விடுவிக்கவும், அவர்களது படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுதவிர ஏற்கனவே இலங்கை சிறையில் உள்ள 28 மீனவர்கள், 31 படகுகளை விடுவிக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் – இவ்வாறு கடிதத்தில் ஜெயலலிதா கூறியுள்ளார்.
(ற-வ)

## சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர் தெரிவுக்கு 500 விண்ணப்பங்கள்

அரசியல் அமைப்பு சபையால் நியமிக்கப்படவுள்ள 10 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களுக்கு இதுவரை 500 க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.
இதில் தேர்தல் ஆணைக்குழு, பொதுச் சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவைகள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு, எல்லைநிர்ணய ஆணைக்குழு மற்றும்பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு ஆகிய சுயாதீன ஆணைக்குழுக்களே 19 ஆவதுதிருத்தச்சட்டத்துக்கு அமைவாக புதிதாக அமைக்கப்படவுள்ளன.
இந்த ஆணைக்குழுக்களுக்கு நியமிக்கப்படுபவர்கள் தொடர்பில் அரசியல் அமைப்புச் சபை எதிர் வரும் 9 ஆம் திகதி இறுதிசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ற-வ)

# ரவிராஜ் கொலையின் சந்தேகநபர் தடுப்பில்

## பிள்ளையானின் துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டது என கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி

கொழும்பு, ஒக்.5
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைது செய்து தடுத்து வைத்துள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல் வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் அதில் வெளியாகியுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
கடந்த 2006 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி முச்சக்கரவண்டியில் வந்தவர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இலக்காகி நடராஜா ரவிராஜ் கொல்லப்பட்டார். இதில் துப்பாக்கிச்சூடு நடத்திய நபரும், சந்தேக நபருக்கு போக்குவரத்து சேவை செய்த நபரும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரி விக்கப்படுகிறது.
கடற்படை உத்தியோ கத் தரான செனவி என்பவரும், பொலிஸ் கான்ஸ்டபிளான மானம்பேரி என்பவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.
செனவி என்ற நபரே இந்த தாக்குதலை நடத்தியதாக விசாரணைகள் மூலம் உறுதியாகியுள்ளது. கேணல் சாமி கருணாரட்னவினால் பிள்ளையானுக்கு வழங்கப்பட்ட ஆயுதத்தால், ரவிராஜ் கொலை செய்யப்பட்டுள்ளார். ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமல் போன சம்பவம் தொடர்பில் சாமி கருணாரட்ன கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக் கது.
பிள்ளையான் இந்த ஆயுதத்தை சரன் என்பவருக்கு வழங்கியதாகவும் அவர் ஆயுதத்தை செனவியிடம் ஒப்படைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. சரன் என்பவர் தற்போது சுவிட்சர்லாந்தில் வாழ்ந்து வருவதாகவும் இன்டர்போலின் உதவியுடன் அவரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் ஆங்கில ஊடகத்தின் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(ற-வ)

# அமெரிக்க தீர்மானம் குறித்த இராஜதந்திர நகர்வுகள்

## நியூயோர்க்கிலேயே நடந்தன

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அமெரிக்க தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யும் இலங்கை அரசின் இராஜதந்திர இணக்கங்கள் ஜெனிவாவினை விட நியூயோர்க்கிலேயே அதிகம் இடம் பெற்றுள்ளன.
இது தொடர்பில் கொழும்பு ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஐ.நா மனித உரிமைகள் சபையின் 30வது அமர்வு ஜெனிவாவில் இடம் பெற்ற போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் நியூயோர்க்கில் இருந்தனர். இவர்கள் இருவரும் ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருந்தனர். அத்துடன் மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்களில் பெரும்பாலானோரும் நியூயோர்க்கிலிருந்தனர். எனவே ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் வெளிநாட்டுத் தலைவர்களுடன் சந்தித்து பேச்சு நடத்தி இணக்கங்களை எட்டினர்.
இதனையடுத்து அந்த இணக்கங்கள் தொலைபேசி வாயிலாகவும், மின்னஞ்சல்கள் மூலமாகவும் ஜெனிவாவுக்கு பரிமாறிக்கொள்ளப்பட்டன.
இந்த நிலையிலேயே ஒரு கட்டத்தில் இலங்கையின் போர்க்குற்ற விசாரணைக்கு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்ற யோசனை இறுதியாக உள்ளக பொறிமுறையின் கீழ் பொதுநலவாய நாடுகள் மற்றும் வெளிநாடுகளின் நீதிபதிகள் அங்கம் வகிக்கும் சபையும் இணைந்து செயற்படும் யோசனையாக மாற்றம் பெற்றது.
இதேவேளை இலங்கையின் இந்த மாற்றத்தை அடுத்து யேமனில் பொது மக்கள் சேதம் தொடர்பில் நெதர்லாந்தின் யோசனை கொண்டுவரப்பட்டு, அமரிக்காவினால் இணை அனுசரணை வழங்கப்பட்ட சர்வதேச விசாரணைப்பொறிமுறையும் இறுதியில் கைவிடப்பட்டது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-வ)

# மைத்திரிக்கு வாழ்த்து தெரிவித்த மகிந்த

கொழும்பு, ஒக்.5
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் செல்ல முன்னர், அவருக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வாழ்த்துத் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.
ஜனாதிபதி நியூயோர்க் புறப்படுவதற்கு சுமார் ஒரு மணிநேரம் முன்னதாக, அவருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது. மறுமுனையில் இருந்து கேட்ட மகிந்தவின் குரல் அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.
நாட்டின் சார்பாக, பிரமாண்டமான பணியை முன்னெடுத்துச் செல்லும், ஜனாதிபதிக்கு மகிந்தராஜபக்ச அதன் போது வாழ்த்துக் கூறினார். அதன் பின்னர், அவர், எமிரேட்ஸ் விமானம் மூலம் நியூயோர்க் புறப்பட்டுச் சென்றார் என்றும் அந்த செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னிங்ஸ் வித்தியாசத்தில் ஸ்கந்தாவிடம் வீழ்ந்தது ஸ்ரான்லி



தனுஷன்

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம் 13வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவினருக்கிடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரில் (டெஸ்ட்) நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி, ஸ்ரான்லிக் கல்லூரி அணியை இன்னிங்ஸ் மற்றும் 138 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி சகல இலக்குகளையும் இழந்து 27 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. அதிகபட்சமாக விதுசன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் றெக்சன், கஜதீபன் இருவரும் தலா 5 இலக்குகளை வீழ்த்தினர்.



றெக்சன்

முதலவது இன்னிங்சுக்காக பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கத்தவரோதயக் கல்லூரி அணி 189–5 என்ற நிலையில் இருந்த பொழுது ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. அதிகபட்சமாக றெக்சன் ஆட்டமிழக்காமல் 53 ஓட்டங்களையும், தனுஷன் 50 ஓட்டங்களையும், விதுஷன் 38, ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரான்லிக் கல்லூரி அணி சார்பில் தனுஷன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லிக் கல்லூரி அணி 14 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பிரிந்தன் 4 இலக்குகளையும், கஜதீபன் 2 இலக்குகளையும், றெக்சன், கபிலதாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும், வீழ்த்தினர். (ம–23)

# தேசிய எறிபந்தில் வடக்குக்கு முதலாவது பதக்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சாதனை



மாங்குளம், ஒக். 5

தேசிய மட்ட எறிபந்தாட்டத்தில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றியதுடன் தேசியமட்ட எறிபந்தாட்ட வரலாற்றில் வடமாகாணத்துக்கு கிடைத்த முதலாவது பதக்கம் என்ற சாதனையையும் நிலைநாட்டியுள்ளது.

குறித்த தொடரின் மூன்றாம் இடத்துக்கான (வெண்கலப்பதக்கத்துக்கான) ஆட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கண்டி நுகேவெல மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இதில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியுடன் மட்டக்களப்பு அலிகார் தேசிய பாடசாலை பலப்பரீட்சை நடத்தியது. முதல் செற்றில் மட்டக்களப்பு அலிகார் அணியின் ஆட்டம் அபாரமாக அமைய அந்த செற் 25:19 என்ற அடிப்படையில் அலிகாருக்குச் சாதகமாக எழுதப்பட்டது. இரண்டாவது செற்றில் நிலைமை மாறியது. யூனியன் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பழிதீர்த்து செற்கணக்கை 1:1 என சமன் செய்தது. இதனால் வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய யூனியன் 25:22 புள்ளிகளில் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது. தேசிய மட்ட எறிபந்தாட்டத்தில் வடமாகாணம் சார்பாக கிடைத்த முதல் பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (ம–422)

# சம்பியனானது மானிப்பாய் மகளிர் மாகாண மட்ட உதைபந்தாட்டத்தில்



மாங்குளம், ஒக். 5

அடுத்த வருடம் 15வயதுக்கு உட்பட்ட அணிகளில் இடம் பிடித்து சிறந்த பெறுபேறை வெளிப்படுத்தும் விதமாக வீராங்கனைகளைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான அணிகளுக் கிடையில் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணி சம்பியனா கியது.

கடந்த புதன்கிழமை கனகரத்தினம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து சென்.ஜேம்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. ஆட்டத்தின் பதின்ம நிமிடங்களை எட்டுவதற்கு முன்னால் சென்.ஜேம்ஸ் முதல் கோலை விளாச பழிதீர்த்து முடித்தது மானிப்பாய் மகளிர் அணி. வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. 1:1என்று முடிந்தது முதல்பாதி.

சமவாய்ப்புக்களுடன் ஆரம்பமானது இரண்டாவது பாதி. மானிப்பாயின் வீராங்கனைகளான லாவண்யா மூன்றாவது நிமிடத்திலும் கிரிசிகா 5ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களை விளாச நிலைகுலைந்தது சென்.ஜேம்ஸ். மேலதிக கோல்கள் எவையும் பதிவாகவில்லை. முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் கிண்ணத்தைக் கைப்பற்றியது மானிப்பாய் மகளிர் கல்லூரி.

கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி நாவாந்துறை றோ.க. த.க. பாட்சாலை அணியை 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை தனதாக்கியது. (ம–422)

## கில்லறி, கிரீன் பீல்ட் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 5

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமீபகாலமாக இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு மன்னார் நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் சாவற்கட்டு கில்லறி அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் சாவற்கட்டு கில்லறி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்ட மொன்றில் கிறின் பீல்ட் அணியை எதிர்த்து தாழ்வுப்பாடு சென்.அன் ரனிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் கிறின்பீல்ட் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

## கலைமதிக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 5

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் துணைவி நியூஸ்ரார் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதிக்கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம–23)

# வானவில் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

அராலி வானவில் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் கடந்த புதன்கிழமை, வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் சென்.தோமஸ் யுத் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அணி மோதிக் கொண்டது. இதில் மாதகல் சென்.தோமஸ் யுத் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் அணியை எதிர்த்து தாவடி காளி அம்பாள் அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளி அம்பாள் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி ஏ.எல். 'பி' அணியை எதிர்த்து அராலி கலைவாணி அணி மோதிக் கொண்டது. இதில் அராலி ஏ.எல். 'பி' அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி எ.எல் 'ஏ' அணியை எதிர்த்து அராலி சில்வஸ்ரரார் 'பி' அணி மோதிக் கொண்டது. இதில் அராலி 'ஏ' அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து துணைவி ஸ்ரரார் அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென்.லூட்ஸ் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து நாமகள் அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் றெட்றேஞ்சர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

## ஈகிள்ஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 5

வவுனியா லீக்கின் முதற் தர அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் பண்டாரவன்னியன் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து ஈகிள்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஈகிள்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**பண்டார வன்னியன் கிண்ணத் தொடர்**

யாழ்ப்பாணம், ஒக். 5

வவுனியா லீக்கின் முதற்தர அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் பண்டாரவன்னியன் கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்த் தொடரில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து ஈஸ்வரன் அணி மோதவுள்ளது.

**ஏ.எல். வி.கழகத் தொடர்**

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

**மைக்கல் வி.கழகத் தொடர்**

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி பொம்மர்ஸ் அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் அணி மோதவுள்ளது.(ம-422)




# யாழ். இந்துவிடம் வீழ்ந்தது கொக்குவில் இந்து

## யாழ்.மாவட்ட பாடசாலைகளின் ரி-20 தொடரில்

யாழ். மாவட்ட பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கத்தால் 19வயதுக் குட்டபட்ட அணிகளுக்கிடையே நடத்தப்பட்டுவரும் ரி-20 தொடரில் கொக்குவில் இந்துக்கல்லூரியை 6 இலக்குகளால் வீழ்த்தியது யாழ். இந்துக்கல்லூரி.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனுசன் 36 ஓட்டங்களையும், கீர்தனன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யாழ். இந்துக் கல்லூரி அணி சார்பில் எஸ்.துவாரகன், சந்துரு இருவரும் தலா 2 இலக்குகளையும் எம்.துவாரகன், சிவலக்சன், பிரகலாதன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

120 பந்துகளில் 133 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற எட்டக்கூடிய இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 18.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்து, 6 இலக்குகளால் வெற்றியீட்டியது. அதிகபட்சமாக கஜனந் 59 ஓட்டங்களையும், துவாரகன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், ஜோய் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 13 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கொக்குவில் இந்துக்கல்லூரி சார்பில் சஜீவன், டிருக்சன் இருவரும் தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். (ம-23)



தேசியமட்ட 19வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு விகாரமாதேவி பூங்கா வீதியில் நடைபெற்றது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த என்.விதுசனா வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார். (ம-422-86)



# வீறுகொண்டது விண்மீன் வீழ்ந்தது யங்கம்பன்ஸ்

மாங்குளம், ஒக். 5

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் அழைக்கப்பட்ட யாழ். மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ் அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்கு முன்னேறியது பலாலி விண்மீன் அணி.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்தது தொடக்கம் முதல் பத்து நிமிடங்கள் வரை யங்கம்பன்ஸ் அணியின் ஆதிக்கமே மைதானத்தில் நிலைபெற்றிருந்தது. சுதாகரித்துக் கொண்டு தனது ஆட்டத்தை ஆரம்பித்தது விண்மீன். முயற்சியின் பயனாக முதல் கோல் விண்மீன் அணியின் பெயரிலேயே பதியப்பட்டது. அடுத்த ஐந்து நிமிடங்களிலேயே விண்மீனின் சார்பாக மேலும் இரு கோல்கள் பதிவாகி

**அடுத்த ஐந்து நிமிடங்களிலேயே விண்மீனின் சார்பாக மேலும் இரு கோல்கள் பதிவாகி அந்த அணியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தியது. பழிதீர்க்க முடியவில்லை யங்கம்பன்ஸால் 3:0 என்று போட்டி முடிவடைந்தது முதல் பாதி.**

அந்த அணியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தியது. பழிதீர்க்க முடியவில்லை யங்கம்பன்ஸால் 3:0 என்று போட்டி முடிவடைந்தது முதல் பாதி. திரில் மாற்றங்கள் ஏதும் இரண்டாவது பாதியில் இடம்பெறவில்லை.

இருப்பினும் 8ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் சார்பாக முதல் கோல் பதிவானது. அதுவே அந்த அணியின் இறுதிக் கோலும் கூட. அதற்கும் பதிலடி கொடுத்தது விண்மீன். வேறெந்த கோல்களும் பதியப்படாத நிலை யில் 4:1 என்ற கோல் கணக்கில் விண்மீன் அணி வெற்றிபெற்றது. (ம-422)



மாகாண மட்ட போட்டிகளில் தேவிபுரம் அ.த.க.பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்து தேசியத்துக்கு தெரிவான மாணவர்களை குறித்த பாடசாலை நிர்வாகம் விழா எடுத்துக் கௌரவித்துள்ளது. பாடசாலையின் அதிபர் சற்குணசீலனின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன் கலந்து கொண்டார். (ம)

# ஐக்கியத்தை வீழ்த்தியது கிறின் பீல்ட்

யாழ்ப்பாணம், ஒக். 5

மன்னார் உதைபந்தாட்ட லீக்கினால் அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் லீக் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சமீபகாலமாக இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு விடத்தல்தீவு பொது மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் விடத்தல்தீவு ஐக்கிய அணியை எதிர்த்து மன்னார் சின்னக்கடை கிறின் பீல்ட் அணி மோதிக் கொண்டது.

இதில் [illegible] என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கட்டாயத்தில் களமிறங்குகிறது இந்தியா

இந்தியா–தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி–20 தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று இலங்கை நேரப்படி இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்ற காரணத்தினால் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இந்தியா. மாறாக இன்றைய ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் தொடர் தென்னாபிரிக்காவிடம் சென்றுவிடும். (ம)

# வீழ்ந்தது பல்கலை அணி
## கிண்ணம் வென்றது கே.ஸி.ஸி.ஸி.

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.பல்கலைக்கழகவிளையாட்டு அவையும் உடற்கல்வி அலகும் இணைந்து நடத்திய அழைக்கப்பட்ட கழகங்கள், பாடசாலைகளின் அணிகளுக்கிடையிலான கரம் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்.பல்கலைக் கழக அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது கே.ஸி.ஸி.ஸி அணி.

நேற்று யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் இடம்பெற்ற ஐந்து செற்களைக் (மூன்று ஒற்றையர், இரண்டு இரட்டையர்) கொண்ட இந்த இறுதியாட்டத்தில் முதலாவது செற்றை 27:11 என்ற அடிப்படையில் கே.ஸி.ஸி.ஸி.யைப் பிரதிநிதித்துவம் செய்த துசிகாவும் இரண்டாவது செற்றை 25:8 என்ற அடிப்படையில் கே.சி.சி.சி.யைப் பிரதிநிதித்துவம் செய்த துசாயினியும் மூன்றாவது செற்றை 27 :1 என்ற அடிப்படையில் கே.சி.சி.சி.யைப் பிரதிநிதித்துவம் செய்த டிசாந்தியும் கைப்பற்ற இரட்டையர் ஆட்டங்களுக்குவேலை இல்லாமல் கிண்ணத்தைக் கைப்பற்றியது கே.ஸி.ஸி.ஸி. (ம–23)



# சென்.ஜோன்ஸை வீழ்த்தி சம்பியனானது பல்கலை

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்.பல்கலைக்கழகவிளையாட்டு அவையும் உடற்கல்வி அலகும் இணைந்துநடத்தியஅழைக்கப்பட்ட கழகங்கள், பாடசாலைகளின் அணிகளுக்கிடையிலான கரம் தொடரில் ஆண்கள் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது யாழ்.பல்கலைக் கழக அணி.

நேற்று யாழ், பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் இடம்பெற்ற ஐந்து செற்களைக் (மூன்று ஒற்றையர், இரண்டு இரட்டையர்) கொண்ட இந்த இறுதியாட்டத்தில் முதலாவது செற்றை 28:8 என சென்ஜோன்ஸிற்கு கைப்பற்றிக் கொடுத்தார் மதுசன். இரண்டாவது செற்றை அன்ரனிஸ் 25:7 என்ற அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுக்க செற்கணக்கு சமனானது. மூன்றாவது செற்றை சென்.ஜோனைப் பிரதிநிதித்துவம் செய்த அபினாஸ் 25:15 எனக் கைப்பற்ற மீண்டும் ஆதிக்கம் செலுத்தியது சென்.ஜோன்ஸ்.

நான்காவது செற்றை (முதலாவது இரட்டையர் ஆட்டம்) யாழ். பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த அன்ரனிஸ், கஜன் இணை 25:7 எனக் கைப்பற்ற இறுதி செற்றில் (இரண்டாவது இரட்டையர் ஆட்டம்) வெற்றிதோல்வி நிர்ணயமாகும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவம் செய்த இரான், கபில் இணை 14:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இறுதி செற்றை கைப்பற்ற முடிவில் 3:2 என்ற செற்கணக்கில் சம்பியன் ஆனது. யாழ். பல்கலை. (ம–23)

அதிபர் சேவை
தரம் - 3
போட்டிப்பரீட்சை
விசேட கருத்தரங்கு
யாழ்ப்பாணத்தில்
திங்கள்முதல் வெள்ளிவரை பி.ப 4.00 தொடக்கம் 7.00 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவில் (யாழ் ஆஸ்பத்திரி வீதி கொமர்ஷல் வங்கி அருகில்)
T.P - 076 688 3394
வவுனியாவில்
CBA கல்வி நிலையத்தில் புதன், வியாழன், வெள்ளி பி.ப 3.00 - 7.00 மணிவரை
T.P - 077 321 1233

# எரங்க தொடர்ந்தும் காயத்தால் அவதி தீவுகளுக்கு எதிரான தொடரிலும் இல்லை

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த எரங்க காயத்தில் இருந்து குணமடையாத காரணத்தினால் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சமிந்த எரங்க இலங்கை அணியில் கடந்த ஜனவரி மாதம் முதல் இடம்பெறவில்லை. அவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் அவருக்கு மீண்டும் முதுகுப் பகுதியில் காயம் ஏற்பட்டுள்ளதாகவும், அதனால் அவர் மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான தொடரிலும் விளையாட மாட்டார் என்று இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. (ம)

# சானியா - கிங்கிஸ் கிண்ண வேட்டை

சீனாவில் நடைபெற்றுவந்த ரென்னிஸ் தொடரின் பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா– கிங்கிஸ் இணை கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

நேற்று நடைபெற்ற இந்த இறுதி ஆட்டத்தில், ஈரானின் முன்னணி வீராங்கனைகளான கேமலியா பெகு, மோனிகர நிகுலஸ்கூ இணையை சானியா – கிங்கிஸ் இணை எதிர்கொண்டது. இதில், 6–2, 6–3 என்ற நேர் செற் கணக்கில் சானியா – கிங்கிஸ் இணை வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. நடப்பு வருடத்தில் மட்டும் சானியா – கிங்கிஸ் வென்றுள்ள 7ஆவது கிண்ணம் இதுவாகும். இவற்றுள் விம்பிள்டன், அமெரிக்க கிண்ணங்களும் அடங்குகின்றன. (ம)





இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர் டால்மியா சாவடைந்ததால் அவரது இடத்துக்கு ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் மனோகர். (ம)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L , O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், இணைய முடியும்.
எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.10.2015 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வார நாள் (திங்கள், புதன்) பிரிவுகள் ஆரம்பம் 12.10.2015
1. காலை 8.00–10.00 2. காலை 10.00–12.00
10.10.2015 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு சான்றிதழ் மற்றும் அனுமதிக்கட்டணம் என்பன இலவசம்!
SAAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். கொழகாமம் வீதி, நெல்லியடி.
021 320 3313
077 621 4567

STUDY VISA
உங்கள் கல்வித் தகைமைகளை
,சர்வதேச அங்கீகாரத்துடன்
சர்வதேச பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்க......
"நம்பிக்கை, உத்தரவாதம்"
இன்றே இலவச ஆலோசனைகளுக்கு
UK - Newzealand - Australia - Singapore - Malaysia - Russia - India.
நேரடி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி
100இற்கு மேற்பட்ட பாடநெறிகள்
100% இலவச ஆலோசனைகள்
தங்குமிடம் விசா சேவைகள் ஒழுங்குபடுத்தப்படும்.
SIO International Study Visa Consultant
80/37, Kasthuriyar road, Jaffna.
Hot line- 0722364651, 0212217865.
Email- Edusio.lk@gmail.com
(10.15)

# உடுவில் மகளிரை வீழ்த்தியது கொக்குவில் இந்துக் கல்லூரி

வலி வடக்கு, ஒக். 5

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப்பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக்கல்லூரியினால் யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் கூடைப் பந்தாட்டத் தொடர்களில் 18 வயது பெண்கள் பிரிவு ஆட்டமொன்றில் உடுவில் மகளிர் கல்லூரியை வீழ்த்தியுள்ளது கொக்குவில் இந்துக்கல்லூரி.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற நான்கு சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் சுற்றை உடுவில் மகளிர் கல்லூரி 10:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாம் சுற்றை 14:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது கொக்குவில் இந்து. மூன்றாம் சுற்றிலும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆதிக்கம் நீடித்திருந்தது. கொக்குவில் இந்து மூன்றாவது சுற்றை 20:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. நான்காவதும் இறுதியானதுமான சுற்றை 17:10 புள்ளிகளின் அடிப்படையில் உடுவில் மகளிர் வெற்றி பெற்றது. இரு அணிகளும் தலா இரண்டு செற்களைக் கைப்பற்றியிருந்தாலும் 46:42 என்ற மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது கொக்குவில் இந்து. (ம–86)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 05.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.